# எலிஜா

ரஷிய நவீனம்

(மூல ஆசிரியர் : துர்க்கனேவ்)

மொழி ஆசிரியன் :
“ அபயன் ”

முன்னணிப் பதிப்பகம்
சென்னை-1.

விற்பனை உரிமை:
முத்தமிழ் நிலையம்
77, வரதா முத்தியப்பன் தெரு
சென்னை 1



விலை: ஒரு ரூபாய்.

முதற் பதிப்பு அக்டோபர் 1952
முழு உரிமை: முன்னணிப் பதிப்பகம் சென்னை-1.
அச்சிட்டது: ஸ்ரீ பத்மாவதி பிரஸ் சென்னை 1.

# பதிப்புரை

ரஷிய நவீனம் என்ருல் யாரும் பயப்பட வேண்டியதில்லை — ரஷிய நாட்டு ஆசிரியர், துர்க்க னேவ், காதலையும், தேசபக்தி யையும் ஒன்ருகப் பின்னி, வாழ்க் கையில் எங்ஙனம் இவ்விரண்டு உன்னத நோக்கங்களையும் நிறை வேற்றலாம் என்பதை எலினு என்னும் பெண்மணி மூலமாக வும், இன்ஸரோவ் என்ற வாலி பன் மூலமாகவும், மிக்க அழகாக எடுத்துக் காட்டுகின்ருர். இன் னும் இதில் வரும் மற்ருெரு கதா பாத்திரத்தையும் தன் நண்பனுக் காகத் தான் காதலித்த நங்கை யை ஒப்படைக்கும் தியாகத்தை யும் ஆசிரியர் உயர்ந்த நாகரிகப் பண்பாட்டுடன் விளக்குகின்ருர். இவை, தமிழர் பண்பாட்டுக்கு ஒத்தவையா யிருந்ததால், இந் நவீனத்தை நாங்களும் மகிழ்ச்சி யுடன் வெளியிட முன் வந்தோம்.

சென்னை
1-10-52

இங்ஙனம்
மே. ச. பரதன்
முன்னணிப் பதிப்பகம்

(1) ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் பெர்ஸனேவ்:—கதா நாயகன் இன்ஸரோவின் நண்பன்; நண்பனுக்காகத் தான் காதலித்த கதாநாயகி எலினுவைத் தியாகம் செய்தவன்.

(2) பேவல் யாகோவ்லிட்ச் ஷுபின்:—பெர்ஸனேவின் நண்பனும் சிற்பியுமாவான். எலினுவின் தாயார் அன்னுவாவஸிலிவ்னுவின் தூர பந்து.

(3) நிகோலே ஆர்ட்டமெய்விட்ச்:—கதாநாயகி எலினுவின் தகப்பனுர்.

(4) அன்னுவாஸிலிவ்னு:—நிகோலே ஆர்ட்டமெய்விட்ச்சின் மனைவியும், கதாநாயகி எலினுவின் தாயாருமாவாள்.

(5) இன்ஸரோவ்:—பல்கேரிய நாட்டான்; அத்தேசத்தின் சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட தேசபக்தன்; எலினுவின் காதலைப் பெற்று, அவளை மனைவியாக அடைந்த கதாநாயகன்.

(6) எலினு:—இன்ஸரோவின் காதலியும் மனைவியுமான கதாநாயகி.

(7) அகஸ்டினு கிறிஸ்டியனேவனு:—எலினுவின் தகப்பனுருக்கு ஆசை நாயகி; அவள் ஒரு விதவை.

(8) ஸோயா நிகிட்சினுமுல்லர்:—'ஸோ' என்று சுருக்கப் பெயரில் அழைக்கப்படும் பெண். இவள் ரஷ்ய ஜர்மன் கலப்பில் பிறந்தவள்; எலினுவுக்குத் தோழியாக நியமிக்கப்பட்டவள்.

(9) காட்யா:—எலினுவின் சிநேகிதை; ஒரு பிச்சைக்காரப் பெண்; ஆனுலும், எலினுவுக்கு உணர்ச்சியும் உள்ளப் பரவசமும் உண்டாக்கும் சொற்களைப் பேசுபவள்.

(10) குர்னடோவ்ஸ்கி:—எலினுவை இவருக்கு மணமுடித்துவைக்க வேண்டுமென்று, எலினுவின் பெற்ருேரால் விரும்பப்பட்டவன்.

(11) உவார் ஐவனேவிட்ச் ஸ்டாஹோ:—எலினுவின் தகப்பனுருக்கு ஒன்றுவிட்ட சகோதரன்.

(12) ரெண்டிட்ஸ்:—இன்ஸரோவைப் போலவே, நாட்டுக் குழைக்கும் தேசபக்தன்; எலினுவின் கணவன் இறந்த பின், இறந்த சடலத்தையும் எலினுவையும் இன்ஸரோவின் நாட்டுக்குக் கடத்திக் கொண்டு போகும் தீரன்.

ஆசிரியர் வரலாறு:—

# ஐவான் துர்க்கனேவ்

ஐவான் துர்க்கனேவ், சென்ற நூற்றாண்டில் மிகப் பிர பலம் வாய்ந்திருந்த ரஷ்ய, ஐரோப்பிய இலக்கிய மேதை களுள் தலை சிறந்தவர் என்று அனைவராலும் ஏகமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டவர்.

"ஆங்கில இலக்கிய வல்லுநர்களில் சிறந்தவரான பைரன், ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு எவ்வளவு ஆக்க மளித்தாரோ அவ்வளவுக்கு துர்க்கனேவ் ரஷ்ய இலக்கியத் துக்குச் செய்துள்ளார்," என்று ஆங்கில இலக்கிய விமர் சகர்களே வர்ணித்துள்ளனர். ரஷ்ய இலக்கிய மேதா விலாசம் மகோன்னதமானது என்பதை முதன்முதலில் ரஷ்யாவுக்கு மட்டுமின்றி, ஐரோப்பா முழுமைக்கும் எடுத் துக் காட்டியவர் துர்க்கனேவ்தான். அவருடைய எழுத் துக்கு ஐரோப்பா முழுமையிலும் அமோக மதிப்பும் ஆதர வும் அக் காலத்தில் ஏற்பட்டதில் வியப்பில்லை. 'மாடேம் பொவாரி'யின் கர்த்தா கஸ்டாவ் பிளாபர்ட் துர்க்கனேவின் மேதையைக் கண்டு பிரமித்தார். ஜார்ஜ்சாண்ட், துர்க்க னேவைத் தன் குருஸ்தானத்தில் வைத்துப் போற்றினார், டி ரெயின், மகாமேதை சோபோகிள்ஸ்க்குப் பிறகு துர்க்க னேவ் தான் இலக்கியத்தில் அந்த ஸ்தானத்தைப் பெறக் கூடியவர் என்று சிலாகித்துப் பேசினார். ஐரோப்பா கண் டம் முழுமையும் ஐவான் துர்க்கனேவை ஒரு மனதாகக் கொண்டாடியது.

துர்க்கனேவ் எழுத்துத்திறன் மூலம் அவருடைய சக்தியை மட்டும் அல்ல, ரஷ்யாவின் சக்தியையும் ஐரோப்பா அறிய முடிந்தது. இயற்கைக் கொத்த சில

வாழ்வும், சிறந்த பண்பாடும் கொண்ட ரஷ்யர்களின் நல்ல தன்மையையும், திறமையையும் துர்க்கனேவின் இலக்கிய வெளியீடுகள் மூலம் ஐரோப்பா தெரிந்து கொண்டது.

1816-ம் ஆண்டில், ரஷ்ய நாட்டிலே, ஒரு நல்ல குடும்பத்தில் துர்க்கனேவ், பிறந்தார். அந்தக் குடும்பத்தில் எழுத்து வன்மை வாய்ந்த அறிஞர்களுக்குக் குறைவில்லை. இலக்கியத் தொண்டில் அவர்கள் அச்சமின்றி, கலக்கமின்றி எதையும் சொல்லக் கூடியவர்கள் என்பது ஏற்கெனவே பிரசித்தமான விஷயம். 1843-ல் தான் துர்க்கனேவ் எழுத்துக் கலையில் ஈடுபட்டார். ஆனால் அவர் ஒரு கதைஞராக இன்றி, முதலில் கவிஞராகவே இலக்கிய உலகில் நுழைந்தார்! என்றாலும், நாலே வருஷங்களில் அவர் கவிதை எழுதுவதை நிறுத்திவிட்டு கதை, கட்டுரை எழுதும் பணியில் ஈடுபட்டார். 1847-லும், 1852-லும் அவரால் எழுதப்பட்ட இருநூல்கள் வெளிவந்தன.

அக்கால ரஷ்ய அரசாங்கம், அறிஞர் புஷ்கினை எத்தனையோ கெடுபிடி செய்ததைப்போல, துர்க்கனேவையும் செய்யாமல் இல்லை. நாளுக்குநாள் புகழ்ப்பாதையில் முன்னேறி வந்த துர்க்கனேவ், 1862-ல் தமது 'தந்தையரும், மைந்தரும்' என்ற நூலை வெளியிட்டபோதுதான், அன்றைய ரஷ்யப் புரட்சி நிலையில் மட்டும் அல்ல, அவருடைய வாழ்க்கை நிலையிலும் விசித்திரமான சில மாறுதல்களை உண்டுபண்ணிவிட்டன. ஏனென்றால் அந்த நாவலின் கதாநாயகன் புரட்சிக்காரனோ அல்லது தீவிர தேசபக்தனோ அல்ல. எதிலுமே நம்பிக்கையோ, பற்றோ கொள்ளாத ஒரு விசித்திரப் பிராணியாக உருவகப் படுத்தப்பட்டவன்.

புரட்சிக் கனல் அன்று ரஷ்யா பூராவும் பரவியிருந்த காலையில், இம்மாதிரி ஒரு நாவல் வெளி வந்ததென்றால் சமுதாயத்திலே ஒரு கிளர்ச்சி ஏற்படாமலிருக்குமா?

தவிரவும் ரஷ்ய இலக்கியத்தில் மறுமலர்ச்சி அதிவேகமாகத் தலையெடுத்தது. டால்ஸ்டாய், டாஸ்டாவ்ஸ்கி

கார்க்கி போன்ற நவ இலக்கிய மேதைகள் புரட்சி வேகம் கண்டுள்ள ரஷ்ய மக்களின் மனம் கவரும் வண்ணம் பிரமாத கதைகளை, கட்டுரைகளை, நாடகங்களை, நாவல்களை முற்றிலும் புதிய தோரணையில் எழுதி, புது வாழ்வை நாடிய மக்களைக் கவர்ந்தனர்; உற்சாகப்படுத்தினர். தங்களுடைய திறமையால் மக்கள் வாழ்விலும் மலர்ச்சி ஏற்படச் செய்தனர்.

உரிமை பெற்ற வாழ்வையும், உண்மையான சுகத்தையும், இவற்றால் உண்டாகும் மகிழ்வையும் அளிக்கும் ஆட்சி முறையை வேண்டித் தவித்த ரஷ்ய மக்களுக்கு துர்க்கனேவின் இலக்கிய மேதையை உன்னிப்பாகக் கவனிப்பதைக் காட்டிலும், தங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் இலக்கியங்களில் அதிகக் கவனம் சென்றதில் வியப்பில்லை.

ஆயினும், அதற்குப் பின்னரும் சரி, இப்போதும் சரி, ரஷ்யாவில் துர்க்கனேவின் இலக்கியத் திறனைப் போற்றாதார் கிடையாது ஐரோப்பா, துர்க்கனேவைப் பாராட்டுமளவுக்கு இதர ரஷ்ய அறிஞர்களைப் பாராட்ட விரும்பவில்லை.

அவர் எழுதியுள்ள நூல்களிலே ஆன் தி ஈவ் என்னும் இந்த நூல் என் மனதைக் கவர்ந்ததற்கு இரு முக்கியமான காரணங்கள் உண்டு. கதையின் ஆரம்ப காலத்தில் சர்வ சாதாரணமான, ஆனால் செல்வமாக வளர்ந்து பிற்பாடு சிறுகச் சிறுக வாழ்க்கையில் நூதன அம்சங்களையும் அனுபவங்களையும் பெற்று, பிறகு ஒரு இலட்சிய வீரனின் மனைவியாகி பின்னர், இலட்சியப் பெண்மணியாகவே மாறிவிடும் 'எலினா' கதாபாத்திரம் துர்க்கனேவின் மகோன்னத கற்பனைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும் இரண்டாவதாகப் பெண் மனம், அறிவையும் அழகையும் காட்டிலும் ஆண்மையையும் வீரத்தையும் போற்றிப் பேணுவதில் பெரும் அளவு ஈடுபாடு கொள்கிறது என்பது இந்த நாட்டில் தொன்றுதொட்டுள்ள பண்பாடாகும். துர்க்கனேவின் 'எலினாவும்' இந்தப் பண்பாட்டைப் பிரதிபலிப்பவள்.

இன்ஸரோவ் ஒரு அசாதாரணமான, ஆனால் இணையற்ற இலட்சிய புருஷன். இந்த உலகத்தின் சாதாரண சுக வாழ்வு, இன்பபோகம், மனை, மக்கள், சுற்றம் ஆகிய எதி லும் அவன் மனம் அதிக அளவில் ஈடுபடவில்லை. தேச பக்தியில் அவன் மனம் சென்ற அளவை பார்க்கப் போனால், இதர பாகங்கள் இதில் நூற்றில் ஒரு பங்குகூட இல்லை என்று கூறலாம்.

எனவே, ஐவான் துர்க்கனேவ், இலட்சிய வீரன் 'இன் ஸரோ'வையும், எலினுவையும் சிருஷ்டித்து எங்கோ, எந்த நிலைமையிலோ இருந்த அவர்களைப் பிணைத்து முடிவில் அவர்களிருவரையும் தியாகச் சின்னங்களாய் மாற்றி நம் மனதிலே என்றும் அழியாச் சிரஞ்சீவி சித்திரங்களாய் நிலைநிறுத்தியுள்ளார். துர்க்கனேவின் இந்தத் திறமை வாய்ந்த கதைப் போக்கே என் மனதைக் கவர்ந்து 'ஆன் தீ ஈவின்' தமிழாக்கத்தைக் கொணரத் தூண்டியது.

மூலநூலின் முழு மொழிபெயர்ப்பைத் தமிழில் கொண்டு வரலாம் என்றுதான் ஆரம்பத்தில் கருதினேன். ஆனால் கதா சுவாரஸ்யமும், ரஸனையும், ஈடுபாடும் நம்மவர் களுக்குக் குறையாதிருக்க, மூலத்தின் சுருக்கமே பயன் படும் என்று மூலநூலை ஒரு முறைக்கு மூன்று முறையா கப் படித்த பிறகு தீர்மானித்தேன். துர்க்கனேவ் இக் கதையை எழுதி, கிட்டத்தட்ட ஒரு நூறாண்டு கடந்து விட்டது. என்றாலும், இன்றைக்கு இத்தகைய கதாபாத்தி ரங்கள் உயிருடன் நம்மிடையே, உலக நாடுகளிடையே நடமாடி வருவது கண்கூடு. துர்க்கனேவின் கற்பனைத் திற னுக்கு இந்த ஒரு நிதரிசன உண்மையே தகுந்தவொரு சான்றாகும் என்று கருதுகிறேன்.

தங்கள் அன்பன்,
"அபயன்"

# எலினா

## முதல் அத்தியாயம்

கோடைக் காலமாகையால் வெயிலின் கொடுமை சற்று அதிகமாகத்தான் இருந்தது. அதுவும் அன்றைய தினத்தில் பொறுக்க முடியாத வெய்யில். குண்ட்ஸேவோ கிராமத்துக்குப் பக்கத்தில் ஓடும் மாஸ்க்வா நதிக்கரையோரத்தில் இரு வாலிபர்கள், வெய்யிலின் கொடுமையைச் சமாளிக்க நிழல் தரும் மரத்தடி யொன்றில் காற்று வாங்கிக் கொண்டு அமர்ந்திருந்தனர். அவர்களில் ஒருவனுக்குச் சுமார் இருபத்தி மூன்று வயதிருக்கலாம். மெலிந்த உடலுடைய அவன் அதற்கேற்றபடி உயர்ந்திருந்தான். தரை மீது மல்லாந்து படுத்திருந்த அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையுடன் ஒரு நிலை இல்லாமல் தொலைவில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான். வளைந்த மூக்கும், பரந்த நெற்றியுங் கொண்ட அவன் முகத்தில் அலாதி களை குடி கொண்டிருந்தது. மற்றவன் குப்புறப்படுத்துக் கொண்டிருந்தான். முதலாமவனைவிட மூன்று வயது மூத்தவனான இவன், அவனைவிட இளமையுள்ளவனாகவே காணப்பட்டான் என்றாலும், அவன் முகத்தில் இன்னும் குழந்தைத் தன்மைக்குள்ள களையும், கவர்ச்சியும் குடிகொண்

டிருந்தது. இன்னும் மீசைகூட அதிகமாக முளைக்கவில்லை குவிந்த உதடுகளைக் கொண்டவாயும், நீலக் கண்களும் அந்த முக அழகை அதிகப்படுத்தியது. கைகள் சிறுத்துக் கொழு கொழுவென்று இருந்தன. நெற்றிவரை தொங்கும் சுருட்டை மயிரை அடிக்கடி தன் கையால் கோதிய வண்ணமாய் இருந்தான். எதிலும் அலட்சியமான பாவமும், குறுகுறுப்பு உள்ள வாலிபத் தன்மையும், ஆரோக்கியமும் அவனிடம் பூரணமாகப் பொருந்தியிருந்தது. அவனுடைய நீலநிறக் கண்கள் நாலாபக்கத்திலும் பார்த்துப் பார்த்துக் காட்சிகளை அனுபவித்தன. அவன் அணிந்திருந்த ஆடைகள்கூட அவனுடைய அழகுக்கும், அலட்சிய சுபாவத்துக்கும் எடுத்துக் காட்டா யிருந்தன. மேலும் தொளதொளத்த வெள்ளைச் சட்டையும், கழுத்தைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த நீலக் கைக்குட்டை ஒன்றும், பக்கத்திலே கீழே தரைமீது உருண்டு கிடந்த தொப்பியும் அதை நிரூபித்தது.

அவனுடைய தோழனை—முதல்வன்—இவனைவிட வயதில் இளையவனாயிருந்தும், பார்வைக்கு வயதானவனாகவே காணப்பட்டான். அவன் உருவத்தையும் அப்படி அழகு என்று கூறிவிடமுடியாது. இருந்தபோதிலும் அவனுடைய தோற்றத்திலிருந்தே நல்ல சிந்தனையும் உயர்ந்த நோக்கமும் உள்ளவன் என்று தெரிந்துகொள்ளலாம். அவன் அணிந்திருந்த ஆடைகூட சாதாரணமான கறுப்புச் சட்டை, உடம்பைப் பிடிக்க இருந்தால் கொஞ்சம் விகாரமாய்த்தானிருந்தது. மொத்தத்தில் பார்ப்போருக்கு 'இவன் சிறந்த மனிதன்—அறிவாளி,' என்று மதிக்கும் படியாகக் காணப்பட்ட அவன் பெயர், ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் பெர்ஸனேவ் என்பது. அவன் தோழனை அந்த அழகனின் பெயரோ பேவல் யாகோவ்லிட்ச் ஷூபின் என்பது.

அந்த இடத்திற்கு இளைப்பாற வந்த சற்று நேரம் வரை அவர்களிடையே மௌனம் நிலவியிருந்தது. அந்த

மௌனநிலே அதிக நேரம் நீடிப்பது ஷாபினுக்குப் பிடிக்க வில்லேபோலும்!

"நீயும் ஏன் என்னேப்போல் இப்படிக் குப்புறப்படுக்கக் கூடாது? இப்படிப் படுத்திருப்பது எவ்வளவு ஜோரா யிருக்கிறது தெரியுமா? இதோ பார், கால்களே இது மாதிரி உதைத்துக் கொண்டு இருப்பதும், அதோ கொஞ்ச தூரத்தில் உள்ள இடங்களேப் பார்த்துக் காட்சிகளே அனுபவிப்பதும்: அதோ அந்த எறும்புகள் சாரிசாரியாக ஓடுவதை பார்! இன்னும் ஏதேதோ ஜந்துக்கள் எல்லாம் ஓடுகின்றன, அவைகளேப் பார்ப்பதே எவ்வளவு குஷியாயிருக்கிறது...இதையெல்லாம் அனுபவிக்காமல் நீ என்னவோ பிரமாதமான யோசனே செய்துகொண்டிருக்கிருயே? நீ இங்கு வந்தது இளேப்பாறத்தானே? இளேப்பாற வந்தவன் என்னேப்போல் ஏன் குஷியாக இருக்கக்கூடாது என்றுதான் உன்னேக் கேட்கிறேன்!" என்று கூறிவிட்டுச் சற்றுநேரம் பேச்சை நிறுத்தினன். ஆனல் பெர்ஸனேவ் பதில் கூருமலிருப்பதைப் பார்த்துக் கேலியாகச் சிரித்துக் கொண்டே மீண்டும், "இந்த எறும்புகளேத்தான் பாரேன். என்ன சுறுசுறுப்பு? ஏதோ ரொம்பக் காரியம் இருக்கிற மாதிரி அங்குமிங்கும் ஓயாமல் குடுகுடுவென்று ஓடிக் கொண்டிருப்பதை! இவைகளேப் படைத்த கடவுளுக்காவது கொஞ்சம் ஓய்வு கிடைக்கலாம்; ஆனல், இவைகளுக்கு ஓய்வுமில்லே, ஒன்றுமில்லே! ஒரு சின்ன எறும்பு கூட, தன் காரியத்தில் தான் கருத்தாக இருக்கிறதே தவிர ...உம் அவை நம்மைவிட எந்தவிதத்தில் தாழ்ந்தவை யாகும்? என்ன...? ஐயா தத்துவப் பேராசிரியரே!" என்று கேலியாகக் கேட்டதும், பெர்ஸனேவ் அப்பொழுது தான் விழித்துத் திடுக்கிட்டவன் போல் "என்ன?" என்று கேட்டான்.

"என்னவா? சரி, சரி! உன் தோழன் உனக்கு முன்னல் இருந்துகொண்டே பெரிய பிரச்னேயைப்பற்றி ஆராய்ந்து கேட்கும்போது, அதைக் கவனியாமல், என்ன என்று மெதுவாகக் கேட்கிருயே? ரொம்ப சரி!"

"இல்லை, என் கவனம் இங்கில்லை: அதோ - அதோ பார்த்தாயா? மாலை வெய்யில் அந்த நிலங்களின் மீது பொற்பாய் விரித்தாற்போல் பரவிக் கொண்டிருப்பது எவ்வளவு பிரகாசமாக — கவர்ச்சியாக இருக்கிறது, தெரிகிறதா? அதைத்தான் நான் மனதுக்குள்ளேயே சிலாகித்துக் கொண்டிருந்தேன்," என்று பெர்ஸெனேவ் கொஞ்சம் தெளிவடைந்தவன் போல் சொன்னான்.

"ஆமாம், அங்கே பரவியுள்ள அந்த வர்ணப்பரப்பு அழகாகத்தான் இருக்கிறது. இயற்கை வர்ணத்தில் அலாதி வனப்பு இருக்கத்தானே செய்யும்!"

"ஷூபின், என் நோட்டத்தைவிட இவ்விஷயத்தில் உன் நோட்டம் அர்த்தமுள்ளதாயிருக்கவேண்டும். நீ ஒரு சைத்திரிகன் ஆதலால் இது ரொம்பவும் அவசியம்." என்று பெர்ஸெனேவ் தலையை அசைத்துக் கொண்டே சொன்னான்.

"இதைப் போன்ற காட்சிகளைவிட எனக்குத் தத்ரூபமான அதாவது உண்மைக் காட்சிகளில் தான் கவனம் அதிகம். சதைப் பிடிப்புள்ள உருவத்தின் அழகுதான் அழகு! கைகால், புஜங்கள், கொண்ட உண்மையான படைப்பு. ஒரு பெண் உருவம்தான் என் கவனத்தை— கருத்தை கவரக்கூடும்! நான் கூறுவது உனக்குப் புரிகிறதா?" என்று சிரித்தபடியே கேட்டுவிட்டு, பக்கத்தில் கிடந்த தொப்பியை எடுத்து அலட்சியமாகப் பின் தலையில் வைத்துக் கொண்டான் ஷூபின்.

"இதில் இயற்கை அழகு இருக்கிறதல்லவா? என்று பெர்ஸெனேவ் கூறிவிட்டு மேலும், "அது சரி. நீ அந்தச் சித்திரத்தை முடித்து விட்டாயா?" என்று கேட்டான்.

"எந்தச் சித்திரத்தை?"

"அதுதான். அந்தப் 'பையனும் ஆடும்,' என்பதை?"

'த்சு' அதைக் கொண்டு தூரப்போடு, என்னமோ ஒரு ஆசை உண்டானபோது அதை எழுதினேனாக்கும். அப்

புறம். அதைக் கவனிக்கவும் இல்லை. எங்கேயோ தொலைந்து விட்டது. நான் சொல்கிறேன் கேள். இந்த இயற்கை அழகு, காட்சி எல்லாம் இருக்கிறது பார்! ஒரு வகையில் இவை, என்னவோ உன்னதமானது என்று நானும் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் 'அழகு' எதில்தான் இல்லை? எல்லாவற்றிலும் இருக்கிறது. உன்னுடைய வளைந்த மூக்கில்கூட ஒரு அழகு இருக்கத்தான் செய்கிறது! என்றாலும் எல்லாவற்றையும் உன்னதமான அழகு என்று கூறி விடவும் முடியாது. இந்தக் காலத்தில் அழகை பிரபைப் படுத்திக்காட்ட செயற்கையாக எத்தனையோ முறைகள் உண்டு. அழகை அனுபவிப்பதே ஒரு கலை. ஏதோ நமக்குத் தெரிந்தவரை, முடிந்தவரை, அழகை அனுபவித்துக் கொண்டுதானிருக்கிறோம். ஆனால் உன்னதமான அழகை எதோ ஓரிடத்தில்—எப்பவோ ஒரு தரம்தான் காணவும் முடிகிறது. அதைக் காண்பதற்காக நாம் 'தூண்டில் போட்டு மீன் பிடிப்பவனைப் போன்று காத்துக் கிடக்க வேண்டியிருக்கிறது," "போதும், போதும், உன் உதாரணமும் நீயும்; இயற்கை அழகைப் பூரணமாகப் புனித உணர்ச்சியுடன் அனுபவித்தால் அன்றி, உன் கலையில் அழகுண்டாக்கி விடமுடியாது. ஒரு அழகான காட்சியிலோ, கானத்திலோ எதிலாயினும் சரி, இதய பூர்வமாக லயிப் பட்டு ரஸித்தால்தான்—"

"அடாடா! பெரிய கலா ரஸிகன் நீ!" என்று கிண்டலாகச் சொல்லிவிட்டு ஷுபின் சிரித்தான். பிறகு அவனைக் கேலி "தோழா, நீயோ மேதாவி, தத்துவ சாஸ்திர நிபுணன், மாஸ்கோ சர்வ கலாசாலையின் பட்டதாரியென்றாலே போதாதா? உன்னிடம் என் போன்ற பாமரனால் பேசி ஜயிக்க முடியுமா? ஆனாலும், என்னைப் பொறுத்தவரை சித்திரக் கலையில் உள்ள ஆர்வத்தைப் போல், பெண்களிடமும், அதுவும் பருவகால யுவதிகளிடம் நிரம்பவும் ஆசையுண்டாகிறது இப்பொழுதெல்லாம்!" என்று குஷியாகக் கூறிவிட்டு மல்லாக்காத் திரும்பிப்படுத்துத் தலைக்குத் தாங்கலாகக் கைகளைப் பின்புறத்தில்வைத்துக் கொண்டான்.

சில நிமிஷங்கள்வரை அவர்கள் இருவரும் பேசாமல் இருந்ததால் அங்கு அமைதி நிலவியது. வெயிலின் ஒளியும், உக்கிரமும் கொஞ்சங் கொஞ்சமாக மங்கிக் கொண்டிருந்தது. திரும்பவும் ஷூபின் பேசலானான்.

"பெண்களைப் பற்றிப் பேசும்போது அந்த நிகோலை ஆர்டெமெய்விட்சின் நினைவு வராமலிருப்பதில்லை. அவரை நீ மாஸ்கோவில் எப்போதாவது பார்த்ததுண்டா? என்று ஷூபின் கேட்டதற்கு 'இல்லை' என்று டக்கெனப் பதில் கூறினான் பெர்ஸனேவ்.

"அந்த மனுஷனுக்கு என்ன ஆசை பாரேன்! தான் ஒரு குடும்பஸ்தனாயிற்றே என்ற எண்ணம் கொஞ்சங்கூட இல்லாமல் எப்பவும் அந்தக் கிறிஸ்டினோவ்னாவைச் சுற்றிக் கொண்டிருப்பதே வேலை! என்னதான் தடுத்தாலும் அவளைப் பாராமல் அந்த மனுஷனால் இருக்கமுடியாது. அப்படித்தான் என்ன? அந்த ஸ்திரீ அபார அழகியா என்று— பார்க்கப் போனால் அதுவும் இல்லை. அவள் முகத்தைப் பார்க்கவே நமக்கு சகிக்கவில்லை! அவளைக்கூட படம் எழுதியிருக்கிறேன். உனக்கும் காட்டுகிறேன். என்ன தான் இருந்தாலும் அவளைத் தேடியோடும் இந்த மனுஷன் ஒரு விசித்திரமான பிராணிதான்!" என்று ஷூபின் சொல்லிமுடித்ததும் பெர்ஸனேவ்,பேச்சை மாற்ற விரும்பி,

"எலினு நிகோலவ்னுவின் சிலை பூர்த்தியாகிவிட்டதா?" என்று கேட்டான்.

"அதுதான் இன்னும் முடிவடையவில்லை. அந்த முகம் இருக்கிறதே பெர்ஸனேவ், அடாடா! என்ன அழகு தெரியுமா? அந்த முகத்தில் தான் எத்துணைக் களையும் கவர்ச்சியும்—சிற்பியின் திறமை எவ்வளவுதான் இருக்கட்டுமே! அதெல்லாம் அங்கே—அவளைச் சித்திரிக்கும் போது மட்டும் நடக்காதப்பா நடக்காது! அவள் மஹா அற்புதமான அழகி. நீ எப்போதாவது அவள் முகத்தைக் கவனித்துப் பார்த்திருக்கிறாயா? அந்தக் கண்களில்தான்

எத்துணை மலர்ச்சியும் துடிதுடிப்பும் ஏற்பட்டு அந்த அழகு முகபாவத்தை மாற்றுகிறது பார்த்தாயா?"

"ஆமாம். அவள் அபூர்வமான அழகுதான்!" என்றான் பெர்ஸனேவ்.

"நிகோலை ஆர்டெமெய்விட்ச்சின் மகள்தான் அவள். இருந்தால் என்ன? இருக்கட்டுமே. ஆனால் ஜனங்களுக்குப் பரம்பரைப் பெருமை, சிறுமை பற்றித்தானே பேசசு. ஆனால் அவள் தாய் அன்னுவாசிலிவ்னு இருக்கிருளே, அவளிடம் மட்டும் எனக்கு மரியாதை இல்லாமலில்லை. என்ருலும் அவள் குணத்துக்கும் எலினு குணத்துக்கும் சம்பந்தமேயில்லை! எலினுவிடம் எனக்கு ஏற்பட்டுள்ள இந்த அபூர்வக் கவர்ச்சிக்கு என்னதான் காரணம்...இது ஒரு பிரச்னைதான். தத்துவ ஆராய்ச்சியாளனுயிற்றே நீ—இதையும் கொஞ்சம் விளக்கிச் சொல்லேன்!"

ஆனால் அந்தத் தத்துவாராய்ச்சியாளன் பெர்ஸனேவ் பதில் சொல்லவில்லை. சாதாரணமாகவே பெர்ஸனேவுக்கு அதிகப் பேச்சு பிடிக்காது. தவிரவும் அவன் பேசும் போதுகூட ஒரு தயக்கம், நிதானம் காணப்படும். அதுவும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவனுக்கு ஏதோ ஒரு தேக்கம். இன்னதென்றே கூற இயலாத நிலையில் இருந்தான் அவன். நகரத்திலிருந்து சமீபத்தில் தான் அவன் இங்கு வந்தான். அங்கே தினசரி மிகவும் கவனத்துடன் படிப்பில் ஈடுபட்டிருந்த அவன், இங்கு கொஞ்ச காலம் தங்கி இளைப்பாறத்தான் வந்தான். இங்கு வந்ததும் அவன் இளைப்பாறுவதற் கேற்றபடி சமய சந்தர்ப்பமும் இருந்தது என்ருலும், தன் தோழன் இருந்தாற்போலிருந்து நினைத்த மாத்திரத்திலேயே மனதில் இனிப்பூட்டும் ஒரு விஷயத்தை நினைவூட்டி, அதை வெகுவாக வர்ணித்துப் பேசியதும், அவளைப் பற்றிய நினைவும் கூடி அவனுடைய உள்ளத்தில் ஒரு நிறைவான தேக்கத்தை உண்டாக்கிவிட்டது. என்ன இருந்தாலும் அவனும் வாலிபன்தானே!

எலுமிச்சை மரத்தடியில் பரவியிருந்த நிழலும் காற்றும் குளுமையாகத்தான் இருந்தது. அதன் நிழலில் ஊடாடிப் பறந்த ஈக்களும், தேனீக்களும் பார்ப்பதற்கு நல்ல காட்சியாயிருந்தது. பச்சைப் பசேலென்று பரந்து வளர்ந்திருந்த பசும்புல் தரையில் விதவிதமான புஷ்பச் செடிகள் அசையாது நின்றன. வெகு தூரத்துக்கப்பாலுங் கூட கண் கவரும் காட்சிகள் நிறைய இருந்தன. பறவைகள் வெயிலுக்குப் பயந்து வெளியே வரவேயில்லை. ஆனால் அங்குமிங்கும் தத்துக் கிளிகள் தத்தித்தத்தி ஓடிக் கொண்டிருந்தன. அவர்களைச் சுற்றி நிலவிய அமைதியும், குளு குளுவென்றடித்த காற்றும், உடம்புக்கு மட்டுமின்றி உள்ளத்துக்கும் ரம்யத்தையும், புத்துணர்வையும் உண்டாக்கியது.

சற்றுநேரம் மௌனமாயிருந்த பெர்ஸனேவ் "இயற்கை நமக்குண்டாக்கும் அதிசயமான உணர்ச்சியை நீ அறிகிறாயா? இயற்கையில் எல்லாம் பூரணத்துவம் பெற்றிருக்கிறது. எழுச்சியும் புதுமையும் இல்லாமலில்லை. ஆனாலும் இயற்கையில் காணப்படும் தனி வேகமும் விறுவிறுப்பும் மட்டும் ஏன் என்றுதான் நமக்குப் புரியவில்லை. திருப்தியின்மையும் நிதானமற்ற தன்மையும் நம்மிடமிருப்பதால், அதாவது நமக்கு என்ன வேண்டுமோ அது இயற்கையிடமிருந்து அடையமுடியாததினால்தானோ? அல்லது அப்படிப் புரிந்துகொள்ள முடியாததற்குக் காரணம் இந்தமாதிரி செயற்கையாக நம்மிடம் ஏற்பட்ட குறைகள்தானோ? என்று கேட்டான்.

" உம், சொல்கிறேன் கேள், இதெல்லாம் பற்றிச் சிந்திக்கத் தோன்றுவானேன் உனக்கு? என்றுதான் எனக்குத் தெரியவில்லை. நீயோ ஒரு ஏகாங்கியான வாழ்வில் விரக்தியடைந்த மனிதனுடைய உணர்ச்சிகளை, கனவிலே வாழ்பவனுடைய நினைவுகளைச் சொல்லுகிறாய். ஏன் உண்மையாக வாழ்வதில் உனக்கெல்லாம் பிரியமில்லை? இயற்கையை நீ எவ்வளவு கெஞ்சினாலும் அதனிடமிருந்து

கிடைக்கப்போவது ஒன்றுமில்லை. நிதரிசனமான இன்பத்தைக் கனவில் அனுபவிக்கமுடியுமா? உனக்கு இன்பம் வேண்டுமானால், வாழ்க்கையில் பற்று வேண்டும். வாழ்க்கையில் பற்றும் பிடிப்பும் ஏற்பட ஒரு பெண்ணின் அன்பைப் பெறுவதால்தான் முடியும். ஆகவே என் அருமைத் தோழா, நீ சீக்கிரமே ஒரு வாழ்க்கைத் துணைவியை, உன்னுடைய அன்புக்கேற்ற மனைவியை அடைவதன் மூலம், இந்த வீண் கனவுகளெல்லாம் மறைந்து, உண்மை இன்பந்தானே கிட்டும். இதுதான் இப்போதைய தேவை; உனக்கு உண்டாகியுள்ள உணர்ச்சிப் பசிக்குத் தக்க ஆகாரம். வயிற்றுப் பசிக்கு ஆகாரம்தான் தேவையே ஒழிய அதன் ருசியோ வர்ணனையோ அல்ல! என்னமோ இயற்கை, இயற்கை யென்கிறாயே; ஒரு சின்ன வார்த்தைதான் காதல்! என்பதும். ஆனால் இவ்வார்த்தையைச் சொல்லும் போதே அடடா! உள்ளத்திலே எவ்வளவு இன்ப உணர்ச்சி உண்டாகிறது பார்த்தாயா? ஆகவே வரப்போகும் உன் இன்பக் காதலிக்கு இப்போதே என் வாழ்த்துக்கள்," என்று சொல்லிச் சிரித்தான் ஷூபின்.

பெர்ஸனேவ் எழுந்து நின்றுகொண்டு, "இதில் சிரிப்பதற்கென்ன இருக்கிறது? ஆமாம், நீ சொல்வது போலக் 'காதல்' என்பது அபூர்வமான, இன்பகரமான உணர்வை உண்டாக்கும் உயர்ந்த வார்த்தைதான். ஆனால் நீ எந்த மாதிரியான காதலைப்பற்றிச் சொல்லுகிறாய்?"

ஷூபினும் எழுந்து நின்றவனாய், "எந்தமாதிரியா? உனக்கு எது விருப்பமோ அப்படி வைத்துக் கொள்ளலாம். ஆனால் எனக்குப் பலதரப்பட்ட 'காதல்' விஷயங்களில் நம்பிக்கையில்லை. நீ யாரையேனும் காதலித்திருந்தால்..."

"இதய பூர்வமாக என்று சொல்லப் போகிறாயாக்கும்!"

"நல்லது, அப்படியானால் இதயம் என்ன ஆப்பிள் பழமா? அதை அப்படியே பங்கிட்டுக்கொள்ள? உனக்

துக் காதல் உண்டாயிருந்தால் இந்த உண்மை புரியாம லிராது. நான் கேலியாகச் சொல்லவில்லை. ஆனால் இயற்கை எப்படி நம்மை, இந்தப் பேச்சைப் பேசத் தூண்டுகிறது என்று காட்டவே இதை ஆரம்பித்தேன். இயற்கை மற்ற ஜீவன்களுடன் நம்மையும் இணையச் செய்கிறது. இது தான் நமக்குப் புரியாமல் தவிக்கிறோம். ஆஹா! பெர்ஸ னேவ் அதோ அந்த சூரியன், வானம்......என் ? நம்மைச் சூழ்ந்திருப்பனவெல்லாம் எவ்வளவு மனோகரமாயிருக் கின்றன. ஆனால் நீமட்டும் வருத்தப்படுவதேன் ? நீ உன் காதலியுடன் கைகோத்துக் கொண்டு இருந்தால், அவளு டைய இன்பக் கரமும் இதயமும் உன்னதாக இருக்கும் போது, இந்த இயற்கை நிலைபற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்வாயா ? அல்லது இதன் 'அழகைத்தான்' அனுப விப்பாயா ? அவளுடைய அழகிலும் இனிய பேச்சிலும் லயித்து, அப்படியே மெய்மறந்து போய்விட மாட்டாயா ? இப்படிக் கேட்டுவிட்டு ஷுபின் அங்குமிங்கும் உல்லாச நடைபோட்டான். பெர்ஸனேவ் குனிந்த தலையுடன் நின் றான். அவன் முகம் சிந்தனையில் மாறியிருந்தது."

"நான் இவ்விஷயத்தில் உன் அபிப்பிராயத்தை அப் படியே ஒப்புக் கொள்ளமாட்டேன். இயற்கை நம்மை எப் பொழுதும் 'காதலிலேயே' கவனங்கொள்ளச் செய்வ தில்லை. இயற்கை நம்மை மாற்றுகிறது. எங்கெல்லாமோ இழுக்கத்தான் செய்கிறது. வாழ்வும் சாவும் அதற்கென்று தானே—ஆதலால் வாழ்வில் அனுபவிக்க அது எவ்வளவு சந்தர்ப்பம் தருகிறதோ, அதேபோல் சாவுக்கும் ஆதர வளிக்கிறது. அது நம்மை ஒரு வகையில் தன் இஷ்டப் படி ஆட்டிவைக்கிறது," என்று பெர்ஸனேவ் சொன்ன தும், ஷுபின் குறுக்கிட்டு,

"காதலிலும், வாழ்வும் சாவும் உண்டு; தவிரவும், நான், எப்போதுமே காதலைப்பற்றிப் பேசி, நினைத்துக் கொண்டிருப்பதென்பதை"...இவ்வார்த்தைகளை அவன் சொல்லும்போது கொஞ்சம் கூச்சமும் அடைந்தான். என்றாலும் பேச்சைவிடாமல்,

" இதோ பார் காதல்......காதல்தான் வாழ்க்கையின் மகத்தான இன்பம். அதிலும் சிறந்த இன்பம் இல்லை. நாம் இளைஞர்கள். இன்னும் எவ்வளவோ இன்பம் அனுபவித்து வாழவேண்டியவர்கள். இந்தத் தத்துவ யோசனைகளை எல்லாம் தள்ளித் தொலை. நாம் என்ன அப்படி ஒன்றும் தெரியாதவர்களா? இன்பத்தை நாம் ஆண்டு அனுபவிக்க முடியாதா என்ன? கட்டாயம் முடியும்."

" ஏன், இந்த இன்பத்தைவிட உயர்ந்தது எதுவும் இல்லையா? என்று பெர்ஸனேவ் நிதானமாகக் கேட்டான்."

" இருக்கிறதா என்ன? அப்படியானல் அதென்னவென்றுதான் சொல்லேன் பார்க்கலாம்!"

" ஏன், நீயும் நானும் நண்பர்கள். நல்ல இளைஞர்கள். நாமிருவரும் ஒரு குறிப்பிட்ட பொருளிடம் இன்பத்தைத், தனித் தனியாக விரும்பும்போது, அதே பொருளிடம் நம்மிருவருக்கும் ஆசை உண்டாகும்போது, வேற்றுமை உண்டாகி விபரீதமான நிலைமை ஏற்படுகிறதல்லவா? இந்தச் சுயநல இன்பத்தையா நீ பெருமைப்படுத்திப் பேசுகிருய்?"

" ஓஹோ, அப்படியானல் உனக்கு மனிதர்களை ஒற்றுமைப்படுத்தும் வேறு வார்த்தை ஏதாவது தெரியுமா?"

" தாராளமாக. ஆனல் அவைகள் பல உனக்கும் தெரியாமலிருக்க முடியாது."

" அப்படிப்பட்ட விஷயங்கள்தான் என்ன?"

" அந்த விஷயங்கள்தானே, கலை விஷயம் இல்லையா? நீயே ஒரு சைத்ரிகன்தானே? இன்னும் தேசம், விஞ்ஞானம், சுதந்திரம், நீதி, தவிர..."

" சரிதான் காதலைப்பற்றி என்ன?"

" ஆமாம்! காதலும் ஒரு வகையில் முக்கியம்தான். ஆனல் நீ சொல்லும் 'காதல்' அப்படிப்பட்டதல்ல. சுயநலச் காதலை நான் கூறவில்லை. ஆனல் சுயநலத் தியாகம் புரியக்கூடிய காதலைத்தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன்."

ஷூபினுக்கு இவ்வார்த்தையைக் கேட்டதும் கொஞ்சம் ஆத்திரமுண்டாயிற்று.

“ அதெல்லாம் ஜெர்மானியருக்குத்தான் ! நமக்கல்ல. எனக்கு இன்பச் சுகமளிக்கும் காதல்தான் வேண்டும், ” என்றான்.

“ அப்படியானால் சுயநல சுகத்துக்காகப் பிறருடைய நலத்தில் கூட கருத்திருக்க வேண்டாமா ?”

“ உன் நோக்கப்படி நடத்துவதென்றால் எல்லாம் பிறருக்காகத்தான். தனக்கென்று ஒன்றுமேயில்லாமல் போய்விடும் !”

“ ஆனாலும் பிறருடைய விஷயம் எப்படியானாலென்னவென்று, தன் காரியத்தில் கவனமாயிருப்போர் தான் எங்கும் அதிகம். அப்படியொன்றும் தன்னலத்தியாகம் செய்ய எல்லோரும் கிளம்பிவிட மாட்டார்கள் !”

இருதோழர்களும் மேற்கொண்டு இவ்விஷயமாக விவாதிக்காது மௌனமாயிருந்தனர். சற்றுநேரத்துக்குப் பின் பெர்ஸனேவ்,

“ நான் எனது நண்பன் இன்ஸரோவை மாஸ்கோவில் அன்று ஒருநாள் சந்தித்தேன். என்னிடம் வந்து தங்கியிருக்கும்படியும் அழைத்துள்ளேன். உனக்கும், ஸ்டாஹோவ் குடும்பத்தினருக்கும் அவனைக் கட்டாயம் அறிமுகப்படுத்தி வைக்கிறேன், ” என்று சொன்னான்.

“ ஓ ! அது யாரப்பா இன்ஸரோவ் ? யாரோ பல்கேரியனோ, ஸெர்வியனோவென்றும், பெரிய தேச பக்தன் என்றும் முன்பு சொன்னாயே,......சரிதான் அந்த ஆசாமிதானே ! இம்மாதிரி தத்துவ ஆராய்ச்சிக்கு எல்லாம் காரணஸ்தன் ?”

“ அப்படியும் இருக்கலாம், ”

“ அப்படி என்ன அவன் அலாதிப் பிறவியா ?”

“ ஆமாம். ”

"புத்திசாலியோ? ரொம்பவும் திறமையுள்ளவனோ?"

"அதென்னவோ, எனக்குத் தெரியாது."

"தெரியாதா ? பின்னே அவனிடமுள்ள அற்புதம் என்ன ?"

"நீயே பார்க்கலாம். சரி. புறப்படுவதற்கு நேரமாய் விட்டது. அன்னுவாஸிலிவ்னு நமக்காகக் காத்திருந்தாலும் இருக்கலாம். மணி என்ன ?"

"மூன்று மணி ஆகிறது ; போகலாம். எனக்கென்னவோ இந்தச் சம்பாஷணை ரொம்ப விறுவிறுப்பைக் கொடுத்துள்ளது. தவிரவும் உனக்குக் கூட ஏதோ ஒரு பெண்ணிடம் மனம் செல்வதாகவும் தெரிகிறது. உண்மை தானு என் ஊகம் ?" என்று கேட்டபடி ஷுபின், பெர்ஸனேவ் முகத்தைப் பார்த்தான். ஆனுல் அவன் முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தான். பெர்ஸனேவ் தளர்ந்த நடையுடன் மெதுவாக அசைந்தசைந்து நடந்தான். அவனுக்குப் பின்னுல் ஷுபின் அலட்சியமாகக் குழந்தைமாதிரி நடந்தான். இருந்தபோதிலும் பெர்ஸனேவ் அந்தச் சமயம் பார்ப்பதற்கு ஷுபினைவிடச் சிறந்த மனிதனுகக் காட்சியளித்தான். கம்பீர புருஷன் என்று எண்ணினுல்கூடத் தவறொன்றும் ஏற்பட்டுவிடாது.

## இரண்டாவது அத்தியாயம்

அவர்களிருவரும் ஆற்றங்கரைமீதே கொஞ்ச தூரம் நடந்தனர். காற்று ஜில்லென்று வீசியது. அலைகளின் லேசான சப்தம் அவர்களின் காதில் ஒலித்தது.

"நேரமாய் விட்டதேயென்று பார்க்கிறேன். இல்லாவிட்டால் இன்னுமொருதரம்கூடக் குளிக்கலாம் போலிருக்கிறது. நதியைத்தான் பாரேன். நம்மை வா ! வா !! வென்றழைப்பதுபோல் கம்பீரமாக ஓடுவதைக் கிரேக்கர்களாயிருந்தால், இதில் ஒருதேவதையைக் காண்பார்கள். நாம்தான்

டிரக்கர்களில்லையே! ஆனால் எனக்கு இதாலிக்குப் போக வேண்டுமென்று ஆசைதான். அல்ஹெவாஸிலிஸ் கூடப் பணம் தந்தார்: அங்குபோய் வா. சின்ன ஸ்டையாவரை போனேன். அங்கேதான் அந்தப் பெண்கள் எவ்வளவு ஜோராயிருக்கிறார்கள் தெரியுமா......" அப்புறம்—

"போதும், உன் சமாசாரம்தான் தெரியுமே. எப்பொழுதும் உனக்கு இதே பேச்சு, நினைப்பு எல்லாம்," என்று பெர்ஸனேவ் கூறியதும் ஷூபின் பேச்சை மாற்றினான்.

"கொஞ்ச தூரத்தில் ஒரு சிறு பெண். புல்லால் செய்யப்பட்ட தொப்பியும், அழகான சட்டையும் அணிந்திருந்த அவள், இவர்களுக்கெதிரில் வந்தவுடன் ஷூபின், 'அடேடே!' இதோ அழகுருவம் நம்மைச் சந்திக்க வந்து கொண்டிருக்கிறதே! ஆஹா! அதியற்புத சோயாவுக்கு இதோ ஒரு எளிய சைத்ரிகனின் வரவேற்பு! என்று நாடக தோரணையில் தொப்பியை இறக்கிக் கொண்டே தமாஷாகச் சொன்னான்."

அந்தச் சிறுமி சகஜமாக "ஏன்? சாப்பிடவில்லையா நீங்கள்? உங்களுக்காக ஆகாரம் காத்துக் கொண்டிருக்கிறதே?" என்றாள்.

ஷூபினுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. "அடாடா! இந்த வெய்யிலில் நீயா எங்களை அழைத்துப் போக வந்தாய், சோயா" என்று கேலியும் கிண்டலும் நிறைந்த கேள்வியைக் கேட்டான்.

"இருந்தாருங்கள், இனிமேல் இப்படியெல்லாம் என்னிடம் பேசினால் அப்புறம் எனக்கு ரொம்பக் கோபம் வருமாக்கும்!" என்று அந்தச் சிறுமி கொஞ்சம் குறும்பு கலந்த கோபத்துடன் சொன்னாள்.

"இதோ பார். நீயும் என்னிடம் கோபமாக நடந்து கொள்ளமாட்டாய். நானும் உன்னிடம் கடுமையாக நடந்து கொள்ளமாட்டேன்.

என் அருமையான சோயா கிகிட்சினு, கூட என்னை கம்பிக்கையிழக்கச் செய்துவிடாதே!" என்று சொன்னதும், பெர்ஸனேவ் இருக்கும் பக்கம் அவர் திரும்பி தோள்களைக் குலுக்கிக் கொண்டு, "இப்படியெல்லாம் இவர் என்னிடம் பேச நான் என்ன குழந்தையா? எனக்குப் பதினெட்டு வயது ஆய்விட்டது. நானும் பெரியவளாய் விட்டேனல்லவா?" என்றாள்.

"ஓ! கடவுளே!" என்று கண்களைச் சிமிட்டினான் ஷூபின். பெர்ஸனேவ் அமைதியாகச் சிரித்தான். அந்தச் சிறுமிக்கோ கோபம் வந்துவிட்டது. காலால் தரையில் உதைத்துக் கொண்டே "பேவல் யாகோவ்லெவிட்ச்" இனிமேல் எனக்குக் கோபம் வந்துவிடும்! ஹெலனியும் என் கூட வந்தாள். வெயில் தாங்க முடியவில்லையென்று திரும்பி விட்டாள். எனக்கு இந்த வெயில் லட்சியம் இல்லை. வாருங்கள், வீட்டுக்குப் போகலாம்," என்று திரும்பி நடந்தாள்.

ஒரு சின்ன மரவீடு. அழகானதொரு தோட்டத்தின் மத்தியில் இருந்தது. அந்தச் சின்ன வீடு நேர்த்தியாக வர்ணம் பூசப்பட்டு பார்க்கக் கவர்ச்சிகரமாயிருந்தது. சோயா தான் முதலில் சென்று வாசல் கதவைத் திறந்தாள். முன்னால் ஓடி, "பார்த்தீர்களா, அந்த ஊர்சுற்றிகளை நான் அழைத்து வந்துவிட்டேன்!" என்று கூவினாள். தோட்டத்தின் ஒரு பக்கத்திலிருந்த பெஞ்சியில் அமர்ந்திருந்த ஒரு அழகான யுவதி இவர்களை நோக்கி வந்தாள். கதவோரத்தில் ஒரு நடுவயது ஸ்திரீ, கையில் எம்ப்ராய்டரி நூலுடன் நின்றவளாய்ப் புன்சிரிப்புடன் இவர்களை வரவேற்றாள். அந்த நடுவயது ஸ்திரீதான் அன்னைவாஸிலிவ்னு. தாய்தந்தையரை தன் எழாவது வயதிலேயே இழந்து அநாதையானவளானாலும் நிறையச் சொத்தைப் பெற்றவள். அவளுடைய பாதுகாப்பாளர்களில் ஒருவரான "இளவரசர் ஆர்டேமியன் சிகாரமோவ் என்பவரால் நல்ல முறையில் ஆதரித்து வளர்க்கப்பட்டவள். பின்னர்

நிகோலை ஆர்டமிவிட்ச் என்பவரைக் காதலித்து மணந்து கொண்டாள். நிகோலை ஆர்டமேவிட்ச், பீடர்ஸ்பர்க்கி லிருந்த மாஜிகாப்டன் ஒருவரின் மகன். நிகோலை ஆர்டமே விட்ச் கம்பீரமும் கவர்ச்சியுமுள்ள உருவத்தினர். அவ ருக்கு இளமையிலிருந்து இரண்டே ஆசைகள் தான். ஒன்று சைனியத்தில் உயர்ந்த பதவிபெறுதல்; மற்றொன்று உயர்ந்த இடத்தில் மணம் புரிவது. முதல் ஆசை சுலப மாக நிறைவேறினாலும் நெடுநாள்வரை இரண்டாவது ஆசை நிறைவேறுவது சிரமமாயிருந்தது. அவர் நன்றாகப் பிரஞ்சு பேசுவார். கொஞ்சம் தத்துவாராய்ச்சிப் பித்தும் உண்டு. அன்னுவாஸிலிவ்னவை அவர் சந்தித்தபோது அவருக்கு இருபத்தைந்து வயது. வேலையிலிருந்து விடு தலை பெற்று ஊருக்குச் சென்று பயிர் வேலைகள் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் கிராமம் அலுத்துவிட்டது. பிறகு மாஸ்கோவிலேயே சென்று மனைவியுடன் அவள் வீட்டிலேயே தங்கினர். அங்கு இவருடைய தத்து வாராய்ச்சி பறந்து போய்விட்டது. ஒரு ஜெர்மன் விதவை யுடன் நேசம் கொண்டார். அவளைப் பிரிய இஷ்டப்படா மல் நெடுநாள்வரை மாஸ்கோவிலேயே இருந்தார்.

அவருடைய மனைவியான அன்னுவாஸிலிவ்னு பூஞ் சையான தேகமுடைய நளினமான ஸ்திரீ நிறையப் படித் தவள். சிறுவயதிலிருந்தே நன்றாகப் பாடக்கூடிய அவள் பிற்காலத்தில் கேளிக்கை விஷயங்களில் அதிக கவனம் காட்டுவதில்லை. ஆடம்பர ஆடை அணிகளில்கூட அவ ளுக்கு அதிக ஆசையில்லை. தவிரவும் எலினு பிறந்ததும் அவளுடைய பூஞ்சையான உடல் நிலை மோசமாய்விட் டது. நிகோலை ஆர்டமேவிட்ச்தான், அகஸ்டினு கிறிஸ்டிய னேவ்னவுடன், அதாவது அந்த விதவையுடன் நேசமா யிருப்பதற்கு இதையும் ஒரு காரணமாகக் காட்டுவார். தன் கணவரின் துரோகமே அவள் மனதைப் புண்படச் செய்தது. குறிப்பாக இவளுக்குச் சொந்தமான ஒரு ஜோடிக் குதிரைகளை அவர், அந்த விதவைக்குக் கொடுத்து விட்டார். அதுமுதல் அன்னுவாஸிலிவ்னுவுக்கு வேதனை

தான். தவிரவும் இவள் சீக்காளியாயிருப்பதனுலோ என்னவோ, வீட்டில் யாரும் தன்னை அவ்வளவாக லட்சியம் செய்வதில்லையென்று வருந்துகிருள். விருந்தாளிகள் வந்தால்கூட, அவளுடன் அவர்கள் அளவளாவுவதில்லையாம். தனிமையிலேயே நொந்து தவிக்கும் அவளுக்கு வாழ்வே க்சப்பாகிவிட்டது.

ஷூபின் அவளுடைய தூரபந்து. அவன் தகப்பனுர், மாஸ்கோவில் சர்க்கார் உத்தியோகஸ்தராயிருந்தார். சகோதரர்கள் சைனியத்தில் வேலை பார்த்தனர். இவன் கடைக்குட்டியாதலால், செல்லப் பிள்ளையாக வீட்டிலேயே இருந்தான். இவனுக்குச் சிலை செய்வதில் ஆர்வம் ஏற்பட்டது. ஒரு சமயம் செனேடர் வால்ஹின் என்பவர் இவனுல் செய்யப்பட்ட ஒரு சிலையைப் பார்த்துவிட்டு அதிலேயே கவனம் செலுத்தித் தேர்ச்சிபெறும்படி புத்திமதி கூறினுர். ஆனுல், அவர் இவனுக்கு உதவியதெல்லாம் ஹோமரின் அரை உருவச்சிலை ஒன்றுதான்! ஆனுல் அன்னுவாஸிலிவ்னு இவனுக்குப் பணம் தந்து உதவினுள். வைத்தியக் கல்லூரியிலும் கொஞ்ச காலம் சேர்ந்து இவன் படித்தான். ஆனுல் அதில் கருத்துச் செல்லவில்லை. பிறகு தன் சித்திர வேலையிலேயே தீவிரமாகக் கவனம்செலுத்தினுன். நாடெங்கும் சுற்றிப் பல காட்சிகளை, அழகான குடியானப் பெண்களையெல்லாம் சித்திரித்தான் அப்பொழுது இவனுக்கு இருபத்தொரு வயதுதான். அவன் தாய்க்குக்கூட இதில் பெருமைதான். ஆனுல் இவனுடைய பெருமை அதிகமாகப் பரவுவதற்குள் அவள் காலமாய்விட்டாள். எனவே, அன்னுவாஸிலிவ்னு, இவனுடைய தாயின் வேண்டுகோளுக்கிணங்கித் தன்னிடமே வைத்துக்கொண்டாள். அதுமுதல் அவன் இங்கேயே இருக்கிறுன்.

## மூன்ருவது அத்தியாயம்

அன்னுவாஸிலிவ்னு அவர்களைக் கண்டதும் "வாருங்கள், சாப்பிடுவோம்," என்று அழைத்துக் கொண்டே

சாப்பாட்டு அறைக்கு நடந்தாள். "சோயா" நீ என் பக்கத்தில் உட்காரு. ஹெலினி! நீ நமது விருந்தாடிக்குப் பக்கத்தில்; பால்! நீ ஸோவுடன் எதுவும் தகராறு பண்ணுதே. இன்று எனக்கு ஒரே தலைவலி! என்று சொல்லிவிட்டு, அன்னுவாவஸிலிவ்னு மேஜை மத்தியில் உட்கார்ந்தாள்.

ஷூபின் கண்களை உருட்டி விழித்தபடி உயரப் பார்த்தான. ஸோ அரைச் சிரிப்புடன் அவனைப் பார்த்தாள். இந்த 'ஸோ' இருக்கிறுளே! இவள்தான் ஸோயா என்று முன் கூறப்பட்ட ஸோயா நிகிட்சினுமுல்லர்; ஜெர்மானிய ரஷ்யக் கலப்புப் பரம்பரையில் பிறந்த பெண். ரொம்ப நன்ருகப் பாடுவாள். ரஷ்ய நாடோடிப் பாடல்கள் அவளுக்குக் காதலைப் பாடம். தன்னுடைய பெண் எலினுவுக்குத் தோழியாயிருக்க இவளை நியமித்திருந்தாள் அன்னுவாவஸிலிவ்னு.

சாப்பிடும்போது பெர்ஸனேவ், தன்னுடைய கல்லூரி வாழ்க்கையையும், அடுத்தபடி என்ன செய்ய உத்தேசம் என்பதையும் பற்றி எலினுவுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். ஷூபின் அவனுடைய சம்பாஷணையைக்கவனித்துக் கேட்டாலும் பேசாமல் சாப்பிட்டான். சாப்பாட்டுக்குப் பிறகு எலினு, ஷூபின், பெர்ஸனேவ் மூவரும் தோட்டத்திற்குச் சென்றனர். உள்ளே அன்னுவாவஸிலிவ்னுவுக்கு ஸோயா பியானேவில் பாட்டுப்பாடிக் காட்டலானுள்.

எலினு, தனது இருநண்பர்களுடன் தோட்டத்தின் ஒரு புறத்திலிருந்த ஆசனங்களை நெருங்கினுள். அதற்குள் ஷூபின் எங்கேயோ ஓடி கொஞ்சம் களிமண்ணைக்கொண்டு வந்து ஸோயாவின் உருவத்தைச் சிலையுருவில் சிருஷ்டிக்க ஆரம்பித்து விட்டான்!

"மறுபடியும் அவனுக்கு அதே வேலைதான்!" என்று எலினு சொல்லிவிட்டு, பெர்ஸனேவடன் தன் சம்பாஷணையை ஆரம்பித்தாள்.

"ஓஹோ! என் பிழைய வேலையா? இன்று அவள் என்னைத் தவியாய்த் தவிக்கச் செய்து விட்டாளே, தெரியுமா?" என்று ஷுபின் கேட்டான்.

அவனுடைய தமாஷ் பேச்சில் கவனஞ் செலுத்தாமல் அவள் பெர்ஸனேவைப் பார்த்து 'ஆகவே நீங்கள் ஒருபுரொபஸர் உத்தியோகம் பார்க்க விரும்புகிறீர்களாக்கும்?' என்று விட்ட இடத்திலிருந்து சம்பாஷணையைத் தொடர்ந்தாள்.

"ஆமாம். எனக்கு அதில்தான் ரொம்ப ஆசையாயிருக்கிறது. இன்னும் எவ்வளவோ நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தாலும் ஆசைக்குக் குறைவில்லை. கொஞ்ச காலம் எங்காவது வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்யவும் ஆசை. கொஞ்சம் அனுபவமும் கிடைக்கும். அல்லவா? என்று மெதுவாகச் சொன்னான். ஒரு பெண்ணிடம் தான் பேசுவதை உணர்ந்து தக்கபடி நிதானமாகவும், ஜாக்கிரதையாகவும் வார்த்தைகளை உபயோகித்தான் அவன்.

"நீங்கள் என்ன சரித்திர நிபுணர் ஆக விரும்புகிறீர்களா?" என்று எலினு கேட்டாள்.

"ஆமாம். இல்லையேல் தத்துவ நிபுணராக முடிந்தால் அதுவும் எனக்கு விருப்பம்தான்."

"ஏற்கனவே அவன் பெரிய தத்துவ ஆராய்ச்சிக்காரனாயிருக்கிறேன்!" என்று சிலை சமைத்துக் கொண்டிருந்த ஷுபின் கேலியாகக் கூறிவிட்டு, "ஆமாம், வெளியே பிரயாணம் செய்வதால் இவனுக்கு என்ன தெரியப் போகிறதாம்?" என்று மேலும் கேட்டான்.

"ஆமாம், நீங்கள் இது விஷயமாக முடிவு செய்து விட்டீர்களா? என்று எலினுவும் கேட்டாள்.

"தீர்மானித்து விட்டேன். எனக்கு டிமோபே நிகோலேவிட்ச் போல் இருக்க ஆசை. தவிரவும் என் தகப்ப

னார் சாகும்பொழுது சொன்னதையும் என்னால் மறக்க முடியாது."......

"உங்கள் தகப்பனார் சென்ற மாரிகாலத்தில்தானே..."

"ஆமாம், சென்ற பிப்ரவரியில்தான் காலமானார்."

"எல்லோரும் அவர் பெரிய பெரிய ஆராய்ச்சிகளைச் செய்து, அப்படியே அவற்றையெல்லாம் கையெழுத்துப் பிரதிகளாக வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்களே, உண்மைதானே?"

"ஆமாம். அவர் ஒரு அபூர்வமான மனிதர். அவர் ஷில்லிங்கின் கொள்கைகளைப்பற்றி நிரம்ப ஆராய்ச்சி செய்தவர்."

"அப்படியென்றால்.........? எனக்கு அது புரியவில்லையே!"

"ஷில்லிங் என்பவர் பிரபல ஜெர்மன் தத்துவசாஸ்திர நிபுணர். அவருடைய தத்துவ ஆராய்ச்சியின் உட்பொருள் என்னவென்றால்"......

"ஆண்ரே, தயவுசெய்து அந்த ஷில்லிங் தத்துவத்தைப்பற்றி உபன்யாஸம் ஆரம்பித்து அவளைத் தொல்லைக்குள்ளாக்கிவிடாதே." என்று ஷூபின் கேலியாகச் சொன்னான்.

"உபன்யாஸமில்லை. நான் சொல்வதென்னவென்றால்......"

"ஏன் பிரசங்கிக்கக் கூடாது? உங்களுக்கும் சரி, எனக்கும் சரி, விஷயங்கள் விளங்கவேண்டுமானால் பிரசங்கங்கள் எவ்வளவோ அவசியமில்லையா?" என்று கலினா கேட்டதும், ஷூபின் அவளைக் குறும்பாக நோக்கிவிட்டுச் சிரித்தான். அவளுக்குச் சிறிது கோபமுண்டாய்விட்டது.

"எதற்காக இந்தச் சிரிப்பு?" என்று கலினா கேட்டாள்.

“இதோ பார், இந்தமாதிரி சமயத்திலே தத்துவ ஆராய்ச்சி எதற்கு? எத்தனையோ விஷயங்கள், புஷ்பங்கள், பாட்டுகள், பருவகாலத்துக்கேற்ற கனவுகள் எல்லாம் இல்லையா? அதைப்பற்றிப் பேசுவோமே”—

“ஆமாம், பிரெஞ்சு நாவல்கள், காமக்கதை நூல்கள், ஸ்திரீகளைப்பற்றிய...பெரிய வைத்தியர் என்று பெருமை கொள்ளும் உங்களுக்கு இந்தமாதிரி வீண் விஷயங்களில் தானே புத்தி செல்லும்? எதற்காக நல்ல விஷயங்களைப் பற்றி விவாதிப்போர்களிடையே நீங்கள் அநாவசியமாகத் தலையிடவேண்டும்?” என்று எவினு கொஞ்சம் கோபமாகவே கேட்டுவிட்டான்.

டாபினுக்குக் கோபத்தால் முகம் சிவந்தது. ஆசனத்திலிருந்து எழுந்து “நான் இங்கிருப்பது உனக்குப் பிடிக்கவில்லை. என்னை அனுப்பிவிட விரும்புகிறாய். இல்லையா?” என்று படபடப்பாகக் கேட்டான்.

“நான் இங்கிருந்து உங்களை அனுப்பவேண்டுமென நினைக்கவேயில்லை.”

“இல்லை இல்லை. நான் இருப்பது உனக்கு இடைஞ்சலாய்த்தான் இருக்கிறது. போய்விடுகிறேன்,” என்று கூறிவிட்டு, அந்தக் கவியின் உருவத்தை இடித்துத் தள்ளிவிட்டு, விடுவிடென்று தோட்டத்தைவிட்டுப் போய்விட்டான்.

“ஏனோ அவன் ஒரு குழந்தைமாதிரி நடந்துகொள்கிறான்!” என்று எவினு சொன்னதும், பெர்ஸனேவ் ஆமோதித்துத் தலையசைத்தவனாய் “ஆமாம். அவன் ஒரு வைத்தியன். எல்லா வைத்தியர்களுமே அப்படித்தான். நாம் அதை அனுசரித்துத்தான் போகவேண்டும்!” என்று பதில் அளித்தான்.

“சரிதான். அவர்கள் குணம் அவர்களுக்குத்தான் பிடிக்கும். நாம் இப்படிக் கொஞ்ச தூரம் உலாவி வரலாம். இத்தனை நேரம் அவன் இருந்ததால் நாம் சரியாகச் சம்பா

ஷிக்க முடியவில்லை. நீங்கள் எங்கள் தகப்பனாருடைய ஆராய்ச்சிகளைப்பற்றிச் சொன்னீர்கள். மேற்கொண்டு சொல்லுங்கள். வாருங்கள் போகலாம்,'' என்று கூறியபடி அவனுடன் கைகோர்த்துக்கொண்டு நடந்தாள். ஆனால் சம்பாஷணைக்குப் பதிலாக அச்சமயத்தில் அவர்களிடை மௌனம்தான் நிலைத்தது. ஏதோ இரண்டொரு வார்த்தைகளை அவன் சொன்னான். அவள் மிகவும் கவனமாகக் கேட்டாள். கம்பீரமும் நிதானமும் கொண்ட அவன் பேச்சுக்கள் அவளை எந்த ஒருவகையில் ஆகர்ஷித்தன. அவனிடம் அவளுக்கு ஒரு அலாதியான கவர்ச்சி ஏற்பட்டது. அவள் ஹிருதயத்திலே தனி மலர்ச்சியும், புளகமும் உண்டாயிற்று. அவளே, தான் ஏதோ ஒருவிதத்தில் வெற்றியடைந்துவிட்டதாகத் தீர்மானித்து, இன்பக் கனவு காண்பதிலும் குறைவைக்கவில்லை.

## நான்காவது அத்தியாயம்

தோட்டத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற ஷூபின் தன்னுடைய அறையைவிட்டு இருட்டிப் போகும்வரை வெளியே வரவில்லை. வானத்தின் மத்தியில், சந்திரன் நட்சத்திரங்கள் புடைசூழ பவனி வந்து கொண்டிருந்தான். அச்சமயத்தில் பெர்ஸனேவ், அன்னாவாஸிலிவ்னா, ஸோயா, எலினா முதலியோரிடம் விடைபெற்றுத் தனது நண்பன் அறைக்குச் சென்றான். கதவு தாளிடப்பட்டிருந்தது கண்டு, தட்டினான்.

"யார் அங்கே?'' என்று ஷூபின் இரைந்து கேட்டான்.

"நான்தான், கதவைத்திற'' என்றான் பெர்ஸனேவ்.

"என்ன வேண்டும் உனக்கு?'' என்று மீண்டும் ஷூபின் கதவைத் திறக்காமல் கேட்டதும்.

"ஷூபின், வெட்கமாயில்லையா உனக்கு? பிடிவாதம் அழகல்ல; கதவைத்திற,'' என்றான் பெர்ஸனேவ்.

“ நான் லோயாலைப்பற்றிக் கனவு காண்கிறேன் !”

“ சரிதான். குழந்தைத் தனம் போதும். கதவைத் திற முதலில். ”

“ எலினுவுடன் திருப்திபாகும்வரை பேசிக்கொண் டிருந்தா யல்லவா ?”

பெர்ஸனேவ் இக்கேள்விக்குப் பதில் அளிக்காமல் அவன் கதவு திறப்பான் என்று சற்றுப் பொறுத்தான். ஆனால் ஷுபின் பதில் கூறாமல் குறட்டைவிட ஆரம்பித் தான். இனிப் பயன் இல்லை என்று எண்ணியவாறு பெர்ஸ னேவ் வீடு திரும்பினன். திரும்புகாலில் அவனுடைய நினைவெல்லாம் எலினுவைப் பற்றித்தான். அவளை நினைத்த உடனேயே தனக்கு உண்டாகும் உள்ளப் பூரிப்பையும் கட்டுக்கொள்ளா ஆநந்தத்தையும் .....அவனுடைய நினைவு ஒரு பக்கத்தில் பரவசம், ஒரு பக்கத்தில் வேதனை, கனவு கள் எல்லாவற்றையும் உண்டு பண்ணிற்று. அவனுடைய இதயத்தில் அந்தப் பெண் பூரணமாகக் குடிகொண்டு ஆட்சி செலுத்தினுள் என்றாலும் மிகையாகாது. கனவில் நடப்பவன் போன்று அவன் நகர்ந்து கொண்டிருந்தான். கொஞ்ச தூரத்தில் ஏதோ அரவங்கேட்டது. திடுக்கிட் டுத் திரும்பினன். அங்கே ஷுபின், தலையில் தொப்பிகூட இல்லாமல் வந்தான்.

“ நீ இந்த வழியாகத்தான் வருவாய் என்று எனக் குத் தெரியும். உன்னைப் பார்க்காவிட்டால் இரவு பூராவும் எனக்குத் தூக்கம் வாராது. வீட்டுக்குத்தானே போகி ருய் ?” என்று ஷுபின் கேட்டதும், ஆச்சரியத்துடன் “ஆமாம், ஆனால் உன் தலையில் ஏன் தொப்பிகூட இல்லை ,” என்று கேட்டான் பெர்ஸனேவ்.

“ பரவாயில்லை. கைக்குட்டைபோதும் !” என்று சொல்லிவிட்டு நடந்த ஷுபின் சிறிதுநேரம் மௌனமா யிருந்த பின்னர், “ இன்று நான் ரொம்ப முட்டாள் தன

மாய் நடந்து கொண்டேன், இல்லையா?" என்று கேட்டான்.

"ஆமாம். நிஷ்பக்ஷபாதமாகச் சொல்ல வேண்டுமானால் நீ முட்டாள் தனமாய்த்தான் நடந்து கொண்டாய். இப்படி நீ நடந்து கொள்வாய் என்று நான் நினைக்கவேயில்லை," என்றான் பெர்ஸனேவ்.

"வாஸ்தவம். ஆனாலும் நான் முட்டாள்தனமாய் நடந்து கொண்டது என்னுடைய மனப்பிரமையால்தான்" அதாவது ஒரு...ஒரு வேகத்தில்—உண்மையைச் சொல்ல வேண்டுமானால்—உன்னிடம் சொல்வதற்கென்ன? நான் எலிஸாவைக் காதலிக்கிறேன்! என்றான் ஷுபின். பெர்ஸனேவ் ஒரு நிமிஷம் ஸ்தம்பித்து நின்று "நீ எலிஸாவைக் காதலிக்கிறாய்...என்று திரும்பியும் சொன்னதும்," ஆமாம், உனக்கு ஆச்சரியமாயிருக்கிறதா? மீதியையும் சொல்லிவிடுகிறேன். இன்று மாலைவரை அவள் என்றாவது என்னைக் காதலிப்பாள் என்று நம்பியிருந்தேன். ஆனால் இன்று அந்த நம்பிக்கை சிதறிவிட்டது. அவள் வேறு ஒருவரைக் காதலிக்கிறாள்!

"வேறு ஒருவரையா? அது யாரை?"

"யாரையா?—உன்னைத்தான்!" என்று ஷுபின் ஒருமாதிரியாகச் சொல்லி அவன் தோளைத் தட்டினான்.

"என்னையா?" என்று கேட்டபடி திகைத்து நின்றான் பெர்ஸனேவ்.

"ஏன் இதுவும் உனக்கு ஆச்சரியமாயிருக்கிறதா? நீ ஒருமாதிரிப் பேர்வழி என்றாலும், அவளுக்கு உன்னிடம் தான் காதல். நீ அதை நிச்சயமாக நம்பலாம்.

"என்ன முட்டாள் தனமான பேச்சு இது?" என்று பெர்ஸனேவ் மறுத்துச் சொன்னான்.

"இல்லை. இதில் தவறு எதுவும் இல்லை. வா. "அப்படியே ஏன் நின்றுவிட்டாய்; போகலாம். போய்க்

கொண்டே பேசலாம். எனக்கு, அவளைப்பற்றி நன்றாகத் தெரியும். அவளுடைய மனதுக்கேற்றவன் நீதான். ஒரு சமயத்தில் நானும் அவளுக்கேற்றவனாக இருந்தது வாஸ்தவம் என்றாலும், என்னைவிட நீதான் அவளுக்குத் தகுதியானவன். அறிவிலும், திறமையிலும் சிறந்த நீதான்... உன்போன்றவர்களைத்தான் ரஷ்யாவின் மத்தியதரக் குடும்பத்துப் பெண்கள் விரும்புகிறார்கள். தவிரவும் அன்றொரு நாள், எலினா, நான் ஸோயாவை முத்தமிடுவதைப் பார்த்து விட்டாள்!"

"யாரை, ஸோயாவையா?"

"ஆமாம். அதுவும் நடந்துவிட்டதல்லவா? பிறகு நீயும் சமயத்தில் வந்தாய். அவளுக்குப் பிடித்தமான விஷயங்களைப் பேசினாய். உன் அறிவும் ஆண்மையும் அவளைக் கவர்ந்துவிட்டது. நான் பண்ணின தமாஷ்களில் கூட அவள் பிரியங் காட்டவில்லை"......

ஷுபின் மேலே பேசமுடியாது கண்ணீர்விட்டு அழலானான். பெர்ஸனேவ் அவன் அருகில் சென்று, "பேவல், இது என்ன விகாரம்? ஏதோ கன்னாபின்னாவென்று நினைத்துக் கொண்டு, குழந்தைமாதிரி அழுகை! நான் சொல்வதைக் கேள். மனதை முதலில் திடப்படுத்திக் கொள்," என்று தைரிய மூட்டினான்.

ஷுபின் நிதானமாக நிமிர்ந்தான். அவன் கண்ணீர்த் துளிகள் நிலவொளியில் மின்னின என்றாலும் அவன் முகத்தில் அலாதி மகிழ்ச்சிக்களையும் இல்லாமல் இல்லை. "ஆண்ட்ரே பெட்ரோவிட்ச், நீ என்னைப்பற்றி என்னவேண்டுமானாலும் நினைத்துக்கொள். நான் எலினாவைக் காதலிப்பதென்னவோ உண்மை. ஆனால், அவள் உன்னைக் காதலிக்கிறாள் என்பதும் என்னவோ உண்மை. உம்...சரி. நான் உன்னுடன் வீட்டுக்கு வருவதாகச் சொன்னேனே. வா, போகலாம்," என்று முன்னால் நடந்தான். பெர்ஸனேவும் தொடர்ந்தான். இருவரும் கொஞ்சதூரம் சென்றதும், இடையே இருந்த கடையொன்றில், ஒரு பெண்

ஏதோ சாமான் வாங்கிக் கொண்டிருந்தாள். ஷாபின் அவளைக் கண்டதும் 'அனுஷ்கா' என்று சகஜமாக அழைத்தபடி அவளண்டை நெருங்கினன். அவளோ இவனைக் கண்டவுடன் சாமான்களை எடுத்துக் கொண்டு அங்கிருந்து அவசரமாகப் புறப்பட்டாள். ஷாபின், பெர்ஸனேவிடம் "இங்கு எனக்குத் தெரிந்த ஒருவருடைய வீடு இருக்கிறது. இதோ...இதோ வந்துவிடுகிறேன்." என்று கூவியபடி ஓடுபவளைத் தொடர்ந்து ஓடினன்.

பெர்ஸனேவ் வீடு திரும்பியதும், ஷாபின் சற்றுமுன் சொன்னவைகளைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான். "இன்று இல்லாவிட்டாலும் என்ருவது ஒரு நாள் அவள் காதலிப்பாள். ஆனல் யாரைக் காதலிப்பாள்?" என்பதுதான் அவனுக்குப் பெரிய யோசனையாயிருந்தது. அவனுடைய அறையில் ஒரு 'பியானோ' வாத்தியம் இருந்தது. சிறுவயதிலிருந்தே அவன் மற்ற ரஷ்யர்களைப் போலச் சங்கீதத்தில் ஆசை கொண்டவன். பயிற்சியும் பெற்றிருந்தான். நன்ருகத் தேர்ந்த பாடகனில்லாவிட்டாலும், சங்கீதத்தில் நிரம்பப் பிரியமுடையவன். நெடுநேரம் யோசித்த பிறகு 'பேவல் உண்மையைத்தான் சொன்னன். என் வாழ்வில் இந்த நாளைப்போல், மகிழ்ச்சிக்குரிய மற்ருேர் நாள் வருவது துர்லபமே' என்று தீர்மானித்துக் கொண்டவனய், விளக்கைப் பற்றவைத்தான். பிறகு உடை மாற்றிக் கொண்டு சரித்திரப் புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தான். ஆனல் படிப்பில் அவன் கவனம் எப்படிச் செல்லும்!

## ஐந்தாவது அத்தியாயம்

அங்கே, எலினு தன்னுடைய அறையில், ஜன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு அதன் அருகில் அமர்ந்திருந்தாள். தினந்தோறும் படுக்கப் போகுமுன் ஒரு கால் மணி நேரமாவது அவள் இப்படி ஜன்னலருகில் உட்காருவது வழக்கம். அந்தச் சமயத்தில்தான் அவள் அன்று பகலில்

நடந்த சம்பவங்களை ஆர அமர யோசித்து ஆராய்வாள் அவளுக்கு இன்னும் இருபது வயதுகூட நிரம்பவில்லை. கவர்ச்சிகரமான உருவமுடைய அவள் அழகு தனி ரகம். துருதுருத்த பார்வையும், நளினமான பேச்சும் உடைய வள். அவள் பிறந்து வளர்ந்த விதமே ஒரு கதை! அவள் சிறு குழந்தையாயிருந்தபோது அவளிடம் தகப்பனார் நிரம்பப் பிரியமுடையவராயிருந்தார். ஆனால் அவள் பெரியவளாக ஆக அவருக்கு அவளிடம் பிரியமும் குறைந்தது. தவிரவும் கொஞ்சம் பயப்படவும் செய்தார். காரணம் அவள் விவரம் தெரிந்த நாள்முதல் தன் தாயிடம் நிரம்ப அன்பும் கவனமும் கொண்டதுதான். தன்னம்பிக்கையும், நிதானமும், கூர்மையுடன் புத்தியும் படைத்த அவளுக்குத் தகப்பனாரின் சில தவறான பழக்கங்களும் தெரிந்தன. தவிரவும், அவளிடம் காணப்பட்ட உறுதியும், உத்வேக உணர்ச்சிப் பெருக்கும், அவளை ஒரு புரட்சிக்காரியாகக்கூட குடியாசு மாற்றிவிடுமோ என்று எண்ணும்படியாகவும் இருந்தது. அவள் பலஹீனத்தையும், மூடத்தனத்தையும் அடியோடு வெறுத்தாள். வஞ்சனையையும் சுயநலத்தையும் கண்டால் அவளுக்குப் பிடிக்காது. எவரைப்பற்றியும் எளிதில் நிதானிக்கக் கூடிய திறமை உள்ளவள். பிறர் சொல்லிக் கேட்பதைவிட, தானே ஊகித்துக் கொள்ளுவதில்தான் அவளுக்கு அதிகப் பிரியம்.

அவளுடைய செவிலித்தாயாயிருந்தவள் ஒரு ருஷ்யப் பெண்மணி. சர்க்கார் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியவள். 'ஏதோ பிழைக்கவேண்டும்' என்று சாதாரணமாக எண்ணி, ஸ்வாரஸ்யமில்லாத வாழ்க்கையை நடத்துபவள். சுறுசுறுப்பும் இரக்க சுபாவமும் உடையவள். அவளுடைய கணவன், அவளை வஞ்சித்து ஒதுக்கிவிட்டான். ஆனாலும் இலக்கியத்தில் தனது கவனத்தையும், கருத்தையும் ஒருங்கே செலுத்தினாள் அம்மூதாட்டி. எலினாவுக்குப் படிப்பில் ருசி யூட்டியவள் அவளே. ஆனால் எலினாவின் அறிவுப்பசி படிப்புடன் நிற்காமல், அதென்ன? இதேன் இப்படி? என்று எதையும் ஆராய்ந்து அறிந்து

கொள்ளும் ஆர்வமும் இருந்தது. ஒரு சிறு குருவியோ, பூனைக்குட்டியோ, எவ்வளவு சிறிய ஜந்துவானாலும் சரி, அவைகள் ஒரு சிறு கஷ்டத்திற்குள்ளானாலும் எமிலியால பொறுக்க முடியாது.

எமிலிக்குப் பத்து வயதானபோது, அவளுடைய சிநேகிதையாக ஒரு பிச்சைக்காரப் பெண், 'காட்யா' என்னும் பெயருள்ளவள் இருந்தாள். எமிலி அவளுக்கு ரகசியமாகத் தின்பண்டங்களையும், காசுகளையும் கைக்குட்டை முதலிய சிறிய பொருள்களையும் தருவாள். ஆனால் அந்தப் பெண் அவைகளை வாங்கமாட்டாள். கிடைத்த வறட்டு ரொட்டியைத் தின்று கொண்டே எமிலியுடன் கதைகள் பேசிக் கொண்டிருப்பாள். காட்யாவுக்கு அத்தை ஒருத்தி உண்டு. அவள் காட்யாவைக் கண்டபடி அடித்துக் கொடுமைப் படுத்துவாள். காட்யாவுக்கு இந்த அத்தையிடமிருந்து தப்பி, கடவுளின் ராஜ்யத்தில்—அதாவது சுதந்தர வாழ்வை அனுபவிப்பது எப்போ என்று ஏங்குவாள். இந்தச் 'சுதந்தர வாழ்வு' என்ற வார்த்தை எமிலிக்குக் கேட்கக் கேட்க உணர்ச்சியும், உள்ளப் பரவசமும் உண்டாக்கும். கந்தை உடுத்தி, கிடைத்ததை உண்டு வாழும் அச்சிறுமியின் பேச்சுக்கள், அவளை நிரம்பவும் மகிழ்ச்சியும் மலர்ச்சியும் அடையச் செய்தது.

" இந்தக் காட்யாவுடன் நாமும் எங்காவது தனியாக ஓடிப்போய் ஏன் சுதந்திரமாக வாழக்கூடாது? பிச்சைக்காரர்கள் கூட விரும்பும் அந்தச் 'சுதந்தர வாழ்வை' நாமும் ஏன் அனுபவிக்கக் கூடாது? அவளுடன் ஓடிவிட்டால் சாலைகளிலெல்லாம் சுயேச்சையாகத் திரியலாம். சுற்றிலும் மலர்கள் கோர்க்கப்பட்டமாதிரி பாசிப் படர்ந்திருக்கும் என்றெல்லாம் கற்பனையில் நினைத்து அனுபவிப்பாள் எமிலி! ஒருநாள் காட்யாவைச் சந்திக்க நல்ல மழையில் சென்றாள். திரும்பும்போது சேற்றில் அவளுடைய உடைகள் நனைந்து கறைபட்டுவிட்டன. அவளுடைய தகப்பனார் இதைப் பார்த்துவிட்டு " தரித்திரம், ருஷியர்லம்

போவன்" என்றெல்லாம் திட்டுவார். எலினாவுக்குத் தகப்பனார் இப்படி ஏழைகளையும் அடிமைகளையும் திட்டுவது பற்றி ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. ஒருநாள் எலினா, அந்தப் பிச்சைக்கார காட்யா சொன்ன ஒரு பாட்டைப் பாடிக் கொண்டிருந்தாள். தாயார் இந்தப் பாட்டைக் கேட்டதும் பிரமிப்படைந்தவளாய் "இம்மாதிரி பாமர பாடல்களை யாரிடமிருந்து கற்றாய்?" என்று அதட்டிக் கேட்டாள். இதற்கு எலினா, ஏதும் பதில் சொல்லவில்லையென்றாலும், இந்தமாதிரி நல்ல பாட்டை இவர்கள் ஏன் விரும்பவில்லை என்று மட்டும் சிந்தித்தாள். ஆனால் அவளுடைய சிநேகிதை காட்யா அதிக நாள் உயிருடன் இருக்கவில்லை. ஏதோ கடுமையான ஜுரம்; கொஞ்ச நாளில் திடீரென்று இறந்துவிட்டாள். எலினாவுக்குக் காட்யாவின் இந்தத் திடீர்ச் சாவு பிரம்மாண்ட துக்கத்தைத் தந்தது. நெடுநாள் வரை அந்தப் பெண் பிள்ளையும், அவள் பேச்சும் கருத்தும் எலினாவின் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

பனிக் கட்டிகளினிடையில் நீர் துரிதமாகவும் சீராகவும் ஓடுவதுபோல வருஷங்கள் பல ஓடின. எலினாவும் யௌவனம் சோபைபெற்ற யுவதியானாள். அவளுடைய பதினாறாவது வயதுமுதல் ஒருவகையில் அவள் சுதந்திரமாகவே வாழ ஆரம்பித்தாள் என்று கூறலாம். தனிமையில் வாழ்ந்த அவள் கூண்டிலடைப்பட்ட பறவை போலத் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எதிலும் புத்தி ஓடவில்லை. அவளுக்கு யாரும் வலியதான தொந்தரவும் பண்ணிவிட்டாலும், அவளுக்கு என்னவோ தான் வேதனையடைவதாகவே தோன்றியது. அப்போதெல்லாம் வயது பதினெட்டாயிற்று. அப்போது அவளுக்கு வந்த ஜுரம் அவளை இன்னும் நிலைமாறச் செய்தது. யாருக்கும் பிடிக்காத—தெரியாத விஷயங்களிலும் காரியங்களிலும் அவள் கருத்து சென்றும்; திடீரென்று படபடப்பும் கோபமும் உண்டாகும். அதேமாதிரி அமைதியும் அடக்கமும் ஏற்பட்டுவிடும். ஆகவே, அவள் எதிலும் நிலை

யில்லாத ஒரு நினைவையும், இதைச் செய்யவேண்டும், அப்படிப் போனால் என்ன? என்றெல்லாம் எண்ணும் குணமுள்ளவளாயும் இருந்தாள். எனினும் தன்னடக்கமும் சீரிய சிந்தனையும் அவளை நிதானமாக வாழச் செய்தது. அவளுடைய விசித்திரமான போக்கைக் கண்டு பெற்றோரும் மற்றோரும் அதிசயித்தாலும் நல்ல குணமும் திறமும் உள்ளவள் என்று பிறரால் போற்றப்பட்டாள்.

நம் கதை ஆரம்பத்தில் சொன்னபடி எலினா அந்த ஜன்னலைவிட்டு நெடுநேரம் நகரவில்லை. பெர்ஸனேனைப் பற்றித்தான் அவள் நினைவெல்லாம் சென்றது. அவனுடைய பேச்சு, நடவடிக்கை யாவும் அவளுக்கு நிரம்பவும் பிடித்தது. அவனுடைய முகபாவம், உருவம் எல்லாம் அவளுடைய இதயத்தில் பதிந்திருந்தது. ஏதோ தன்னை மீறிவரும் உணர்ச்சி வேகத்துடன் அதற்கு மேலும் உட்கார முடியாது படுக்கையில் படுத்தாள்.

## ஆறாவது அத்தியாயம்

மறுநாள் பெர்ஸனேவ் மாஸ்கோவுக்குப் புறப்பட்டுவிட்டான். தபால் ஆபீஸிலிருந்து பணமெடுக்க வேண்டியிருந்ததாலும், புத்தகங்களும் வாங்கிவர வேண்டியிருந்ததாலும், முக்கியமாக இன்ஸரோவைப் பார்த்துவிட்டு வரவுமே அவன் மாஸ்கோவுக்குப் புறப்பட வேண்டியிருந்தது. ஷூபினுடன் முன்பு பேசியிருந்ததைப் போல் இன்ஸரோவைக் கிராமத்துக்கு அழைத்துவர விரும்பினான். ஆனால் இன்ஸரோவ் முன் இருந்த இடத்தில் இராமல் வேறு எங்கோ இடம் மாறியிருந்ததால் அவனைக் கண்டுபிடிப்பது பெர்ஸனேவுக்கு மிகவும் சிரமமாயிருந்தது! அவனைத் தேடி அலையாத இடமேயில்லை. சந்தும் பொந்துமாக நுழைந்து எத்தனையோ பேரைக் கேட்டும் பயனில்லை. கடைசியில் ஊர்க்கோடியில் ஏதோ ஒரு மூலையிலிருந்த தையற்காரன் ஒருவனின் வீட்டின் மூலை முடுக்குகளை ஆராயும்போது, ஒரு பெண்மணி மனம் இரங்கி, இன்ஸரோவ் இடத்தைக் காட்டினாள்.

அங்குதான் இன்ஸரோவ் அகப்பட்டான். மிகவும் பழைய வீடு; பச்சை வர்ண மடித்துள்ள சுவர்கள், கூரையில் தொங்கிய கூண்டுகள். ஒரு மூலையில் படுக்கை; ஒரு சின்ன ஸோபா.....ஆகிய சாதாரணமான உபகரணங்களைக் கொண்ட அந்தச் சிறு இடத்தில்தான் இன்ஸரோவ் தங்கியிருந்தான். பெர்ஸனேவ் அங்கு வந்தவுடன், ‘அடேடே நீயா, வாவா! ரொம்ப சந்தோஷம்!’ என்றெல்லாம் தடபுடல் செய்யாமல் இன்ஸரோவ், பெர்ஸனேவைச் சாதாரணமாக ஆனால் பிரியத்துடன் வரவேற்றுத் தன் பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்காரச் செய்தான்.

“இன்னும் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லை. நமக்கேற்றபடி சரியான இடமும் கிடைக்கவில்லை,” பக்கத்தில் கிடந்த புத்தகமும் பேப்பர்களும் அடங்கிய குவியலைக் காட்டினான் இன்ஸரோவ்.

இன்ஸரோவ் ரஷ்ய பாஷையை உச்சரிப்புத் தவறில்லாமல் பேசினான். என்றாலும், அவன் ரஷ்யனாயிருக்க முடியாது என்று அப்பேச்சே காட்டும். அவன் பல்கேரியன். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கலாம். மார்க்கூடுமின்றி, மெலிந்த கைகால்களையுடையவனாயிருந்தாலும், பார்வைக்கு மோசமாயில்லை. வளைந்த மூக்கு, குழி விழுந்த கண்கள், கருநீல மயிர்த்தலை, அகன்ற வாயுமுடைய அவனிடம், அலாதி கம்பீரமும் குடிகொண்டிருந்தது.

“ஏன் அந்தப் பழைய வீட்டைவிட்டு வந்தாய்?” என்று பெர்ஸனேவ் கேட்டான்.

“இது வாடகை குறைவு; தவிர, கல்லூரிக்கு அருகிலும் இருக்கிறது.”

“இப்பொழுதுதான் விடுமுறை நாளாயிற்றே, எதற்காக நீ இப்பொழுது நகரத்திலிருந்துகொண்டு இந்தக் கோடைகாலத்தில் அவஸ்தைப் படவேண்டும்? எங்கேயாவது ஒரு கிராமாந்திரத்திலே போய்த் தங்கியிருந்தாலும் நல்லதில்லையா?”

இன்ஸரோவ் பதில் ஒன்றும் சொல்லாமலிருந்தான்.

"நான் இருக்கும் இடத்திற்கு நீயும் வருவதற்கென்ன? அங்குத் தாராளமாய் இடமிருக்கிறது. நானே உனக்கு இடவசதி செய்து கொடுக்கமுடியும்." என்றான் பெர்ஸனேவ்.

"என்னால் முடியாதப்பா, முடியாது. அவ்வளவுக்குச் செலவழிக்கப் பணம் வேண்டாமா? இங்கே வேறு, அங்கே வேறு என்று இடம்பிடித்து வசிப்பது என் நிலைமைக்குச் சாத்தியப்படுமா?" என்று கேட்டான் இன்ஸரோவ்.

"அதைப்பற்றி உனக்கென்ன? அங்கு எல்லாம் மலிவு. அதிகமாகச் செலவழிக்க வேண்டிய பிரமேயமே யில்லை. நான் அவைகளைச் சமாளித்துக் கொள்வதாகச் சொல்லும்போது, நீ என்னுடன் வசித்தால்......எப்படியிருந்தாலும் நீ ஒரு தடவையாவது என்னிடம் வரவேண்டும். என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு குடும்பத்தார் உள்ளனர். அவர்களை உனக்கு அறிமுகப் படுத்திவைக்க விரும்புகிறேன். அக் குடும்பத்தில் அதியற்புதமான ஒரு பெண்கூட இருக்கிறதப்பா! எனக்கு மிகவும் நெருங்கிய நண்பன் ஒருவனும் இருக்கிறான். ரொம்பவும் குதூகல புருஷன் அவன். ஆகவே, நீ கட்டாயம் அங்கு வந்து தான் ஆகவேண்டும். தவிரவும் நாம் இருவரும் சேர்ந்து படிப்பதற்கும் சௌகரியமாயிருக்கும் இப்பொழுது நான் சரித்திரத்திலும், தத்துவத்திலுமுள்ள ஆராய்ச்சிகளைப் படித்து வருகிறேன். நிறையப் புத்தகங்களும் வைத்திருக்கிறேன். இவ்வளவும் இருக்கும்போது நீ வருவதற்கேன ஆக்ஷேபனை செய்யவேண்டும்?" என்று பெர்ஸனேவ் திரும்பவும் கேட்டதும், இன்ஸரோவ் உடனே பதில் கூறாது அறையில் அங்குமிங்கும் நடந்து கொண்டே யோசித்தான். பிறகு சடசடென்று ஏதோ தீர்மானித்தவன் மாதிரி,

"உன்னுடைய வீட்டுக்கு நீ எவ்வளவு வாடகை கொடுக்கிறாய்?" என்று கேட்டதும், பெர்ஸனேவ்,

"நூறு ரூபிள் தருகிறேன்" என்றான்.

"எத்தனை அறைகள் உள்ளன?"

"ஐந்து"

"ஆகவே ஒரு அறைக்கு இருபது ரூபிள்களாகும்."

"அது கிடக்கட்டும். அறைகள் காலியாய்த்தானே கிடக்கிறது."

"இருக்கலாம். ஆனால்......நான் அந்த அறைக்கு வாடகை தருவேன். நீ மறுக்காமல் ஒப்புக் கொண்டாலன்றி, நான் வந்து அங்கு தங்கமுடியாது. இருபது ரூபிள்கள் என்னால் கொடுக்க முடியும்."

"உண்மைதான். ஆனால் உன்னிடமிருந்து வாடகை வாங்குவதென்பது என்றால் முடியுமா? எனக்குத் தகுதியாகுமா?"

"இல்லை என்றால் என்னாலும் வரமுடியாது."

"சரி. அப்புறம் உன்னிஷ்டம். என்ன இருந்தாலும் நீ பிடிவாதக்காரன்," என்று பெர்ஸனேவ் ஒப்புக் கொண்டதும், இன்ஸரோவும் இணங்கினான். வீட்டுக்காரனை தையல்காரனிடம் அப்பொழுதே தெரிவித்து விட்டனர். முன்னால்தான் போய் நண்பனை வரவேற்பதற்காக பெர்ஸனேவ் புறப்பட்டான். அவனை வழியனுப்பிவிட்டு இன்ஸரோவ் மீண்டும் தன் வேலைகளைக் கவனிக்கலானான்.

## ஏழாவது அத்தியாயம்

அதே நாள், சாயங்காலத்தில் அன்னுவாஸிலிவ்னு தன் அறையில் உட்கார்ந்து கொண்டு அழாக்குறையாகத் தவித்துக் கொண்டிருந்தாள். அவளுடன் நிகோலை ஆர்ட்டமிவிட்சும், அவருடைய ஒன்றுவிட்ட சகோதரனை உவார் ஐவனுவிட்ச் ஸ்டாஹோவும் இருந்தார்கள். அவருக்கு வயது அறுபதிருக்கலாம். அவர் மாஸ்கோவிலேயே வசித்து வருபவர். எப்பொழுதாவது இங்கு வருவதுண்டு.

நிகோலை ஆர்ட்டமெய்விட்ச். அறையில் அங்குமிங்கும் நடந்தார். அவருடைய கைகள் சட்டைப் பைகளில் நுழைந்திருந்தன. அவருடைய முகத்தில் அதிருப்தி தாண்டவமாடியது. கடைசியில் எப்படியோ சமாளித்துக் கொண்டு நிமிர்ந்த பார்வையுடன் நின்றவராய் "ஆமாம், நம்ம காலத்து வாலிபர்களுக்கும் இக்காலத்தவருக்கும் எவ்வளவோ வேற்றுமை. அக்காலத்தில் பெரியவர்களிடத்தில் இளைஞர்கள் பணிவாக நடக்கவேண்டும். இப்போது அதெல்லாம் ஏது? எல்லாம் அதிசயமாகத்தான் இருக்கிறது. என்ன உவார் ஐவனுவிச்! நான் சொல்வதுபற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டார். உவார் ஒரு பார்வையுடன் மௌனமாயிருந்தார்.

"எலினு நிகோலவ்னுவைத்தான் பாரேன். என்னமோ விசித்திரமாய் நடந்து கொள்கிறாள். பெற்ற தகப்பனைத் தவிர மற்ற எல்லாரையும் ஏன்? ஒரு சிறு தவளை, பூச்சியைக் கூட அவள் அதிகமாக விரும்புகிறாள்! இருக்கட்டும், நான் அதற்காகக் கவலைப்படவில்லை. அவள்தான் அப்படியென்றால் அந்த ஷாபின்—மகா பெரியவனைப் போல் நம்மிடம் கொஞ்சமும் மதிப்பில்லாமல், சேச்சே! எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை வேண்டாமா என்ன? இதெல்லாம் நம்மால் பொறுக்க முடியாது."

"நம்ம தயவு வேண்டுபவனுக்குக் கூடவா இன்று இத்தனைத் தடபுடல்!" என்று படபடவென்று பேசினார். அன்னுவாஸிலிவ்னு பக்கத்திலிருந்த மணியை அழுத்த வேலையாள் ஒருவன் வந்தான்.

"ஏன் பேவல் யாகொலேவிட்ச் இங்கு வரவில்லை. நான் அழைத்தும் கூட ஏன் வராமல் இருக்கிறான்?" என்று கேட்டாள். நிகோலை ஆர்ட்டமெய்விட்ச் தோளை அசைத்துக் கொண்டு, "எதற்காக அவனைக் கூப்பிட வேண்டும்? இதெல்லாம் எதற்காக என்று எனக்குப் புரியவில்லை என்றதும், அவள் "உங்களுக்கு என்ன? அவன் தான் உங்களை என்ன கஷ்டத்துக்குள்ளாக்கி விட்டான்.

என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ளவேண்டாமா? ஏன் உங்களை அவன் வருந்தச் செய்யவேண்டும்?" என்றாள்.

"திரும்பவும் பார். அதெல்லாம் வேண்டாம்."

"ஏன் வேண்டாம். பெடுஷ்கா! நீ போய் பேவல் யாகொலாவிட்சை அழைத்துக் கொண்டுவா, என்றாள் அன்னவாஸிலிவ்னு. அவள் போய்விட்டாள். நிகோலே ஆர்ட்டமெய்விட்ச் 'நான் இதற்காக இந்த விஷயத்தைச் சொல்லவில்லை' என்று முணுமுணுத்தார்."

"அவன் உங்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்."

"அடேயப்பா! இந்த மன்னிப்பால் என்ன பயன்? எல்லாம் வார்த்தையளவில் தான்!"

"ஏன், எப்படியாவது அவனை ஒழுங்காக இருக்கச் செய்ய வேண்டாமா?"

"ரொம்ப சரி, நீயே கேட்டுக் கொண்டு, அவனை ஒழுங்குபண்ணு, எனக்கு அதிலே அக்கறையில்லை."

"இல்லை, இல்லை நீங்கள் இங்கு வந்ததிலிருந்து இளைத்துவிட்டீர்கள். உங்கள் மனம் சரியாகவே இல்லை. வைத்திய சிகிச்சையும் பிரயோசனமில்லை."

"ஆமாம் என்னமோ சிகிச்சை, ஈரல் கெட்டுக் கிடக்கு" என்று நிகோலே ஆர்ட்டமெய்விட்ச் கூறும் போது ஷூபின் உள்ளே நுழைந்தான். அவன் களைத்தவனுக இருந்தாலும், உதட்டில் ஏளனச் சிரிப்பு தாண்டவமாடியது.

"நீங்கள் என்னைக் கூப்பிட்டீர்களாமே?" என்று அன்னவாஸிலிவ்னுவைக் கேட்டான் ஷூபின்.

"ஆமாம். உன்னைத்தான் நீ இப்படியெல்லாம் நடந்து கொள்வது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. உன்னால் என் மனம் ரொம்பவும் வேதனையடைகிறது. நிகோலே

ஆர்ட்டமெய்விட்சிடம் மரியாதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று உனக்குத் தெரியவேண்டாமா ?"

" ஓஹோ, உங்களிடம் அவர் என்னைப்பற்றிக் குறை கூறிக் கொண்டாராக்கும் !" அப்பொழுதும் அந்த ஏளனப் புன்னகை அவனிடமிருந்தது.

" ஆமாம் என்ன நடந்ததென்பது பற்றி எனக்கு அவசியமில்லை. ஆனல் நீ உடனே அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர் உடம்பும் பலஹீனமாயிருக்கிறது. இளைஞர்கள் பெரியவர்களிடம் மதிப்பும் அன்பும் காட்டி நடந்து கொள்வது நல்லதல்லவா ?"

ஆ ! என்ன ஹிதோபதேசம் ! என்று ஷூபின் நினைத்தவனய், " நிகோலை ஆர்ட்டமெய்விட்ச், உண்மையாக நான் தங்களிடம் தவருக நடந்திருந்தால் மன்னிப்புக் கேட்கத் தயார் " என்ருன்.

' நான் ஒன்றும் அம்மாதிரி எண்ணத்துடன்...... சொல்லவில்லை. எப்படியிருந்தாலும், நான் பொறுத்துக் கொள்கிறேன். உனக்கே தெரியும், நான் அப்படியொன்றும் கல்நெஞ்சக்காரன் அல்லவென்று !' என்ருர் நிகோலை ஆர்ட்டமெய்விட்ச்.

" ஓ ! அது என்னமோ உண்மைதான். ஆனல் அன்னவாஸிலிவ்ன நடந்ததென்னவென்றும், என் குற்றமின்னதென்றும் அறிவாளோ ?" என்று கேட்டான். அன்னவாஸிலிவ்ன தனக்குத் தெரியாதென்று தலையை ஆட்டிக் கொண்டே சொன்னதும், நிகோலை ஆர்ட்டமெய்விட்சுக்கு அசாத்தியக் கோபம் வந்துவிட்டது. " அப்பப்பா ! எப்போ பார்த்தாலும் எதிர்ப்பு, மன்னிப்பு, பிறகு வியாக்கியானம் ! வீட்டுக்கு வந்தால் ஒரு நிம்மதி, சந்தோஷம் வேண்டுமே ! எப்போதாவது எங்கேயாவது ஒருநாள் இல்லாவிட்டால்—ஒருநாளைக்குத்தொலைந்துவிட்டாலன்றி இந்தத் தொல்லைகளினின்றுந் தப்பமுடியாது. சீக்கிரமே

தொலைந்தால்தான் நலம் !" என்று கூறிக்கொண்டே வெளியேறினார் அவர்.

அன்னவாஸிலிவ்னுவுக்கு, அவர் எங்கு போகிறார் என்று தெரியும். "கிளப்புக்கா...இல்லை இல்லை என்னுடைய அருமையான குதிரையைக் கொண்டு போய்க் கொடுத்து,......அவளிடம் தானே போகிறீர் எனக்குத் தெரியாதா ? கிளப்பில் குதிரையைப் பெற்றுக் கொள்பவர் எவருமில்லை. உங்களுக்கு வெட்கமேது ?" என்று ஆத்திரத்துடன் புலம்பிவிட்டு, "ஸோயா, ஸோயா எங்கே ? எனக்குத் தலைவலி மண்டையை உடைக்கிறதே," என்று தவித்தாள்.

"அவள் ஒருவேளை மாடி அறையில் இருக்கலாம். இம்மாதிரி ஏதாவது சச்சரவு நடக்கும் சமயங்களில் அந்தச் "சின்னக் குள்ளநரி எங்கேயாவது பதுங்கிவிடும் !" என்று சொல்லிக் கொண்டே ஷூபின், அவளைத் தொடர்ந்தான். இதற்குள் உவார் ஐவனேவிட்ச்சின் கட்டைக் குரலைக் கேட்டுத் திரும்பினான்.

"நானுயிருந்தால் உன்னை என்ன செய்திருப்பேன் தெரியுமா ?" என்று, உவார் ஐவனேவிட்ச் உறுமினான்.

"ஐயா, பெரியவரே ! அப்படி நான் என்னதான் செய்துவிட்டேன் !"

"நீ இன்னும் இளைஞன், பெரியவர்களிடம் மரியாதையாக இருக்கவேணும், ஆமாம் !"

"மரியாதையாகவா ? யாரிடம் ?"

"யாரிடமா ? யாரிடம் என்று உனக்குத் தெரியும் ! போபோ !"

ஷூபின் கைகளைக் கட்டியபடி, "நாடகத்தில் நடிப்பவன் போன்று என்னமோ ஆட்டம் ஆடுகிறுயே ! என்ன விஷயம் ?" என்று கிண்டலாகக் கேட்டதும், உவார் ஐவனேவிட்ச் கைகளை மடக்கிக் கொண்டு, "இதோ பார்,

என்னை...! ஏன்—என்னுடைய கோபத்தைக் கிளறாதே !" என்றான்.

" ஆஹா, சீமானே, என்ன அற்புதமான நம்பிக்கை, மரியாதை வேண்டுமாக்கும் ? உமக்குத் தெரியுமா, என் நிகோலை ஆர்ட்மெய்விட்ச் என்னிடம் கோபம் அடைந்தானென்று ? இன்று பூராவும் நான் அவருடன் அந்த ஜெர்மன் ஸ்திரீயின் வீட்டில் இருந்தேன். நாங்கள் மூவரும் ஆடினோம்—பாடினோம். ஆனந்தமாக இருந்தோம். உமக்கும் அது தெரிந்திருக்கலாம் ஒரு வேளை. குஷியாக இருந்த சமயம் நானும் அவரிடம் ஏதோ இரண்டொரு வார்த்தை கிண்டலாகப் பேசினேன். தமாஷ் பேச்சு தடித்து சூழ்நிலை அடைந்தது. அவள் என்னை முதலில் கோபித்தாள். பிறகு அவரைக் கோபித்தாள். அவர் அவளைக் கோபித்தார். கோபித்துவிட்டு " இதென்ன நரகம் ?" என்று பற்றற்றுப் பேசிவிட்டு இந்த ஸ்வர்க்கத்துக்குத் திரும்பி வந்தார். இந்த ஸ்வர்க்கமும் ' புளித்துப் போய் விட்டது. இப்பொழுது மீண்டும் நரகம் என்றே சில இடங்களுக்குப் போய்விட்டார். விஷயம் இப்படியிருக்க யாரைக் குறை கூறுவதென்று சொல்லுமே பார்க்கலாம்," என்றான் ஷுபின்.

" உன்னைத்தான் குறைகூற வேண்டும் என்று உவார் ஐவனோவிட்ச் சொன்னதும், ஷுபின் சிரித்துவிட்டு " ஆமாம் உன்னுடைய அபாரமான திறமையும் அனுபவமும் இந்த ஆராய்ச்சிக்குத்தான் ஏற்றதாகும் !" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான். சமையற்காரன் கொணர்ந்து வைத்த ஆகாரத்தின் அருகில் உட்கார்ந்த உவார் ஐவனோவிட்ச் என்ன வைத்திருக்கிறான் சாப்பிட என்று கூடப் பாராமல் சாராயத்தைக் கொஞ்சம் அதிகமாகக் குடித்துவிட்டு எங்கேயோ கவனமாகக் கைக்குட்டையை விரித்தபடி நெடுநேரம் உட்கார்ந்திருந்தான். எவ்வளவு நேரம்தான் சமையற்காரன் காத்திருக்க முடியும் ?"

ஆகார பாத்திரத்தை எடுத்து உள்ளே வைத்துவிட்டு சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே போய் விட்டான் அவனும். ஆனால் விரித்த கைக்குட்டையை மூடாமல் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையாமல் சுவற்றையும், தரையையும், ஜன்னலையுமாக மாறிமாறிப் பார்த்த வண்ணம் அங்கேயே உட்கார்ந்திருந்தான் உவார் ஐவனோவிட்ச்.

## எட்டாவது அத்தியாயம்

ஷுபின் திரும்பவும் தன் அறைக்குச் சென்று ஏதோ ஒரு புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்தபோது, நிகோலை ஆர்ட்டெமெய்விட்ச்சின் ஆள் ஒருவன் அவனுக்கு ஒரு கடிதம் கொண்டு வந்தான். அதில் "இன்று காலையில் நாங்கள் மிகவும் அந்தரங்கமாக ஒரு பிராமிஸரி நோட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். இது குடும்ப விஷயம். நீ இதில் தலையிட்டுக் கொள்வது எனக்குப் பிடிக்கவும் இல்லை. நீயும் ஒதுங்கியிருந்தால்தான் நல்லது என்று அறியவேண்டும். குடும்ப ரகஸ்யங்கள் எப்பொழுதும் மதிப்புக்குரியவைகளல்லவா?" என்று எழுதியிருந்தது. ஷுபின் அதனடியிலேயே பென்ஸிலால் "தங்களை இதன் காரணமாக அதிக சிரமப்படுத்திக் கொள்ளவேண்டாம்." என்று எழுதி அனுப்பிவிட்டு, மீண்டும் புத்தகத்தைப் பிரித்தான்.

ஆனால், அவன் கவனம் புத்தகத்தில் செல்லவில்லை. தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்த எலினாவை அவன் கண்கள் பார்த்துவிட்டன. மெதுவாக எழுந்து அவளைத் தொடர்ந்தான். அண்டையில் நெருங்கியதும் "என்னைத் திரும்பிப் பார்க்கவேண்டாம், அவ்வளவுக்கு நான் கொடுத்து வைத்தவனில்லை," என்று கைஸாகச் சொன்னதும், அவள் திரும்பிப் பார்த்து லேசாகச் சிரித்துக் கொண்டே, தோட்டத்தின் பிற்பக்கம் நோக்கி நடந்தாள். அவனும் தொடர்ந்தான்.

"எலினா, நேற்று நான் விபரீதமாக நடந்து கொண்டதைப்பற்றிப் பெரிதும் வெட்கப்படுகிறேன். உன்னைப் பார்த்துப் பேசவும்கூட லஜ்ஜையாக இருக்கிறது. அவ்வளவு முட்டாள்தனமாக நான் நடந்து கொண்டுவிட்டேன். ஆனால் நீ என்மீது கோபம் கொண்டிருக்கமாட்டாய். இல்லையல்லவா?" என்று ஷாபின் மீண்டும் கேட்டதும் அவள் பதில் எதுவும் சொல்லாமல் அப்படியே நின்றாள். அவள் அப்படி நின்றது கோபத்தால் அல்ல. தன்னுடைய சிந்தனையை ஒழுங்குபடுத்தவே. கடைசியாக, "இல்லவே யில்லை. நான் உன்னிடம் ஆத்திரம் அடையவேயில்லை," என்றாள்.

"அப்படியா? ஒரு உதாரணம் கேள் எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவனுக்கும் ஒரு சிநேகிதன் இருந்தான். அவன் முதலில் பெருந்தன்மையுடையவனாகத் தான் இருந்தான். ஆனால் கொஞ்ச காலத்தில் குடிக்கப் பழகிக் கொண்டான். ஒருநாள் அவன் குடித்துத் திரிந்த போது நண்பன் அவனைச் சந்தித்தான். அவனைப் பார்க்க வும் பிடிக்காமல் என் நண்பன் முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால் அவனோ ஓடிவந்து 'நீ திரும்பிக் கொண்டு என்னைப் பார்க்காவிட்டாலும் நான் உன்னைக் காணாமல் இருக்க முடியாது' என்றான். அதுபோல் நானும் இப்போது தவிக்க வேண்டியிருக்கிறது! என்று ஷாபின் அளந்தான்.

"இவ்வளவுதானா?" என்று கேட்டாள் எலினா.

"ஆமாம். இவ்வளவுதான்."

"அப்படியானால் நான் என்னதான் செய்யவேண்டும்?"

"ஏன் என்னிடம் இப்படி பராமுகமாய் இருக்க வேண்டும் நீ?" என்று ஷாபின் கேட்டதும், எலினா திரும்பி தன் கையை நீட்டினாள். அவன் மகிழ்வுடன் குலுக்கினான்.

“ நீ என்னைப்பற்றி நினைத்தது தவறு. என் மனதில் உன்னைப்பற்றி வேற்றுமை உணர்ச்சி எதுவும் புகவில்லை. உன்னுடைய கட்டளை விலக்க வேண்டும் என்ற நினைவுகூட வரவில்லை,” என்றாள் எலினா.

ரொம்ப சந்தோஷம். ஆனால் நீ இப்போது அதிசயமான எண்ணங்களைச் சிந்திக்கிறாய். ஆனால் என்னிடம் ஒன்றுகூடச் சொல்லமாட்டாய். நான் கூறுவது சரிதானே?

“ அப்படியும் இருக்கலாம்.”

“ ஏன் அப்படி?”

“ என் எண்ணங்களைப் புரிந்து கொள்ள எனக்கே முடியவில்லை.”

“ அப்படியானால் யாரிடமாவது கூறிக் கொள்ள வேண்டும். ஆனால் நான் உன்னையொன்று சொல்லிவிடுகிறேனே அதாவது நீ என்னைப்பற்றி ஏனோ அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் கொள்ளவில்லை!”

“ நானா?”

“ ஆமாம் நீயதான். டம்பாச்சாரி, தற்பெருமைக் காரன், எதையும் பூரணமாகச் செய்ய இயலாதவன் என்றும் நினைக்கிறாய். என்ன இருந்தாலும் நான் சைத்திரிகன் தானே; அழவும் சிரிக்கவும் கூடத் தெரியாத அனாதைப் பிரகிருதி; என்னைப்போல இந்தச் சித்திரக்காரர்களே இப்படித் தான்! கடவுளுக்குக்கூட எங்கள்மீது கருணையில்லை! இதோ பார், நான் உன்னைப் போற்றத் தயார்தான். ஆனால் நீதான் என்மீது நம்பிக்கை கொள்ளவில்லை. இல்லையா?”

“ இல்லை, பேவல்யாகோவ்லெவிட்ச், நான் உன் கழிவிரக்கத்தை நம்புகிறேன். உன் கண்ணீரையும் பார்க்காமல் இல்லை. ஆனால் உன்னுடைய கழிவிரக்கமும், கண்ணீரும் கூட உனக்கு ஒரு தமாஷாகத்தான் இருக்கிறதாகத் தோன்றுகிறது!”

ஷுபின் திகைத்து நின்றான். பிறகு மெதுவாக,

"அப்படியானால் நீ ஒரு சித்திரக்காரனிடம் காதல் கொள்வது முடியாத காரியமா?" என்று எப்படியோ கேட்டுவிட்டான்.

"பாவெல்யாகோவலிட்ச், அப்படித் தீர்மானமாகச் சொல்லிவிட முடியாது" என்று எலினா கூறியதும் ஷுபின் பெருமூச்சுவிட்டு, "சரி, நான் போய் வருகிறேன்" என்று புறப்பட்டான். அவனை நிறுத்த நினைத்த எலினா நினைவில் "சென்று வருக," என்று கூறினாள். ஷுபின் முற்றத்தோரமாய்ப் போனபோது அங்கே பெர்ஸெனேவ் வருவதைக் கண்டான். இவன் அழைப்புக் கேட்டு அவன் நின்றான். ஷுபின் கொஞ்சம் அவன் முன் வந்து நின்றவனாய்.—

"போபோ, சும்மாதான் கூப்பிட்டேன். நேராகத் தோட்டத்திற்குப் போ, அங்கே எலினாவைக் காணலாம். உனக்காகத்தான் காத்திருக்கிறாள் போலும்! ஆனால் ஒரு விஷயம் தெரியுமா அப்பா? நான் இதே வீட்டில் இரண்டு வருஷங்களாக இருந்து வருகிறேன். அவளைக் காதலித்து வருகிறேன். ஆனால் இப்பொழுதுதான் நான் உண்மையைப் புரிந்து கொள்ளமுடிந்தது. ஏன் இப்படிப் பார்க்கிறாய்? அனுஷ்காவைப் பற்றிக் குறிப்பிடவா? இருக்கட்டுமே, அனுஷ்கா, ஸோயா, அகஸ்டினா கிறிஸ்டினாவெல்லாம் நீண்டகாலம் வாழட்டும். போ, போ, நீ எலினாவிடம் போ, நான் அனுஷ்காவிடம் போகிறேன். சரி—போய்ப்பா—போ! நான் அந்த—இதோ பார் அழைப்புக்கூட வந்திருக்கிறது அந்தக் கேளிக்கை விலாசத்திலிருந்து. அங்கே தான் போகிறேன். இதெல்லாம் எனக்கேது நிம்மதி?" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு நீங்கினான்.

பெர்ஸெனேவ் இவ்வளவு நேரமும் மௌனத்துடன் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு நின்றான். அவனுக்கே ஷுபினுடைய இந்த வார்த்தைகளைக் கேட்க வெட்கமாய்த் தான் இருந்தது. இருந்தாலும் நண்பனுடைய இந்த விப

சிநேகமான பழக்கத்தையும் பேச்சையும் பற்றி யோசித்துக் கொண்டே ஹோட்டலை விட்டு நடந்தான்.

## ஒன்பதாவது அத்தியாயம்

எலினாவைத் தோட்டத்தில் காணாமல் அவன் அறையிலேதான் பெர்ஸெனேவை சந்தித்தான். சந்திப்பின் ஆரம்பத்திலேயே நேற்றைய சம்பாஷணை தொடர்ச்சியாக ஆரம்பமாய்விட்டது. ஷூபின் ஆர்ப்பாட்டம் செய்துவிட்டு எங்கேயோ போய்விட்டான். அன்னாவாஸிலியவ்னாவும் தலையில் ஈரத் துணியை சுற்றிக் கொண்டு மேல்மாடியில் இருந்தாள். ஆகவே எலினாமட்டும் தனியாக இருந்ததினால் அப்பொழுது அவர்களுடைய சம்பாஷணைக்கு இடைஞ்சலில்லை. மறுபடியும் தன் தகப்பனைப் பற்றிய பேச்சை எடுத்தான். அவன் தகப்பனைப் பற்றிய புனிதத்தன்மையை அவன் எப்பொழுதும் கொண்டிருந்தது போற்றத்தக்கதாயிருந்தது.

தகப்பனுடைய காலத்தையும், அவருக்குத் தத்துவ ஆராய்ச்சியிலிருந்த ஆர்வத்தையும், தனக்கு அவர் தந்த கல்விப் பயிற்சியையும் சுருக்கமாக சொல்லிவிட்டுப் பிறகு தன் கல்லூரி வாழ்க்கையைப் பற்றிப் பேசலானான். எலினா, இவைகளை வெகு கவனத்துடனும் ஆர்வத்துடனும் கேட்டாள். பிறகு பெர்ஸெனேவ், தன் பள்ளித் தோழர்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

" இப்பொழுதெல்லாம் பள்ளிக்கூட வாழ்க்கை முன் காலத்தைப்போல் இல்லை, அறிவிற் சிறந்த மேதாவிகளையும் இக்காலக் கல்லூரிகள் பெற்றிருக்கவில்லை. எனக்குக் கூட, தகுந்த நண்பர்கள்—என் நோக்கத்திற்கேற்ப நட்புக் கொண்டவர்கள் அங்கே அதிகமாக இல்லை."

" ஒருவர், இருவர் கூடவா இல்லை ?"

" உண்டாம்! ஆனால்—ஒரு நண்பன் இருக்கிறான். சாதாரணமானவன் இல்லாவிட்டாலும், படிப்பில் தேறிய மேதாவி. அவன்தான் எனக்குப் பிடித்த நண்பன்."

"அவர் பெயர் என்னவோ?"

"இன்ஸரோவ் மைத்ரி நிகனோராவிட்ச் என்பவன். அவன் பல்கேரிய நாட்டைச் சேர்ந்தவன்."

"ரஷ்யன் இல்லையா? அப்படியானால் மாஸ்கோவில் இருப்பானேன்?"

'இல்லை,' என்று சொல்லிவிட்டு பெர்ஸனேவ் மேலும் தன் நண்பனைப் பற்றிச் சொல்லலானான்.

"இங்கு அவன் படிப்பதற்காக வந்திருக்கிறான். அவன் எந்த லட்சியத்திற்காக வேண்டி படிக்கிறான் தெரியுமா எலினா? அவனுக்கு ஒரே ஒரு லட்சியம்தான். அது தான் அவனுடைய நாட்டின் சுதந்தரம். அவன் தகப்பனார் ஒரு வியாபாரியாயிருந்தார். பல்கேரியா சுதந்தர நாடாயிருந்தபோது அதற்குத் தலைநகராயிருந்த ட்ரினோவாவைச் சேர்ந்தவர் அவர். ஸோபியா, ரஷ்யா முதலிய நாடுகளுடன் அவருக்கு வியாபாரத் தொடர்பு இருந்தது. இன்ஸரோவின் அத்தை 'கிவ்' நகரில் இருக்கிறாள். 1835-ம் வருஷம் அந்நாட்டில் ஒரு பயங்கரக் கொலை நடந்தது. அதாவது இன்ஸரோவின் தாய் திடீரென்று ஒருவாரம் காணப்படாமலிருந்து பிறகு பிணமாகிக் கிடந்தாள்!" பெர்ஸனேவ் இதைச் சொல்லிவிட்டுப் பெருமூச்சு விட்டான். எலினாவுக்கு இந்த ஸ்வாரஸ்யமான இடத்தில் உணர்ச்சி வேகத்தால் உண்டான ஆர்வத்துடிப்புப் பொறுக்கமுடியாது. "அப்புறம்...அப்புறம் என்ன?" என்று பதறிக் கேட்டாள்.

"யாரோ ஒரு துருக்கிய வெறியனால் அவள் கொலை செய்யப்பட்டாள் என்று எங்கும் பேசிக் கொண்டார்கள். இன்ஸரோவின் தகப்பனார் நேரிலேயே அந்த வெறியனைப் பழிவாங்க முயற்சித்தார். ஆனால் அவனைக் காயப்படுத்தத் தான் அவரால் முடிந்தது. எதிரியோ அவரையும் சுட்டுக் கொன்றுவிட்டான்.

"கூடப்பட்டாரா? விசாரணை இல்லையா இந்த அக்கிரமத்துக்கு?"

"விசாரணை ஏது? அப்போது இன்ஸரோவுக்கு எட்டு வயது—பக்கத்து வீட்டுக்காரர்களின் ஆதரவில் இருந்தான் அவன். அத்தை அவனைக் கீவுக்கு அழைத்து வந்து வளர்த்தாள். அப்புறம் பன்னிரெண்டு வருஷங்கள் வரை அவன் கீவில்தான் வாழ்ந்தான். அதனால்தான் அவன் ரஷ்ய பாஷையில் ரொம்பச் சரளமாகப் பேசுகிறான்."

"ரஷ்ய மொழியில் பேசுகிறாரா?" என்று வியந்தாள் எலினா.

"நாம் பேசிக்கொள்வது போலத்தான் இருபது வயதாய் விட்டது. தன்னுடைய நாட்டுக்குச் சென்று நாலாப் பக்கமும் சுற்றி அந்த மொழியிலும் தேர்ச்சிபெற்று மக்களுடன் பழகலானான். துருக்கிய அரசாங்கம், அவன் அங்குத் தங்குவதை விரும்பவில்லை. நாட்டினின்றும் பகிஷ்கரிக்கப் பட்டான். இப்பவுங்கூட அவன் கழுத்துப் புறத்தில் ஒரு பெரிய வடு இருக்கிறது. அங்குத் தங்கிய அந்த இரண்டு வருஷங்களில் ஏதேதோ பயங்கரமான விஷயங்கள் நடந்திருக்கின்றன. ஆனால் அவன் எதையும் சொல்லமாட்டான். யாருடனும் கலகலப்பாகக் கூடப் பேசமாட்டான். இப்பொழுது மாஸ்கோ கல்லூரியில் படிக்கிறான். படிப்பு முடிந்ததும்.—

'என்ன அப்புறம்?'

"கடவுள் விட்டவழி. நாம் எதிர்காலத்தைப் பற்றி நிர்ணயிக்க முடியுமா?" என்று கேட்டு மௌனமானான் பெர்ஸெனேவ். எலினா ஆழ்ந்த யோசனையில் இறங்கிவிட்டாள். கொஞ்ச நேரம் கழித்து "நீங்கள் இப்பொழுது சொன்ன விஷயங்களெல்லாம் என் மனதுக்கு ரொம்பவும் பிடித்தமாக இருக்கிறது. இந்த நண்பர் எப்படி இருப்பார்? அவரை நீங்கள் என்னவென்று அழைப்பீர்கள்?"

என்று உணர்ச்சி வேகத்தைக் அடக்கமாட்டாதவளாய்க் கேட்டாள் எலீனு.

“அவன் எப்படியிருப்பான் என்று நான் எப்படிச் சொல்வது. நீயே அவனைப் பார்த்துக் கொள்ளலாம்.”

“எப்படி முடியும்?”

“இங்கு அவனை அழைத்து வருகிறேன். இன்னும் இரண்டு தினங்களில் அவன் இங்கு வருகிறான் என்னுடன் தங்கியிருக்கப் போகிறான்.”

“உண்மையாகவா? இருந்தாலும் நம்மைக் காண அவர் இஷ்டப்பட வேண்டுமே!”

“நம்மைக் காண்பதில் அவன் பரம சந்தோஷமடைவான்.”

“அப்படியானால் அவர் கர்வியில்லையா?”

“ஒருக்காலும் இல்லை. ஆனால் பிறரிடமிருந்து ஒரு உதவியும், ஒரு காசுகூட கடன் வாங்கமாட்டான்.

“அப்படியானால் அவர் ஏழையா?”

“ஆமாம். அப்படியொன்றும் பணக்காரனில்லை. ஏதோ தகப்பனாரிடமிருந்து கிடைத்த கொஞ்சம் சொத்துண்டு. அதையும் உதவி செய்கிறான், ஆனால் அதெல்லாம் கொஞ்சம்தான்.”

“அப்படியானால் அவர் நிறை குணமுள்ளவராகத்தான் இருக்கவேண்டும்.”

“ஆமாம். அவன் சுயதேவைக்குப் பிறருடைய கையை எதிர்பார்க்கமாட்டான். ஆனால் குழந்தை உள்ளம் படைத்தவன். தன்னடக்கமும் சோர்வையும் உள்ளவன். அவன் வந்த பிறகு நீயே பாரேன்—தானே தெரிகிறது.”

“அவர் சங்கோஜி இல்லையா?”

“சங்கோஜியாயிருப்பவர்கள் எதற்கும் உதவாதவர்கள் அல்லவா?”

"அப்படியானால் நீங்கள் வீணா?" என்று ஆறும்பாக எலினா கேட்டதும் பெர்ஸினெவ் மௌனமானான். பிறகு அவள் "அந்தத் துருக்கிய வெறியனைப் பழி வாங்கவில்லையா, உம் நண்பர்?" என்று கேட்டாள்.

"பழியா? நாவல்களில்தான் இந்தப் 'பழி'கள் எல்லாம்! இந்தப் பனிரெண்டு வருஷங்களில் அவன் என்றோ செத்துப் போயிருக்கமாட்டானா? இதைவிடப் பெரியதொரு லட்சியமான "தேச சுதந்தரம்" அல்லவா அவனுக்கு முக்கியம்?"

'சுதந்தரம்' என்னும் சொல்லை உச்சரிக்கும்போதே உள்ளத்திற்கு எவ்வளவு குதூகலமாயிருக்கிறது என்று எலினா தனக்குத்தானே கூறிக்கொண்டாள். அதே சமயம் அன்னா வஸிலியேவ்னா உள்ளே வந்ததும் சம்பாஷணை நின்றது. பெர்ஸினெவ் தன் இடத்துக்குத் திரும்பிவிட்டான். போகும்போது அவன் மனதில் எத்தனையோ விதவிதமான எண்ணங்கள் தோன்றிப் பெருகின.

## பத்தாவது அத்தியாயம்

இரண்டு தினங்களுக்குப் பிறகு இன்ஸரோவ், தனக்குத் தேவையான சாமான்களுடன் சொன்னது சொன்னபடியே சேர்ந்தான். அவனே எல்லாச் சாமான்களையும் தன் அறையில் ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டான். அறையைச் சுத்தம் செய்வது, தூசி தட்டுவது, பெருக்கியது எல்லாம் அவனேதான். பெர்ஸினெவைக் கட்டாயப்படுத்தி வாடகைக்கு அட்வான்ஸாகப் பத்து ரூபிள்களைத் தந்தான். பிறகு தன்னந்தனியாகக் கிராமத்தைச் சுற்றிவரப் பிரம்பும் கையுமாகப் புறப்பட்டு விட்டான். அன்று ஒரு நாள் தான் பெர்ஸினெவுடன் அவன் செலவில் சாப்பிட முடியும் என்றும், அடுத்த நாள் முதல் வீட்டுக்காரியின் சாப்பாட்டு விடுதியில் தான் ஏற்பாடு செய்து கொள்வதாகவும் கூறிவிட்டான். பெர்ஸினெவ் அந்தக் கிராமத்தில் தங்கியிருக்கும் வரையில் தன்னுடன் சாப்பிடும்படியும்

செலவில் பாதியைக் கொடுத்து விட்டால் என்ன என்று கேட்டபோது, அவ்வளவுக்குத் தனக்கு செலவு செய்ய இயலாதென்றும் மறுத்துவிட்டான். இதெல்லாம் இன்ஸரோவ் வந்தவுடனேயே நிர்ணயித்துக் கொண்ட வேலைகளாகும். மதியத்தில் ஸ்டாவ்ஹோவ்களைப் பார்த்து வருவோமா ? என்று பெர்ஸனேவ் கேட்டதற்குத், தன் பல்கேரிய நண்பர்களுக்குக் கடித மெழுத வேண்டியிருப்பதால் அடுத்த நாள் போகலாம் என்றான். பெர்ஸனேவும் ஒப்புக் கொண்டான்.

இன்ஸரோவ் மறுநாள் காலையில் நான்கு மணிக்கே எழுந்துவிட்டான். எழுந்தவன் குண்ட்ஸோவா கிராமத்தை மீண்டும் ஒரு முறை சுற்றிவிட்டு, ஆற்றில் ஸ்நானம் செய்து முடித்துத் திரும்பினான். பச்சைப் பாலில் ஒரு கிளாஸ் சாப்பிட்டதும் தன் வேலையைத் தொடங்கினான். பல்கேரிய நாட்டுப் பாடல்களை ரஷ்ய மொழியில் மொழி பெயர்ப்பது, ரஷ்ய இலக்கணம், பல்கேரிய இலக்கணம் தயாரிப்பது ஆகிய எழுத்து வேலைகளைத்தான் அவன் அப்போது மேற்கொண்டிருந்தான். பெர்ஸனேவ் வந்தவுடன் இரண்டொரு பல்கேரியப் பாடல்களைப் படித்துக் காட்டினான். மொழி பெயர்ப்பு சரளமாயிருக்கிறது. என்று கூறிவிட்டுப் பல்கேரியாவைப் பற்றிப் பேச ஆரம்பித்ததும், இன்ஸரோவ் ஆவேசமும் உணர்ச்சியும் கொண்டவனாய் அடியோடு மாறிவிட்டான். மேற்கொண்டு அவர்கள் சம்பாஷணை நீடிப்பதற்குள் கதவைத் திறந்துகொண்டு ஷுபின் வந்து சேர்ந்தான். பெர்ஸனேவ் அவனை அறிமுகப்படுத்தி வைப்பதற்குள் ஷுபின் தானாகவே "நான் தான் ஷுபின் ; பெர்ஸனேவுடைய நண்பன். என்னைப் பற்றி இவன் உங்களிடம் ஏதாவது சொல்லியிருக்கிறானோ இல்லையோ, தெரியாது. ஆனால் உங்களைப்பற்றி நிரம்பவும் சொல்லியிருக்கிறான். என்னடா, இவன் இப்படி இருக்கிறானே என்று எண்ணிப் பிரமிக்க வேண்டாம். தொழில் முறையில் நான் ஒரு சிற்பி. சீக்கிரத்தில் உங்கள் தலை

யைப் போல் நான் ஒன்று செய்ய அனுமதி தரவேண்டும்," என்று படபடவென்று பேசலானன்.

" தங்கள் இஷ்டம்போல் செய்யலாம் " என்றான் இன்ஸரோவ் நிதானமாக.

" சரி, இன்று நாம் என்ன செய்யலாம் ?" என்று மீண்டும் பேச்சை ஆரம்பித்தபடி அங்கிருந்த ஒரு சுழல் நாற்காலியில் ஷூபின் அமர்ந்து கொண்டான். " ஆண்ரே பெட்ரோவிட்ச், இன்று ஏதாவது ' பிளான் ' போட்டிருக்கிறாயா ?" என்று மீண்டும் கேட்டுவிட்டு, " காலநிலை ஜோராயிருக்கிறது. எங்கேயாவது போய் சுற்றவேணும் போலிருக்கிறது. நமது குண்ட்ஸோவ் கிராமத்தின் அழகையெல்லாம் இந்தப் புதுமனிதருக்குக் காட்டலாமே. சரி, ஏன் பேசாமல் இருக்கிறாய் ? உன்னுடைய தீர்க்கதரிசன சக்தியைக் காட்டக்கூடாதா ? போகலாமா ? என்று மூச்சு விடாமல் பேசியதைக் கண்டு பெர்ஸனேவ், " சரி இன்று என்னமோ இவன் ஓரேயடியாய் மாறியிருக்கிறான். " என்று நினைத்துக் கொண்டான்.

" இன்ஸரோவுக்குச் சௌகரியப்படுமோ, இல்லையோ, இப்பொழுதுதானே அவன் வேலையைத் தொடங்குகிறான். என்ன செய்வது ?" என்றான் பெர்ஸனேவ்.

ஷூபின் திரும்பிப் பார்த்து, " நீங்கள் இச்சமயம் வேலை செய்யவா விரும்புகிறீர்கள் ?" என்று அலாதியான முறையில் கேட்டான்.

" இல்லை, இன்று உலாவிவிட்டு வரலாம் " என்று கூறிப் புறப்பட்டதும், மூவரும் வீட்டைவிட்டுக் கிளம்பிச் சென்றனர்.

உலாவுங்கால் ஷூபின் சிறுபையன்போல் வேடிக்கையாகப் பேசிக் கொண்டும் தமாஷாகவும் இருந்தான். மாஸ்க்வா நதிக்கரையில் அம்மூவரும் நடந்தனர். இன்ஸரோவ் முன்போலவே அதிகமாகப் பேசாது, நிதானமாகவும் ஆழ்ந்த யோசனையுடனும் நடந்தான். ஆனல், இன்று

அவன் ஏனைய தினங்களைவிட மகிழ்ச்சியாகவே இருப்பதாகத் தெரிந்தது. ஷுபின் எதையோ பேசிக்கொண்டே, பல்கேரிய சரித்திரத்தில் இறங்கினான். இன்ஸரோவ் அவனுடைய பேச்சுகளைக் கவனமாகக் கேட்டான். குமா, ஹெமோ என்ற பெருமை ஆசார்களைப் பற்றிய பேச்சு வந்தபோது, ஷுபின் அவர்கள் வாழ்ந்த வருஷத்தைத் தவறாகச் சொன்னான்.

" அவர்கள் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்று இன்ஸரோவ் அதைத் திருத்தினான்.

" அப்படியா, சந்தோஷம் !" என்று ஷுபின் கூறி விட்டுத் தன் பேச்சைத் தொடர்ந்தான். பெர்ஸெனெவ், ஷுபின் இவ்வளவு வேடிக்கைப் பேச்சிலும், செய்கையிலும் ஈடுபட்டிருந்தாலும், இன்ஸரோவின் நடைநொடி பாவனைகளையும் அவன் சோதனை செய்து கொண்டிருக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டான். மூவரும் ஸ்டாஹோவ் வீடு சென்றபோது, ஷுபின் முன்னதாக இவர்கள் வரவு தெரிவிக்கச் சென்றான்.

## பதினோராவது அத்தியாயம்

" அந்த வீர புருஷன் இன்ஸரோவ் இங்கு வந்து கொண்டிருக்கிறார். " என்று முழங்கிக் கொண்டே வீட்டுக்குள் பிரவேசித்தான் ஷுபின். முன் அறையில் எலீனாவும், ஸோயாவும் இருந்தனர்.

" எங்கே ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் ஸோயா. எலீனா திரும்பினாளே ஒழிய, எதுவும் கேட்கவில்லை. ஆனால் ஷுபின் குறும்பாகச் சிரித்துக்கொண்டே, " என்ன காதில் விழவில்லையா ? இன்ஸரோவ் இங்கு வருகிறார். " என்று மீண்டும் அவன் சொன்னதாம், ஏளனமாகப் பேசுவதுபோல் இருந்தது அந்த அறிவிப்பு.

" காதில் விழுகிறது. ஆனால் அவர் இன்னும் வீட்டுக்குள்கூட அடி எடுத்து வைக்கவில்லை. அப்படியிருக்க

அவனை அசௌகரியப் படுத்துவது என்பதுதானே உன் யோசனை?" என்று கேட்டதும், ஷாபின் முகமாறி, களை குன்றிவிட்டது.

"நீ சொல்வது சரிதான். ரொம்ப சரி! எலினு ஆனால் எனக்குக் கிஞ்சித்தும் அந்த எண்ணம் இல்லை. நான் அவருடன் இன்று பூராவும் இருந்தேன். இப்பொழுது தான் நாங்கள் உலாவி வந்தோம். அவர் மிகவும் உயர்ந்த மனிதர் என்பதே என் அபிப்பிராயம்."

"நான் உன்னை அபிப்பிராயம் எதுவும் கேட்கவில்லையே" என்று கூறியதும், ஷாபின் திகைப்படைந்தான். அதற்குள் ஸோயா 'அவர் வாலிபர்தானே?' என்று கேட்டாள்."

"ஆமாம்! அவருக்கு நூற்று நாற்பத்திநாலு வயதாகிறது!" என்று பரபரப்புடன் கூறினான். இச்சமயம் அவர்கள் வரவை வேலையாள் ஒருத்தன் அறிவித்தான். அவர்களும் தொடர்ந்து வந்து விட்டனர். ஸோயா ஓட்டமாக ஓடி இவர்கள் வரவை அறிவித்து அன்னவாஸிலியெவ்னாவை அழைத்து வந்தாள். அவள் வந்ததும் அவர்களிடையே சம்பாஷணை பலபல விதமாக நடந்தது. ஒருவர்க்கொருவர் அறிமுகப்படுத்தி வைக்கப் பட்டனர். ஷாபின் மட்டும் சிற்பி என்ற தோரணையில் கொஞ்ச தூரத்தில் இருந்தபடி எல்லோரையும் ஒரு பாதிரியாகப் பார்த்தான். ஆனால் எலினு, தன்னை வெறுப்புடன் பார்ப்பதை அவன் அந்த சமயத்தில் அறியாமலில்லை. அவனுடைய கண்கள் நண்பர்கள் இருவரையும் ஆராய்ந்தன. அந்த இரண்டு நண்பர்களில்—இன்ஸரோவ் அப்படியொன்றும் கண்கவரும் அழகுள்ளவனில்லை. அவனைவிட பெர்ஸெனேவ் எவ்வளவோ மேல். அவன் முகத்தில் களையும் கம்பீரமும் இருந்தது. ஆகவே அவனைத்தான் எலினு காதலனாக வரிப்பாள்," என்று தனக்குள்ளாகவே ஆராய்ந்து தீர்மானித்துக் கொண்டான் ஷாபின்.

• எலினுவுக்கோ, அவள் எதிர்பார்த்த அளவுக்கு ஏற்றவனாகத் தோன்றவில்லை இன்ஸரோவ். பெர்ஸெனேவ் அவ

"ஏன் இருந்தாற்போலிருந்து நீ இன்ஸரோவைப் பற்றி ஆரம்பித்தாய்? இதற்காகத்தான் இங்கு, அதுவும் இவ்வேளையில் ஓடி வந்தாயா?"

"அங்கு, எனக்கு மனம் நிம்மதி இல்லாமலிருந்ததால் இங்கு வந்தேன்."

"ஓ! அப்படியா? அப்படியானால் மீண்டும் அழ விரும்புகிறாயாக்கும்?"

"உனக்கு ஏகத்தாளமாய்த்தானிருக்கும். ஆனால் நான் இங்கு வந்தது. உண்மையைச் சொல்லிவிடுகிறேன். பொறாமையும், ஆத்திரமும், அசூயையும் பிடித்ததால்தான்!"

"பொறாமையா? யாரிடம்?"

"உன்மீதும் அவன்மீதும்! அவள் மனப்போக்கை அறிந்துகொண்டுவிட்டேன். இனிப் பேசிப்பயன் என்ன? எல்லாம் தொலைந்துவிட்டது. இனிச் சாகவேண்டியதுதான் பாக்கி எனக்கு!" என்று தாழ்ந்த குரலுடன் சொன்னான்.

"அடேடே, அப்படி ஏதாவது செய்துவிடாதே அப்பா! பொறு கொஞ்சம்!

"வேனிற்காலம் வரட்டும். இப்போது சாகமாட்டேன். சாவதிலும் சந்தோஷமாயிருக்க வேண்டாமா? சரி, நீ தூங்கப்பா, தூங்கு. நான் இன்பத்தை நாடிப் போகிறேன்." என்று புறப்பட்டான். பெர்ஸனேவ், "அனுஷ்காவிடமா?" என்று கேலியாகக் கூவியது, அவன் காதில் விழுந்தாலும் கேளாதவன்போல் போய்விட்டான்.

## பன்னிரண்டாவது அத்தியாயம்

இன்ஸரோவ், குண்ட்ஸோவா கிராமத்துக்கு வந்து பதினைந்து நாட்களாய்விட்டன. ஆனால் அவன் ஐந்தாறு தடவைக்குமேல் ஸ்டாஹோவ் குடும்பத்தினரைச் சந்திக்கவில்லை. பெர்ஸனேவ் மட்டும் தினசரி அங்குப் போவான்.

எலினாவுக்குப் பெர்ஸெனேவ் வருகை உவகைதரும். அவனுடன் சம்பாஷிப்பதில் அவளுக்கு அதிக ஆசை. என்றாலும் இப்பொழுதெல்லாம் பெர்ஸெனேவ் மனதில் ஏனோ முன் போல் நிம்மதி இல்லை. எலினாவுக்கும் இன்ஸரோவுடன் பல விஷயங்கள் பேச ஆசை உண்டு. ஆனால் அவன் வரும் போது, உண்டாகும் நாணம் பேச்சை மட்டுப்படுத்திவிடும். ஷூபின் அநேகமாகத் தன் அறையிலேயே தங்கிச் சிற்ப வேலையில் நிரம்பவும் கருத்தைச் செலுத்தினான்.

ஒருநாள் காலை பதினொரு மணி சுமாருக்குப் பெர்ஸெனேவ் எலினா வீட்டிற்குச் சென்றான். இவ்வேளையில் அவன் அங்குச் சென்றதேயில்லை. ஆவலுடன் எலினா அவனை வரவேற்றபோது பெர்ஸெனேவ் “நம்ம இன்ஸரோவைக் காணோமே?” என்று அவன் வியந்தவன்போல் கேட்டதும், அவள் திகைத்துவிட்டாள்.

“ஒரு வேளை மாஸ்கோவுக்குப் போயிருக்கலாமோ?”

“ஊஹூம். அங்குப் போயிருக்க முடியாது. ஆனால் அவன் வேறு எங்கேயாவது போயிருக்கத்தான் வேண்டும். ஏன் என்றால் நேற்று இரண்டு பல்கேரியர்கள் அவனைச் சந்திக்க வந்திருந்தார்கள். நெடுநேரம் அவர்களுக்குள் ஏதோ விவாதம் நடந்து கொண்டிருந்தது. பிறகு அவர்களுடன் அவனும் எங்கோ புறப்பட்டுச் சென்றான்.”

“அவர்கள் பல்கேரியர்கள் என்று எப்படித் தெரியும்?”

“எப்படித் தெரியுமா? அவர்கள் பேச்சு, பழக்கம் நடைநொடி பாவனைகளிலிருந்து விளங்காதா? போனவன் இன்னும் வரவில்லை. சரி, நான் போய்ப் பார்த்துத் தகவல் அனுப்புகிறேன்” என்று சடக்கென்று கூறித் திரும்பிவிட்டான் பெர்ஸெனேவ். எலினாவுக்கு மனதில் ஏதோ ஒரு சங்கடமும் பதை பதைப்பும் உண்டாயிற்று. பெர்ஸெனேவ் மனத்திலும் இன்ஸரோவைப் பற்றி இவ்வளவு கருத்தாக இவள் இருப்பானேன் என்று அசாதா

ண நினைவும் உண்டாயிற்று. ஆனல் அவன் வீடு சென்ற தும் அங்கே இன்ஸரோவ் திரும்பி வந்துவிட்டது தெரிந் தது. உடனே இதுபற்றி ஒரு கடிதம் எழுதி எலினுவுக்கு அனுப்பனுன் பெர்ஸனேவ். அக்கடிதத்தில் "இன்ஸ ரோவ் திரும்பி விட்டான். அவன் எங்குப் போயிருந்தான் என்பது தெரியவில்லை. நீதான் தெரிந்துகொள்ள முயல வேண்டும்," என்று எழுதப்பட்டிருந்தது. எலினுவுக்கு இந்த வார்த்தைகள் அதிசயமா யிருந்தன.

தான் எப்படி, எதற்காகத் தெரிந்து கொள்ளவேண் டும்? என்று அவள் தனக்குத்தானே கேட்டுக் கொண்டா லும், ஏதோ என்னமோ தெரிந்து கொள்ள உரிமை உண் டென்று பெர்ஸனேவ் கருதியதுபோலவே, அவளும் ஏனே கருதலானுள். மறுதினம் பகல் இரண்டு மணி இருக்க லாம். எலினு நாய்க் குட்டிகள் விளையாடுவதைப் பார்த்த படி தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தாள். கொஞ்ச தூரத்தில் இன்ஸரோவ் மட்டும் தனியாக வந்து கொண் டிருப்பதை அவள் அகஸ்மாத்தாகப் பார்த்துவிட்டுப் பிர மித்து விட்டாள். அவனும் இவளை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தான்.

பரஸ்பரம் இருவரும் வணக்கம் தெரிவித்துக் கொண் டதும், "ஆண்ட்ரே பெட்ரோவிட்சுடன் வருவதாகத்தான் இருந்தேன். அவன் ஏதோ கொஞ்சம் வேலையாயிருந்த தால் நான்மட்டும் உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்." என்ருன் இன்ஸரோவ். "உங்களை இந்த மூன்று நாட்களாகக் காணுமே?" என்று கேட்ட படி எலினு, ஒரு ஆஸனத்தில் உட்கார்ந்தாள். அவனும் ஒரு பக்கத்தில் அமர்ந்து கொண்டு "கொஞ்சம் வெளியில் போயிருந்தேன். ஆண்ட்ரே பெட்ரோவிட்ச், இதுபற்றி ஏதேனும் சொன்னுனே?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"அப்படியானல் என்னைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று திடுதிப்பென்று ஒரு கேள்வி போட்டு

விட்டு இன்ஸரோவ் அவளை உன்னிப்பாகப் பார்த்தான். அவளும் இந்த எதிர்பாராத கேள்வியால் திகைத்துவிட்டாள். எப்படியோ சுதாரித்துக் கொண்டு,

"என் அபிப்பிராயமா? நீங்கள் ஈடுபடும் எந்த வேலையிலும் வேலையின் தன்மையையும், பயனையும் அறிந்தே இறங்குவீர். தவறான வேலை எதிலும் நீங்கள் இறங்கமாட்டீர்கள் என்றே எண்ணுகிறேன்." என்று சாதுரியமாகப் பதிலளித்தாள். இந்தப் பதில் அவனுக்குத் திருப்தி அளித்ததுபோலும்.

"நல்லது; எலினா, உன்னுடைய அபிப்பிராயம் உயர்ந்தது. இங்கு என்னுடைய ஜனங்கள் சிலர் வசிக்கிறார்கள். அவர்களுக்குள் ஒரு சச்சரவு. அதைச் சமாதானப்படுத்தி வைக்க என்னை அழைத்துச் சென்றார்கள். அதற்குத்தான் போயிருந்தேன்.

"சமாதானமாய் விட்டார்களா?"

"அதுதான் சிரமமாயிருந்தது. ஒரு சார்பில் பிடிவாதம் அதிகமாயிருந்ததுதான் காரணம்."

'இந்தச் சின்ன விஷயத்துக்காக நீங்கள் போவானேன்?'

'என் தேச மக்கள் இம்மாதிரி சிறுசிறு சச்சரவுகளால்தானே தவிக்கிறார்கள். அவர்களை ஒற்றுமைப்படுத்துவதுதானே முக்கியமான கடமை. உனக்கும் இதில் பிடித்தம் இல்லாமலிருக்காதே. உன்னுடைய அபிப்பிராயத்தை அறியத்தான் நான் வந்தேன்.'

"எனக்கென்ன தெரியும்?"

"ஏன் தெரியாது? நீ பரிசுத்தமான இருதயமுள்ளவள் என்பதை நான் அறிவேன். உன் யோசனையும் உன்னதமாய்த்தானிருக்கும்."

எலினா, பதில் சொல்லாமல் மௌனமாக யோசிக்கலானாள். எலினாவின் இந்த மௌனம் கொஞ்ச நேரங்கழித்துக்

கலந்தது. " நான் சொல்லப்போவது, உங்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கலாம். உங்களைப்பற்றி அநேக விஷயங்களைப் பெர்ஸனேவ் எனக்குச் சொல்லியிருக்கிருர்." என்று, விட்ட சம்பாஷணையைத் துவக்கினுள்.

" அப்படியா ! நல்ல விஷயங்களைத் தானே ?"

' ஆமாம். உண்மையான உயர்ந்த விஷயங்களைத் தான். உங்கள் வாழ்க்கையின் லக்ஷியம் என்னவென்று கூட எனக்குத் தெரியும்.'

" அப்படியானுல் என்னைப்பற்றி இவ்வளவுக்கு நீ தெரிந்து கொண்டிருக்கிருயாக்கும். "

" உங்கள் இளமையில் நடந்த சம்பவங்கள் கூட எனக்குத் தெரியுமே. அது சரி, நீங்கள் மீண்டும் அந்த ' மனிதனை ' சந்தித்தீர்களா ?" என்று பரபரப்பாகக் கேட்டுவிட்டுப் பதிலை ஆவலாக எதிர்பார்த்தாள். அவள் ஆவலைக் கண்டு அவனுக்கும் மேலும் மறைவாகப் பேச விருப்பம் இல்லை.

" எலீஞ, நீ எந்த மனிதனைப்பற்றிக் கேட்கிருய் என்று தெரிகிறது. அப்புறம் நான் அவனை சந்திக்கவில்லை. சந்திக்காமலிருப்பதே மேல். அவனைப் பழி வாங்க நான் ஒரு காலத்தில் விரும்பினுலும் இப்போது விருப்பவில்லை. இப்பொழுது என் கவனமெல்லாம் தேச விடுதலையில் தான். மஹத்தான லக்ஷியத்துக்கு உழைக்காமல் ஒரு சிறு காரியத்தில் மனதைச் செலுத்துவது அவ்வளவாக அவசியமில்லை. "

' உங்கள் தேச பக்தி பெரிதும் போற்றத்தக்கது. பல்கேரியா விடுதலை யடைந்தவுடன் நீங்கள் ரஷ்யாவை விட்டு அங்குப் போய் விடுவீர்களா?' என்ன ?

" அது பின்னுல் யோசிக்க வேண்டிய விஷயம். உனக்குப் பல்கேரியாவின் சரித்திரம் ஏதாவதுதெரியுமா?"

" தெரியாது !"

" அப்புறம் பல்கேரியாவின் வரலாறுபற்றிய ஒரு புத்தகம் கொண்டு தருகிறேன். எங்கள் நாடு இன்று பிறர் வசப்பட்டுத் தவிக்கிறது. மக்களின் சுயேச்சை நசுக்குண்டது மதம், கல்வி, பொருளாதாரம், கலாசாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் நாங்கள் முன்னேற வொட்டாமல் தடை செய்யப்பட்டிருக்கிறோம். துருக்கியர்கள் எங்களைத் ஆடுமாடுகள்போல் நடத்துகிறார்கள். அவர்கள் எங்களை தாங்கொணுத் துன்பத்திற்கு ஆளாக்குகிறார்கள். முடியாது; இனியும் பொறுக்கமுடியாது. இந்த அடிமைத் துன்பம் நீங்கும்வரை சுகமில்லை எப்படியாவது விடுதலையடைந்தே தீருவோம்." இதைச் சொல்லிவிட்டு அவன் அங்கிருந்து புறப்பட்டுவிட்டான். அவனுடைய ஆவேசமான பேச்சைக் கேட்டு பிரமிப்படைந்திருந்த எலினு, அவன் உருவம் மறையும்வரை அங்கேயே பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

அந்தத் தினம் முதல் அவர்களிடையே நட்பு வளர்ந்து பெருகலாயிற்று. இன்ஸரோவுடன், அளவளாவுவதில் எலினுவுக்கு மிகவும் இன்பமாயிருந்தது. எலினுவுடன் பழகுவதிலும் தன்னுடைய விஷயங்களை அவளிடம் சொல்லி மகிழ்வதிலும் இன்ஸரோவ் குறைவைக்கவில்லை. அந்தத் தினம் முதல் இன்ஸரோவ் எலினுவின் பார்வைக்கு ஒரு லக்ஷிய புருஷனுகத் தோன்றினுன். இதே நிலையில் மாதம் ஒன்று கழிந்தது. நாளுக்குநாள் அவர்களிடையே வளர்ந்து வரும் அன்புப்பிணைப்பை எந்த ரீதியில் பகிர்ந்து கொள்வது என்று இருவருக்கும் புலப்படவில்லை. என்றுலும் இருவருடைய மனப்பாங்கும் மிகவும் அந்தரங்கமாகவே இருந்தது.

ஸ்ரீமதி அன்னுவாஸிலிவ்னுவின் விசித்திரமான போக்குத்தான் எல்லாருக்கும் தெரிந்ததாயிற்றே. திடீரென்று சாரிட்ஸினேவுக்கு உல்லாச யாத்திரை போவதற்காக ஏற்பாடு செய்யலானுள். புறப்பாட்டுக்கு ஒரு தினம் குறிப்பிடப்பட்டது. அன்று அந்தக் குடும்பத்தாரும் ஏனைய

நண்பர்களும் உல்லாச யாத்திரை புறப்பட்டார்கள். இன்ஸ ரோவ், பெர்ஸனேவ், ஷூபின் யாவரும் அந்தக் கோஷ்டி யில் கலந்து கொண்டனர். காலநிலையும் பயனுள்ளதாக இருந்தது. எல்லோருக்கும் இந்த உல்லாச யாத்திரையில் இன்பமும் ஆர்வமும் பொங்கியது. குறிப்பிட்ட இடத் திற்கு அவர்கள் சென்றவுடன் ஜோடி ஜோடியாகப் பிரிந்து அவர்கள் பொழுதைக் கழிக்கத் தீர்மானித்தனர். ஷூபின் ஸோயாவுடன் புறப்பட்டான். எலினு, பெர்ஸனேவின் கைகளைக் கோர்த்துக் கொண்டு நடந்தாலும், இன்ஸரோவு டன் பேசுவதிலேயே கவனமாக இருந்தாள். பெர்ஸனே வுக்கு இது கொஞ்சம் வியப்பைத் தந்தாலும் அவர்களு டைய சம்பாஷணையில் குறுக்கிட வில்லை.

பிறகு அவர்கள், சாயுட்ஸ்னோ ஏரியை நெருங்கியதும் அங்குள்ள இயற்கைக் காட்சிகளை அனுபவிப்பதில் பெரி தும் ஈடுபட்டார்கள். பிறகு அந்தக் கோஷ்டி ஒன்று சேர்ந்து ஒரு படகில் ஏரியின் எதிர்கரைக்குப் போய்வரத் தீர்மானித்தார்கள். படகில் போகும்பொழுது முதலில் யாவரும் ரஷ்யப் பாடல்களைப் பாடினார்கள். அதன்பின் ஸோயாமட்டும் ஜெர்மன் பாட்டு ஒன்றை வெகு அழகா கப் பாடினாள். கோஷ்டியினருக்கு இந்தப் பாட்டில் கன குஷி. எல்லோருடைய கவனமும் இங்கேயிருந்தபோது கரையோரத்திலிருந்து யாரோ 'சபாஷ்! சபாஷ்!' என்று கூவியதைக் கேட்டு அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

எதிர்க்கரையில் பல ஜெர்மனியர்களைக் கொண்ட கோஷ்டியொன்று நின்று கொண்டிருந்தது அவர்கள்தான் அப்படித் திமிர் வெறியுடன் கத்தியிருக்க வேண்டும் என்று இவர்கள் தெரிந்து கொண்டனர். கரையைச் சேர்ந்தவுடன் விருந்து தயாரித்துக் கொண்டு யாவரும் கலந்து கொண்ட னர். மாலை நெருங்கிவிட்டது.

அன்னுவாஸிலிவ்னு அவசரம் அவசரமாக "சரி. புறப்பட வேண்டியதுதான் வீட்டுக்கு. எதிலும் அளவுக்கு மிஞ்சி போகக்கூடாது," என்று உத்திரவிட்டு விட்டாள்.

எல்லோரும் புறப்பட்டு விட்டனர். இயற்கைக் காட்சி இன்பத்தை அனுபவித்த அவர்கள் நிம்மதியாகச் சென்று கொண்டிருந்தபொழுது எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. மதியத்தில் 'சபாஷ்' போட்ட ஜெர்மானியர்கள் அங்கே வந்தனர். அவர்களில் ஒருவன் அன்னுவாஸிலிவ்னுவை வணங்கிவிட்டு, "நாங்கள் சபாஷ் போட்டவுடன் ஏன் பாட்டை நிறுத்திவிட்டீர்கள்; திரும்பவும் பாடாமல்?" என்று வேகமாகக் கேட்டான். ஷுபின் முன்வந்து "ஐயா, பெரியவரே, நீங்கள் யாரோ, என்னவோ, சாக்ஸானிய இனத்தைச் சேர்ந்தவராகக் காணப்படும் உங்களுக்கு ஒழுங்கு முறை தெரியவில்லையே! முன்பின் தெரியாத ஒரு ஸ்திரீயுடன் எப்படிச் சம்பாஷிப்பது என்று கூடத் தெரியாதா? மற்றும் ஒரு தடவை நாம் சந்திக்கும்போது வேண்டுமானால் இந்த வெட்டிப் பேச்சுக்களில் ஈடுபடலாம். இப்பொழுது நேரமாகி விட்டது எங்களுக்கு. எங்களைவிட்டு உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு செல்லுங்கள்," என்று ஏளனமாகக் கூறினன். அந்த ஜெர்மானியனுக்குக் கோபம் வந்துவிட்டது. "நான் யார் தெரியுமா? ஒரு உத்தியோகஸ்தனுக்கும். ஆமாம்!" என்று மீண்டும் உறுமினன்.

"எனக்கென்ன அதைப்பற்றி?" என்றான் ஷுபின்.

"நான் சொல்வதென்னவென்றால்,"...என்று ஆரம்பித்துவிட்டு, அவன் ஷுபினை அலக்ஷியமாக ஒருபுறம் தள்ளி, எலினுவையும், ஸோயாவையும் காட்டிக் கொண்டே, "நாங்கள் கேட்க வந்ததென்னவென்றால் அந்தப் பெண்களை அழைத்து எங்களை முத்தமிடச் செய்யுங்கள் என்பதுதான்," என்று திமிருடன் கேட்டதும் அன்னு அச்சத்தால் திகைத்துவிட்டாள்.

மற்ற ஜெர்மானியர்களும் இதே வார்த்தையைத் திருப்பிக் கூவினர்கள். ஸோயா நடுங்கிக் கொண்டு இன்ஸரோவிடம் பதுங்கினுள். ஆனல் இன்ஸரோவ் ஒதுங்கி வந்து, அந்த ஜெர்மானியரின் எதிரில் நின்று "தயவு

செய்து விலகி வழிவிடுங்கள் " என்று மெதுவாக, ஆனால் அழுத்தமாகக் கூறினான்.

" என் இஷ்டம், நான் எங்காவது போகிறேன். எதற்கு விலகவேண்டும்?" என்று திமிருடன் பதில் அளித்தான் அந்த ஜெர்மானியன்.

" குடித்துவிட்டு உளறுதே, போ அப்பால், இல்லையேல் உன்னைத் தூக்கித் தண்ணீரில் போட்டு விடுவேன்!" என்றான் இன்ஸரோவ்.

" நானா? என்னையா? எங்கே பார்க்கலாம்!" என்று உறுமிக் கொண்டே முன்வந்த இன்ஸரோவை அந்த ஜெர்மன் பிடித்தான். அவ்வளவுதான்; அவனை அலக்காகத் தூக்கி நீரில் எறிந்துவிட்டான் இன்ஸரோவ்!

" ஐயையோ! அவன் செத்து விடுவான் போலிருக்கிறதே," என்று அங்கலாய்த்தாள் அன்னாவாஸிலிவ்னா.

" அவன் தானே நீந்திக் கரையேறி வருவான்—வாருங்கள் போகலாம்!" என்று கூறிவிட்டு இன்ஸரோவ் புறப்பட்டான். அந்த ஜெர்மன் கோஷ்டி தங்கள் 'தலைவன்' பட்டபாட்டால் பயந்து கொண்டு தூரத்தில் இருந்தபடி கன்னாபின்னாவென்று ஏசினார்கள்.

ஆனால், இதை லக்ஷ்யம் செய்யாமல் அன்னாவாஸிலிவ்னா கோஷ்டியினர் தங்கள் வண்டியில் ஏறிக்கொண்டு ஊர்நோக்கிப் புறப்பட்டு விட்டனர். போகும்போது அவர்களுக்குச் சிரிப்புத் தாங்கமுடியவில்லை. அவ்வளவு பெரிய உருவமுடைய அந்த ஜெர்மானியனை அப்படியே அலாக்காகத் தூக்கி எப்படி எறிய முடிந்தது? என்பதுதான் அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது. எலீனாவுக்கு இந்தச் சம்பவத்தால் அலாதி மனவேகமும் உணர்ச்சியும் உண்டாயிற்று. இன்ஸரோவ் மனபலத்தைப்போல் தேக பலமும் வாய்ந்தவன்! என்று தீர்மானித்துக் கொண்டாள். ஆயினும் இன்ஸரோவ் இந்தச் சம்பவம் பற்றி எதுவும் பேச

வில்லே. எலினு வீடு திரும்பிய பிறகும் இந்தச் சம்பவத்தை அவளால் மறக்கமுடியவில்லே.

## பதின்மூன்வது அத்தியாயம்

இன்ஸரோவுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்த சில நாட்களுக்குப் பின், எலினு டைரி எழுத ஆரம்பித்தாள். அந்த டைரியில் சில முக்கியமான குறிப்புக்களே அடிக்கடி எழுதிக் கொள்வாள். அவைகளில் சிலவற்றைப் பார்க்கலாம்.

"ஜூன்......ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் புத்தகங்கள் பல கொண்டுவந்து தருகிறர். ஆனுல் நான் அவைகளைப் படிப்பதில்லே. அவைகளை அவரிடம் திருப்பித் தரவும் மனம் வரவில்லே. அவர் என்னே உன்னிப்பாகக் கவனிக்கிறர். என்பீது அவருக்கு எனு மிகவும் கவர்ச்சி ஆனுல் எனக்குமட்டும் அவர் நல்ல மனிதர்—உயர்ந்த குணமுள்ளவர் என்று தோன்றினுலும், அவர் எதிர்பார்க்கும் அளவுக்கு அவரை என் மனம் நாடவில்லே. இன்ஸரோவிடமும் அப்படித்தான் என்றுலும் வேற்றுமை யிருக்கிறது. அவரிடம் எனக்கு ஒரு பயபக்தியும் நம்பிக்கையும் உண்டாகாமல் இல்லே. ஆனுல் அவர் என் நினைவிலிருந்து நீங்குவதேயில்லே. நேற்று தூக்கத்தில்கூட அவர் கையில் ஒரு கத்தியுடன் தோன்றி உன்னேயும் கொன்று நானும் சாவேன் என்று சொல்லுவதுபோல் ஒரு பயங்கரமான கனவு கண்டேன்! எவ்வளவு முட்டாள்தனம்! என்னே எல்லோரும் ஏன் வருத்தப்படுபவள் போல் இருக்கிருய் என்று அடிக்கடி கேட்கிறர்கள். எனக்கு என்னவோ எதுவுமே புரியவில்லே. எல்லாம் குழப்பமாயிருக்கிறது. என்ன வேண்டிக் கிடக்கிறது? இளமைப் பருவம் அழகு எல்லாம் எதற்காக? இப்படியெல்லாம் அடிக்கடி நினைத்தாலும் குறிப்பான எதிலும் கவனம் செல்லவில்லே.

".....ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் எவ்வளவோ நல்லவர். சிறந்த அறிவாளி. சிறிய நண்பர் என்றுலும், இன்ஸரோவ்

அவரைவிடச் சிறந்தவர். தேசபக்தனாய் இருப்பவர் சிறந்தவராகத்தானே இருக்கமுடியும்? இன்ஸரோவுடன் சம்பாஷிக்கும்பொழுது எனக்கு அலாதி ஆவேசமும் குதூகலமும் உண்டாகிறது......

......இப்பொழுதெல்லாம் ஷூபின் காணப்படுவதேயில்லை. ஏன் வருவதில்லை என்றும் தெரியவில்லை. ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் கூட அடிக்கடி வருவதில்லை. ஆனால் இன்ஸரோவ் அடிக்கடி வருகிறார்.

......நாட்கள் பல ஓடிவிட்டன. இப்பொழுது முன்போல் என் மனதில் அவ்வளவு கலக்கமில்லை. அவருடன் நெருங்கிப் பழகுவதால்தான் இந்த நிம்மதி ஏற்பட்டிருக்கிறது. அவருடன் இருக்கும்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது! நான் ஒரு புஷ்பத்தைப் பறித்தேன். ஒரு இதழ் உதிர்ந்துவிட்டது.

அவர் சடக்கென்று அதை எடுத்துக் கொண்டார். தக்ஷணமே, என் புஷ்பத்தை அவரிடம் கொடுத்தேன். எங்களுடைய இந்தப் புஷ்பமாற்றிலேயே அசாத்திய மகிழ்ச்சி உண்டாயிற்று.

......இப்பொழுதெல்லாம் அவர் இல்லாமல் எனக்கும் போதே போவதில்லை. இன்ஸரோவுக்கு எத்தனையோ திட்டங்கள். எங்களுக்கு எப்பொழுதும் இவைகளைப் பற்றித்தான் பேச்சு.

......இன்று ஆண்ட்ரே பெட்ரோவிட்ச் வந்திருந்தார். அவர் என்னுடன் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் தான் பேசினார்.

......கடந்த இரண்டொரு தினங்களாக இன்ஸரோவைக்கூடக் காணோம். மூன்று தினங்களுக்கு முன் ஒரு நாள் மாலை வந்தார். சில நிமிஷங்கள் பேசிவிட்டு உடனே புறப்பட்டு விட்டார். பின்னர் அவர் ஏன் இன்னும் வரவில்லை? அவரைப் பிரிந்து இருக்க முடியவில்லை. அவர் பக்கத்தில் இருந்தால்தான் கவலையில்லாமல் இருக்கமுடி

யும். அவர்தான் எனக்கு வேண்டும். நான் அவரைக் காதலிக்கிறேன். இந்தக் காதல் நிறைவேற்றால்தான் சுகமாக வாழ வழியுண்டாகும் என்பதுதான் உண்மை......

சில தினங்களுக்குப் பிறகு, அதாவது எலினா டைரியில் கடைசியாகக் குறிப்பிட்டிருந்த நாளன்று, இன்ஸரோவ் பெர்ஸனேவுடன் பேசிக் கொண்டிருந்தான். இன்ஸரோவ் சொல்லுவதை அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

"நான் மாஸ்கோவுக்குப் போகிறேன்." என்றான் இன்ஸரோவ்.

"திடீரென்று ஏன் புறப்படுகிறாய்? கோடைகாலம் இன்னும் முடியவில்லை." என்று பெர்ஸனேவ் கேட்பதற்குள், இன்ஸரோவ் இடைமறித்து,

"இல்லை, நான் போவதாகத் தீர்மானித்து விட்டேன் என்னைத் தடுக்காதே. உன்னைப் பிரிய வருத்தம் தான். இருந்தாலும் போய்த்தான் ஆகவேண்டும்" என்று சொன்னான்.

"நிச்சயமாகத் தீர்மானித்து விட்டாயா?"

"ஆமாம். நிச்சயமாகத்தான்," என்று இன்ஸரோவ் பெர்ஸனேவிடம் சொன்னவுடன், பெர்ஸனேவ் வேறு எதுவும் கேளாமல் ஸ்டாஹோவ் வீட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான். அவனைக் கண்டதும் எலினா திகைப்படைந்து, நீங்கள் ஏதோ சொல்ல வந்திருக்கிறீர்கள். என்று சொன்னாள்.

"ஆமாம். இன்ஸரோவ் மாஸ்கோவுக்குப் புறப்படுகிறான் என்றதும், அவள் திடுக்கிட்டுக் காரணம் என்னவோ?" என்று கேட்டாள்.

"எனக்கு எப்படித் தெரியும், எலினா, உனக்கல்லவா இந்தத் திடீர்ப் புறப்பாட்டுக்குக் காரணம் தெரிந்திருக்க வேண்டும்.

"எனக்கா? அதெப்படி தெரியமுடியும்!"

"நீ சொல்லாவிட்டால் நானே சொல்லுகிறேனே. இதேபோல் தான் போன வருஷம் இன்ஸரோவ் ஒரு குடும்பத்தாருடன் தங்கியிருந்தான். அந்த வீட்டில் ஒரு அழகான பெண்ணும் இருந்தாள். எனக்கென்னவோ அவளிடம் அவனுக்குக் கவர்ச்சி இருந்ததாகத் தோன்றிற்று. துணிச்சலாக வாய்விட்டுக்கேட்டுவிட்டேன். அவன் என்ன சொன்னன் தெரியுமா?" நான் ஒரு பல்கேரியன். ஆகவே, எனக்கு ஒரு ரஷ்யக் காதலி தேவையில்லை என்று சொன்னன். ஆனல் இப்போது அவன் மாறிவிட்டான். ஒரு ரஷ்யப் பெண்ணைக் காதலிக்கிறன். தன் வார்த்தையைக் காப்பாற்ற அதாவது முன் என்னிடம் சொன்னதை நிறைவேற்ற விரும்பி, புறப்பட்டுப் போக நிச்சயித்துவிட்டான் என்று அவன் சொன்னதும், எலினுவின் முகம் ஆச்சரியத்தினலும், நாணத்தாலும் சிவந்துவிட்டது. அவனை நிமிர்ந்து பார்க்கக்கூட அவளுக்குக் கூச்சமாயிருந்தது.

'அவர் என்னிடம் சொல்லிக் கொண்டு போக வரமாட்டாரா?' அவசியம் வரச் சொல்லுங்கள் என்று கண் கலங்கிக் கூறினள். ஆண்ரே பெட்ரோவிட்ச் அவளுடைய காதலின் ஆழத்தை அறிந்து கொண்டு, அங்கிருந்து புறப்பட்டான். அவன் மனதிலே இதே சிந்தனைதான். அவர்கள் இருவரும் பரஸ்பரம் காதல் கொண்டுள்ளனர் என்பதை நினைக்கும்போதே. அவனுக்கு என்னவோ போல் இருந்தது.

அடுத்த தினம் பகலில் இன்ஸரோவ் எலினு வீட்டிற்கு வந்தான். அதே சமயத்தில் அன்னுவாஸிலிவ்னுவின் சிநேகிதை ஒருத்தி வந்து பேசிக் கொண்டிருந்தாள். அவர்களுடன் இருந்த எலினு, இன்ஸரோவ் வேகமாக வருவதைக் கண்டு ஓடோடியும் அவனருகில் சென்று "கேளுங்கள்! ஆண்ரே பெட்ரோவிட்ச் உங்கள் நோக்கத்தை என்னிடம் சொன்னர். ஆனல் நீங்கள் இன்று போகவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். நாளை பகல் பதி

ஞொரு மணிக்கு வாருங்கள். வருவீர்களா ?" என்று படபடப்புடன் கேட்டாள் இன்ஸரோவ் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் திரும்பத் திரும்பக் கேட்டும் அவன் பதில் கூருமல் சற்றுநேரம் நின்றுவிட்டு வீடு திரும்பினுன். அவன் மௌனமாகத் திரும்பியதைக் கண்டதும், அவள் தாங்கமுடியாத வேதனையடைந்தவளாய் அன்றையபொழுதைக் கழிக்கலானுள். அகஸ்மாத்தாக அங்கு ஷூபின் வந்து சேர்ந்தான். ஆனல் அவளுடன் அவன் எதுவும் பேசாமல் வந்த காரியத்தைப் பார்த்துக் கொண்டு போய் விட்டான். மாலை நெருங்க நெருங்க அவள் மனதிலும் ஏக்கம் பெருகிற்று. இருள் பரவப்பரவ அவள் வேதனையும் வளர்ந்தது. எப்பொழுது விடியப் போகிறது; எப்பொழுது மணி பதினென்ருகும் ? என்றெல்லாம் எண்ணியெண்ணி ஒவ்வொரு நாழியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்தாள்.

மறுநாள் பொழுதும் விடிந்தது. மணி ஆக ஆக அவள் படபடப்பும் அதிகரித்தது.

அவள் எதிர்பார்த்த பதினேரு மணியும் வந்தது. ஆனல் இன்ஸரோவ் வரவில்லை. மணி நகர நகர அவளுடைய ஆவல் அதிகரித்தது. இதயம் ஏங்கித் துடித்தது. மணி பனிரெண்டு...பிறகு ஒன்றும் அடித்துவிட்டது. ஆனல் அவன் வரவில்லை. அவள் கண்கள் நீரைச் சொரிந்தன. துக்கத்தால் நெஞ்சம் அடைத்துக் கொண்டு வலியெடுத்தது. தன் அறையில் ஓடி படுக்கையில் விழுந்து நெடுநேரம் அழுது தவித்தாள். ஆயினும் அவன் வந்த பாடில்லை.

பிறகு என்ன நினைத்தாளோ என்னவோ கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள். சிறிதுநேரம் அசையாமல் உட்கார்ந்து கொண்டு எதையோ ஆழ்ந்து சிந்தித்தாள். அப்புறம் சடக்கென்று எழுந்து, மேலங்கியை மாட்டிக் கொண்டு, தொப்பியைத் தலையில் வைத்தபடி, தாமதம் செய்யாமல் வீட்டை விட்டுப் புறப்பட்டு நேராக பெர்ஸனேவ்

வீட்டை நோக்கிச் சென்றாள். தன் காதலனைக் காண வேண்டும் என்னும் அவாவால் தூண்டப்பட்டு,

அவள் குனிந்த தலை நிமிராது வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள். இன்ஸரோவை மீண்டும் காணவேண்டும் என்ற ஆவலைத் தவிர அவளுடைய மனதில் வேறு எந்த நினைவும் வரவில்லை. வானம் இருண்டுவிட்டது. மழையும் தூற ஆரம்பித்தது. மின்னலும் இடியுமாக முழங்கிக் கொண்டு வந்த மழையைக்கூட அவள் லக்ஷியம் செய்யாமல் ஓடினாள். எனினும் மழையின் வேகம் தாங்க முடியவில்லை. ஆகையால் வழியிலிருந்த ஒரு பாழடைந்த மாதா கோயிலில் ஒதுங்கினாள். அதே சமயம் அங்கு ஒரு பிச்சைக்காரக் கிழவியும், சொட்டச் சொட்ட நனைந்தபடி வந்து சேர்ந்தாள். எலினாவைக் கண்டதும் ஆச்சரியத்துடன், "இந்த மழையில் இங்கு எதற்காக வந்தீர்களோ ?" என்று கேட்டுக் கொண்டே பிச்சைக்குக் கை நீட்டினாள்.

எலினாவிடம் பணம் ஏது ? அவள் ஓடிவந்த அவசரத்தில் பணம் கொண்டுவர நினைவுதான் ஏது ? சட்டென்று தன்னிடமிருந்த கைக்குட்டையை யெடுத்து அவளிடம் தந்து 'இப்போது என் வசம் பணம் இல்லை. இந்தக் கைக்குட்டையைப் பெற்றுக்கொள். அதுவும் ஒரு சமயம் எதற்காவது பயன்படும்,' என்று கூறினாள்.

பிச்சைக்காரக் கிழவிக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஏற்கெனவே அவள் எலினாவிடம் பல முறை யாசகம் பெற்றிருக்கிறாள். அப்படிப்பட்ட சமயங்களில் எலினா வருத்தமாயிருப்பது கண்டு, " ஏன் வருந்துகிறாய் ? என்று கிழவி அனுதாபத்துடன் கேட்பாள். இப்பொழுதும்கூட கிழவி எலினாவின் நிலைமையைத் தெரிந்து கொண்டவள்போல் " இளஞ்சீமாட்டியே உன்னுடைய கவலை எதனால் என்று எனக்குத் தெரியும். ஆமாம் சிறுவயதில் இதெல்லாம் இயற்கைதான். நானும் உன்போல் இளம் பெண்ணாயிருந்த காலத்தில் இப்படித்தான் தவித்தேன்.

கவலைப்படாதே, உன் காதல் கைகூடும். துக்கத்தால் நீ கண்ணீர் சிந்தும்போது துடைக்க உபயோகிக்கும் இந்தக் கைக்குட்டையை நான் எடுத்துப் போகிறேன். இத்துடன் உன் துக்கமும் போய்விடட்டும். சென்று வருகிறேன்," என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். எலினுவுக்கு இந்தக் கிழவியின் வார்த்தை ஆச்சரியத்தை உண்டுபண்ணினுலும் நம்பிக்கையும் ஊட்டியது.

மழை கொஞ்சம் நின்றது. எலினு அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டாள். ஆனல் எதிர்பாராத அதிசயமாக இன்ஸரோவ் கொஞ்ச தூரத்தில் போய்க் கொண்டிருந்தது கண்டு ஆச்சரியமடைந்து கூவினுள். அவன் திரும்பிப் பார்த்தான். அருகில் வந்ததும் எலினுவென்று தெரிந்து கொண்டு திகைத்தான். அவனும் அவளும் திரும்பவும் அந்தக் கோவிலுள் நுழைந்தனர். நீயா? இங்கு...எதற்காக வந்தாய்?"

"நீங்கள் என் வீட்டிற்குச் சொன்னபடி வரவில்லையே?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"நான் வருவதாகச் சொல்லவில்லையே," என்ருன் அவன்.

"அப்படியானல் நீங்கள் ஊர்போவது நிச்சயந்தானு?"

"ஆமாம். நிச்சயம்தான்."

"நிச்சயம்தானு? அப்படியானல் நமது நட்பு, பழக்கம் எல்லாம் கூடப் போய்விட வேண்டியதுதானு?"

"ஏன் இப்படியெல்லாம் கேட்கிருய் எலினு?"

"நாம் நண்பர்கள் கூட இல்லையா?"

"இல்லை. நாம் நண்பர்களேயல்ல."

"என்ன? நமக்குள் சிநேகம் இல்லையா? என்ன ஆச்சரியம்?"

"எலிஞ! மீண்டும் மீண்டும் கேட்காதே. என்னை வற்புறுத்த வேண்டாம். நான் போகிறேன்" என்று புறப்பட்டான். எலிஞவுக்கும் மேலும் பொறுக்க முடியவில்லை.

"நீங்கள் ஏன் என்னிடம் பயப்படவேண்டும்? வேண்டாம் என்னைச் சோதிக்கவேண்டாம். நான் தங்களைத் தேடித்தான் இப்போது வந்தேன்."

"என்னையா?"

"ஆமாம். நீங்கள் என் வாயால் 'காதலிக்கிறேன்' என்று சொல்லிக் கேட்க தீர்மானித்திருக்கிறீர். இப்போது சொல்லிவிட்டேன்." என்று குழறிக் குழறிச் சொல்லிவிட்டு அவன் மார்பின்மீது சாய்ந்து விட்டாள். அவனும் அவளை ஆர்வத்துடன் இறுக அணைத்துக்கொண்டு பெருமூச்செறிந்தான். அந்தச் சமயத்தில் அவர்களிருவரும் தம் மெய்ம்மறந்து ஒன்றுபட்ட இதயத்துடன் காதல் பிணைப்பில் கட்டுண்டு கிடந்தனர். அவர்களிடையே பேச்சில்லையென்றாலும் இதயங்கள் இணைந்ததால் உண்டான ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தனர் இருவரும்.

"என் அன்பே, நான் எங்குச் சென்றாலும், எப்படியானாலும் என்னிடமிருந்து பிரியாமல் இருப்பாயா?"

"நிச்சயமாக இருப்பேன். உலகின் எல்லைக் கோடி வரையில் என்றாலும் தயார். நீங்கள் எங்கேயோ, அங்குத்தான் நானும்!"

"அறிந்துதான் சொல்லுகிறாயா? உன் பெற்றோர் இதை அனுமதிக்க வேண்டுமே. நமது திருமணத்தை அவர்கள் அனுமதியார் என்று உனக்குத் தெரியும் அல்லவா?"

"தெரியும். தெரிந்துதான் சொல்லுகிறேன்."

"நான் ஏழை. எளிய பிச்சைக்காரனைப் போன்றவன்."

"நான் அதையும் அறிவேன்."

"நான் ரஷ்யனில்லை. இந்தத் தேசத்தில் நான் வாழவும் முடியாது. நீ என்னை மணப்பதால் உன் நாட்டையும், உறவினரையும் இழக்க வேண்டிவரும்.

"தெரியும்! எனக்கு நன்றாகத் தெரியும்,"

"நான் ஈடுபட்டிருக்கும் காரியம் பயங்கரமானவை." எவ்வளவோ கஷ்ட நஷ்டத்தை எதிர்பார்த்துத் துன்பத்தைத் தாங்கவேண்டும். உன்னுடைய சுகவாழ்வு போய், என்னைப்போல் கஷ்டங்களையும் தொல்லைகளையும் அனுபவிக்கவும்."

"நான் தயார். நான் உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன்" என்று அவள் உறுதியாகக் கூறியதும், அவன் இன்னும் இறுக அணைத்து முத்தங்களைச் சொரிந்தான். பிறகு அவளைத் தூக்கிவிட்டு, இதோ இப்பொழுதே சொல்லுகிறேன். நீ இன்றுமுதல் ஆண்டவன் சாட்சியாக என் மனைவி" என்றான்.

## பதினொன்றாவது அத்தியாயம்

சுமார் அரைமணி நேரத்திற்குப் பிறகு, அவள் உள்ளம் உவகையால் பூரிக்க வீடு திரும்பினாள். அவள் தலைமயிர் கலைந்து, கன்னம் சிவந்து உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன. புன்னகை தவழும் முகமலர்ச்சியுடன் அவள் வீடு வந்து சேர்ந்தாள். வாசற்புறத்தில் உவார் ஐவனோவிட்ச் உட்கார்ந்திருந்தான். எலினா அவன் தோளைப் பிடித்துக் குலுக்கிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள். அவன் அவளை அலாதியாக உற்றுப் பார்த்தானேயன்றி, வேறு எதுவும் சொல்லவில்லை. அவளோ தாங்கமுடியாத ஆநந்தத்துடன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தாள். எல்லோரையும் பிரியவேண்டுமே; அவருடன் நானும் போகப் போகிறேன்! அம்மா பாவம்!... ..அந்தக் கிழவி சொன்னது உண்மையாய் விட்டது. என்றெல்லாம் நினைத்து நினைத்துப் பூரித்தாள். அச்சமயம் அவள் தாயார் அங்கு வந்தாள். அவளிடம் பாய்ந்து இறுக அணைத்து மாறிமாறி முத்தமிட்டாள் எலினா. பிறகு குதூகலத்துடன்

தன் அறைக்கு ஓடிவிட்டாள். "அவர்...என் காதலர்." "எலினு நீ என் மனைவி" என்று தனக்குள்ளாகவே கூறிக் கொண்டு அளவிலா இன்பம் அடைந்தாள். அவள் இதயம் இன்ப நினைவுகளால் எக்களித்தது. தான் இன்ஸரோவின் மனைவியாகி விட்டதாகவே அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

மாலையும் நெருங்கியது. எலினுவுக்கு லேசாக கவலையும் உண்டாகியது. திட்டப்படி இன்ஸரோவ் மட்டும் முன்னதாக மாஸ்கோவுக்குப் போவதென்றும், பின்னுல் சந்தித்து மற்றவைகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் முடிவு செய்திருந்தனர். அதுதான் அவள் மனதுக்குச் சிறிதளவு சஞ்சலத்தைத் தந்தது. என்றாலும் சாப்பாட்டறைக்குச் சென்றாள். அங்கு ஷூபின், பெர்ஸனேவ் இருவரும் வந்திருந்தனர். அவள் அவர்களைக் கண்டதும் பேசுவதற்குக் கூடத் தத்தளித்தாள். எனினும், அவளுடைய குதூகல நிலைமையை அவர்கள் அறியாமலில்லை. சாப்பிட்டதும் அதிக நேரம் அவள் அங்குத் தங்கியிராமல் துரிதமாகப் படுக்கச் சென்றாள். படுத்தவுடன் நித்திரையும் வந்துவிட்டது. நித்திரையில் அவள் கண்ட இன்பக் கனவுகளும் குறைவில்லாமலிருந்தன.

அன்னுவாவஸிலிவ்னுவுடன் சற்றுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்து விட்டு, பெர்ஸனேவும் ஷூபினும் தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பினுர்கள். திரும்பும்போது ஷூபின் அவனைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கு அவன் செய்து வைத்திருந்த சிலைகளையும் காண்பித்தான். இன்ஸரோவின் உருவை அவன் செய்திருந்தது தத்ரூபமாய் இருந்தது கண்டு, பெர்ஸனேவ் ஆச்சரியமடைந்தான். பிறகு அனுஷ்காவையும், ஷூபினையும் சேர்த்து ஜோடியாகச் சமைக்கப்பட்டிருந்த உருவமைப்பையும் பெர்ஸனேவ் பார்த்தான். அதில் அவன் ஓரளவு வெறுப்படைந்தான். ஆனுல் ஷூபின் சிரித்துக் கொண்டே

அவனிடம், "பெர்ஸனேவ், இதுதான் எனக்குப் பிடித்தது. எதிர்காலத்தில் என் வாழ்வு எப்படியிருக்கும் என்று இதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். உனக்சே இதெல்லாம் பிடிக்காது. உன் போக்கே வேறு. ஆனால் நாங்களெல்லாரும், 'ஆர்டிஸ்டுகள்,' எங்கள் ஆசைகள், நினைவுகள் எல்லாம் உங்களிடமிருந்து வேறுபட்டவை. இப்போது நான் குடிக்கவும் பழகிக் கொண்டிருக்கிறேன்." அவனுடைய இந்த வார்த்தையைக் கேட்ட பெர்ஸனேவ்.

'என்ன? குடிக்கவும் பழகி விட்டாயா?'

"ஆமாம், பின்னர் என்ன செய்வது? ஆசை நிறைவேறாத வேதனையை மறக்க, குடியைவிட உயர்ந்தது எது?"

"நீ ஏன் இப்படியெல்லாம் கெட்டுப் போகிறாய்?"

"இந்தக் கேள்விக்குப் பதிலும் உனக்கே தெரியும். ஆனால் உன் மன அடக்கத்தாலும் ஆழ்ந்த அறிவு பலத்தாலும் ஆசாபங்கத்தைச் சமாளித்துக் கொள்கிறாய். என்னால் முடியாது. முடியவே முடியாது."

பெர்ஸனேவ் மேலும் பொறுக்க முடியாமல், ஷூபினுடைய சோக நிலையை உணர்ந்து கொண்டவனாய் வந்தனங் கூறிப் பிரிந்தான்.

இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு சில தினங்கள் கழிந்தன. இப்போதெல்லாம் எலினா பொழுதை போக்குவதற்கே முடியாமல் தவித்தாள். 'ஏன் அப்போதே இன்ஸரோவுடன் நானும் போகாமலிருந்தேன்?' என்று மனம் நொந்தாள் என்றாலும், அவன் சீக்கிரத்தில் திரும்பி வருவான்; தன்னை அழைத்துப்போக அவன் வார்த்தை மாறுபவன் அல்லன். நான்தான் ஆண்டவன் சாட்சியாக அன்றே அவன் 'மனைவி'யாகிவிட்டேனே. இனி இந்த வீடு, தாய் தகப்பன், ஸோயா, நண்பர்கள் எல்லோரையும் பிரிந்து அவருடன் போய்விட வேண்டுமே! ஆம். போகத்தான் வேண்டும். நம் கணவன் இருக்கும் இடம்தானே நம் உரி

மைக்களும். ' அங்குத்தான் ஸ்வர்க்கமும்,' என்றெல்லாம் பலவிதமாக எண்ணி எண்ணி, அவள் ஒவ்வொரு நிமிஷங்களையும் ஒவ்வொரு யுகமாகப் போக்கினுள்.

இன்ஸரோவுக்கு எப்படியோ இரண்டொரு கடிதங்களும் எழுதினுள். அவைகளை அவளே தபாலாபீசுக்குச் சென்று போஸ்ட் செய்தாள். அவன் சீக்கிரம் வந்து விடுவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். நாள் ஆக ஆக அவள் ஆவலும் அதிகரித்தது. ஆனுல் மாஸ்கோ சென்றிருந்த இவள் தகப்பனுர்தான் எதிர்பாராத விதமாக வந்து சேர்ந்தார்.

நிகோலை ஆர்ட்டமெய்விட்ச் வீடு வந்ததும், அன்னு வாஸிலிவ்னுவுடன் தனியாக இருந்து அந்தரங்கமாகப் பேசலானுர். அவளிடம் அன்று மாலை ஒரு விருந்தாடி வருவதாகவும், அவரை வரவேற்கத் தகுந்த ஏற்பாடுகளுடன் இருக்கவேண்டும் என்றும் தெரிவித்தார். ஆனுல் எலினுவின் தாய்க்கு இந்த விருந்தாடி யார் என்று தெரிந்து கொள்ள ஆவல்.

" குர்னடோவ்ஸ்கி என்பவரைக் கேள்விப்பட்டிருக்கிருயா? ஸெனேட்டின் தலைமைக் காரியதரிசி அவர். அவர் இன்று நமது விருந்தாடியாயிருக்க இசைந்து இருக்கிருர்."

" இதற்குத்தானே, இதில் என்ன இரகசியம்?"

" இரகசியமா? உனக்கு இன்னுமா தெரியவில்லை? அவர் இளைஞர், உயர்ந்த உத்தியோகஸ்தர். அவர் நம்முடைய மாப்பிள்ளையாக வருவதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டாமா?"

" மாப்பிள்ளையாகவா?"

" என்ன கேள்வி இது! எலினுவுக்கு வயதாய் விட்டதே. எனக்கு பொறுப்பு என்று ஒன்று இருக்கிறதல்லவா? நீயெல்லாம் என்னைப்பற்றி என்ன கேவலமாக நினைத்தாலும், நான் கடமையைக் காலாகாலத்தில் செய்ய

உறுதி கொண்டு விட்டேன்," என்று தன் சாமர்த்தியத்தைத்தானே வியந்து கொள்ளும் முறையில் பேசினார்.

மாலையில் அந்தக் குறிப்பிட்ட விருந்தாடியும் வந்து சேர்ந்தார். அவருக்குத் தடபுடலான உபசாரமும் விருந்தும் நடைபெற்றது. அந்த மனிதன் வந்தது முதல் அங்கு நடந்த சம்பவங்களையும், அவனைப் பற்றிய விவரங்களையும் எலினா இன்ஸரோவுக்கு ஒரு கடிதத்தில் எழுதினாள். அவனுடைய உருவ அமைப்பு, பேச்சு, நடைநொடி பாவனை, குணம் யாவையும் அளந்து நிறுத்தது போல் அவனுக்கு எழுதினாள். எலினாவின் தாயிடம் அவன் தனக்குப் பெண் பிடித்திருப்பதாகத் தெரிவித்து விட்டான். இதையும் அவள் கடிதத்தில் எழுதிவிட்டாள்!

"இங்கு இப்படியெல்லாம் சம்பவங்கள் துரிதமாக நடக்கின்றன. நீங்களோ அங்கே போயிருக்கிறீர். எனக்கோ உங்களைப் பிரிந்து இருப்பது நரக வேதனையாயிருக்கிறது. அன்பா, ஒவ்வொரு சமயம் அம்மாவிடம்" உண்மையைச் சொல்லிவிடலாமா என்று கூடத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும் ஒருநாள் தெரியத்தானே போகிறது. உங்களைச் சீக்கிரம் சந்தித்தால் தான் என் மனம் நிம்மதியடையும். நான் சொன்னேனே அந்த இடம்—அடவியில்—கட்டாயம் நாம் சீக்கிரம் சந்திக்க வேண்டும். அன்பா, சீக்கிரம் நாம் சந்திக்கவேண்டும். இனியும் தனிமை எனக்கு எல்லையில்லாத் துன்பத்தைத் தரும்," என்று மிகவும் அழுத்தமாகவும் அன்பாகவும் அவனுக்குக் கடிதம் எழுதி அவன் வரவை எதிர்பார்த்தாள்.

## பதினைந்தாவது அத்தியாயம்

குர்னடோவ்ஸ்கி, ஸ்டாஹோவுக்கு முதல் தடவை வந்து சென்று மூன்று வாரங்களாய்விட்டன. திடீரென்று அன்னவாஸில்யெவ்னா மாஸ்கோவுக்குப் போய்க் குடும்பத்துடன் தங்கத் தீர்மானித்தாள். இது எல்லோருக்கும்—எலினாவுக்கும் கூடத்தான் ரொம்ப ஆச்சரியத்தை உண்

டாக்கியது. நிகோலை ஆர்ட்டமெய்விட்சுக்கும் தன் மனைவியுடன் மாஸ்கோவில் தங்கியிருக்க ஆசைதான். அவர் உடல் நிலை கொஞ்சம் சீர்பெற்றிருந்ததோடு அவருடைய ஆசை நாயகியும் வேற்றூருக்குச் சென்றிருந்தாள்.

குறிப்பிட்ட தினத்தில் கிராமத்தை விட்டு இந்தக் குடும்பத்தினர் மாஸ்கோவுக்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கு இவர்கள் சென்றதும், குர்னடோவ்ஸ்கி அடிக்கடி இவர்களிடம் வந்து பழகலானான். எலினுவைக் கண்டு போவதில் அவனுக்கு அதிக ஆசை என்றாலும், ஸோயாவுடன்தான் நெருக்கமாகவும் அதிகமாகவும் பழகி அளவளாவுவான். அவளுக்கும் அவனிடம் அதிகக் கவர்ச்சி உண்டானதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஷுபின், பெர்ஸனேவ் இருவரும் கூட மாஸ்கோவுக்கே வந்து தங்கிவிட்டனர். மாஸ்கோ வந்தது முதல், எலினுவுக்கு எப்படியாவது இன்ஸரோவை, சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்தது. எப்படியோ ஒருநாள் இரகசியமாக அவனைச் சந்தித்து அவன் விலாசத்தையும் தெரிந்து கொண்டாள். அவனை அவனுடைய வீட்டிலேயே சந்தித்து எவ்வளவோ விஷயங்களைப் பேசித் தீர்மானிக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள்.

ஒருநாள் இன்ஸரோவ் தன் அறையில் சுற்றிலும் கடிதங்களும் புத்தகங்களும் புடைசூழ அமர்ந்திருந்தான். அப்போது எதிர்பாராத விதமாக எலினு அங்கு வந்து சேர்ந்தாள். இன்ஸரோவ் ஆச்சரியமடைந்தாலும், அவள் வரவால் பூரிப்படைந்து அவளை இறுக அணைத்து முத்தங்களைச் சொரிந்தான். எப்படி வந்தாள்? எதற்கு? என்று கூடக்கேட்காமல் அப்புறந்தான் வந்த விஷயங்களைக் கேட்க விரும்பினான். அவள் வருமுன் அவன் ஆழ்ந்த யோசனையில் இருந்தான். அப்பொழுது நாட்டு நிலைமை அதிதுரிதமாக மாறிக் கொண்டிருந்தது. அவனைச் சுற்றிக் கிடந்த கடிதங்கள் அத்தனையும் பல்கேரியாவிலிருந்து கேசில் கொண்டுவந்து அவனிடம் கொடுக்கப்பட்ட கடிதங்களா

கும். அவைகளைப் பற்றியே அவன் சிந்தனை தேங்கியிருந்தது. தவிரவும் ரஷ்யத் துருப்புகளின் வெற்றிகரமான முன்னேற்றத்தால், கிழக்கத்திய நிலைமையின் முழு மாறுதல்கள் எல்லாம் தன் லக்ஷிய சாதனைக்குச் சாதனமாக இருக்கும் என்று எண்ணினான் அவன். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் பொறுக்கலாம் என்று அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டிருந்த காலத்தில்தான் எலினா திடீரென வந்து சேர்ந்தாள்.

"நீங்கள் என்னை இந்தச் சமயத்தில் எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள் இல்லையா?" என்று ஆவலுடன் அவள் கேட்டுவிட்டு மேலும், "இந்த இடத்திலா நீங்கள் வசிக்கிறீர்கள்? எப்படியோ கண்டுபிடித்து வந்துவிட்டேன். கொஞ்ச நேரம்தான் இங்கிருக்க முடியும். அந்தக் கதவைச் சாத்துங்கள். நாம் பேசலாம்." என்று கூறிவிட்டு அவள் அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டே தொப்பியை எடுத்தாள். நெடுங் காலம் அந்த இடத்தில் இருந்து பழகியவள் போல் எதிரில் கிடந்த ஒரு பழைய சோபாவின் மீது அமர்ந்து கொண்டாள்.

"இந்தாருங்கள் என்மேற் சட்டையைக் கொஞ்சம் கழட்டி விடுங்கள்," என்று குதூகலமாகவும் கொஞ்சுதலாகவும் கேட்டாள். அவனும் அளவுகடந்த மகிழ்ச்சியுடன் பொத்தான்களைக் கழட்டிக் கொண்டே திகைப்புடன் அவள் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு என்ன பேசுவது, கேட்பது என்று கூட யோசிக்க முடியாதபடி ஆச்சரியமும் திகைப்பும் உண்டாகியது. பிறகு அவள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அந்தக் கடிதங்களைச் சுட்டிக் காட்டிக் கொண்டே "இவைகள் எல்லாம் எங்கிருந்து வந்ததோ?" என்று நிதானமாகக் கேட்டதற்கு, அவன் உடனடியாகப் பதில் சொல்லவில்லை. ஆனால் அவன் அவளை அணைத்து முத்தமிடத் துடித்தான். அவன் கண்கள் மலர்ந்து அவளைக் கவர்ச்சித்தது. ஆனால் அவள் கொஞ்சம் படபடப்பாக "இதோ பாருங்கள், இப்போது நான் இந்த

இடத்திற்கு எஜமானி. என்னிடம் நீங்கள் எதையும் மறைக்கக்கூடாது. ஆமாம். சொல்லுங்கள்,” என்று மீண்டும் கூறிவிட்டு, அவன் அருகில் சென்றாள். அவன 'தாராளமாகப் படி' என்று தமாஷாகக் கூறிவிட்டு அவளை இறுக அணைந்து கொண்டு கன்னத்திலும் உதடுகளிலு மாக முத்தமிட, அவளும் பதிலுக்கு முத்தமிட்டாள். அவர்கள் சற்றுநேரம் அதே நிலையில் இருந்தனர். பிறகு, அவன் மெதுவாக “அந்தக் கடிதங்கள் பல்கேரியாவி லிருந்து வந்தவை. என் நண்பர்கள் என்னை அங்கு வரும் படி அழைக்கிறார்கள்,” என்று கூறினான்.

“அப்படியானால் என்னையும் அழைத்துப் போவீர் கள் அல்லவா? என்று கொஞ்சினாள். அவனும் ஆநந்தத் துடன்,” நீயுமா? வீடுவாசலற்ற தனி மனிதனான நான், உன்னையுமா அழைத்துப்போய்த் தொல்லை தரவேண்டும்? அதுவும் அங்கு—மேலே அவன் சொல்வதற்குள் அவள் வாயை மூடிவிட்டாள். அவனைப் பேச வொட்டாமல் செய்த அவள், “நீங்கள் இப்படிப் பேசினால் நான் திரும் பவும் இங்கு வரமாட்டேன். நான் உங்கள் மனைவிதானே? மனைவி புருஷனை விட்டுப் பிரிந்திருப்பது உண்டா?” என்று கேட்டாள்.

'ஆனால் மனைவிகள் யுத்தகளத்துக்குப் போவ தில்லையே!'

'நான் வரத்தான் வருவேன்.'

“நான் இன்னும் பதினைந்து தினங்களில் போக வேண்டியிருக்கும்.”

“என்ன, பதினைந்தே நாட்களிலா? அப்படியானால் நானும்தான்.”

நாம் போவதானால் சுலபமல்லவே. பணம் வேண்டும். பாஸ்போர்ட் (அனுமதிச்சீட்டு) வேண்டும். இன்னும் எத் தனையோ......?

" என்னிடம் பணம் இருக்கிறது. 80 ரூபிள்ஸ் வைத்திருக்கிறேன்."

" அதுபோதுமா ? இருந்தாலும் கிடைக்கும்வரை சரிதான்."

" நான் இன்னும் பணம் கொண்டுவர முடியும். அம்மாவைக் கேட்பேன். சேச்சே ! வேண்டாம். என் கடிகாரத்தை விற்கிறேன். காதணிகளை விற்கிறேன். வளையல்களும் இருக்கின்றன. இன்னும் "......

" எலினு, பணம் மட்டும் தேவையென்பதல்லவே. பாஸ்போர்ட் வேண்டுமே. உனக்குப் பாஸ்போர்ட் வாங்குவதெப்படி என்பதுதான் இப்போதையப் பிரச்சினை !"

" பாஸ்போர்ட் இல்லாமல் நாம் போக முடியாதா ?"

" அதுதானே முடியாது !"

எலினு, மேற்கொண்டு கேட்பதென்னவென்றறியாமல் திணறினாள். இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு அவன், " இன்னும் கொஞ்சகாலம்தான் எலினு, பொறுத்துக் கொள். நாமே எல்லாவற்றையும் நிதானமாக யோசித்து முடிவு செய்யலாம். நம் எதிர்காலத்தைப் பற்றி ஒரு நிர்ணயமான ஏற்பாட்டை முதலில் கொள்ள வேண்டும். நிம்மதியாக வாழ்வதற்கு நமக்கு யௌவனம், காலம், எல்லாம் இருக்கிறது. அவைகளைச் சரியாக உபயோகித்துக் கொள்ள வேண்டுமல்லவா ?" என்று சாதுரியமாகக் கேட்டவுடன், எலினு இசைந்து வீட்டுக்குப் புறப்படத் தயாரானாள். மேலங்கியைத் தரித்துக் கொண்டு தொப்பியைத் தலையில் வைத்துக் கொண்டாள்.

" இன்னும் கொஞ்சநேரம் இருக்கமாட்டாயா ?" இன்ஸரோவின் இந்த வேண்டுகோளை அவள் புறக்கணிப்பாளா ? காதலின் பிணைப்பில் இன்பசுகத்தையும் கொஞ்சநேரம் அனுபவித்து நின்றாள்.

"நாளைக்கு—இல்லை—நாளைக்கு மறுதினம் கட்டாயம் உங்களை எதிர்பார்க்கிறேன். தங்களைப் பாராமல் இருக்க முடியாது. சரி. வந்து நேரமாகிவிட்டது. போய் வர அனுமதி தாருங்கள்," என்று கொஞ்சி அவனை முத்தமிட்டுப் பிரியாமனதுடன் அவ்விடமிருந்து சென்றாள். அவள் சென்று நெடுநேரமாகியுங்கூட இன்ஸரோவுக்கு இன்பச் சூழ்நிலையிலிருந்து விடுபட முடியவில்லை.

அவள் சென்ற பிறகு, இன்ஸரோவ் பல்கேரியாவுக்குப் புறப்படும் ஏற்பாடுகளில் இறங்கினான். எலினாவுக்குப் பாஸ்போர்ட் வாங்குவதெப்படி? அவள் தன் மனைவியாயிருந்தால்தானே உடன்வர அனுமதி கிடைக்கும்! என்று பலவாறாக யோசித்தான். எப்படியும் அவளை அழைத்துக் கொண்டு போகத்தான் வேண்டும். சரி. அவளுடைய பெற்றோர்கள் வழக்குத் தொடுத்தார்களானால்...அதையும் தான் பார்த்துவிடலாமே! என்று முடிவு செய்து கொண்டான். இதற்காக, அவனுக்கு மிகவும் வேண்டிய ஒரு வக்கீலிடம் சென்று கலந்து பேசினான். அவரும் தக்கபடி இரண்டொரு யுக்திகள் சொன்னார். மறுநாள் மாலையில் அவன் ஸ்டாஹோவ் குடும்பத்தாரைச் சந்திக்கச் சென்றான்.

அன்னாவாஸிலிவ்னா, அவனை அன்பான முறையில் வரவேற்று க்ஷேமலாபத்தை விசாரித்தாள். என்றாலும், நிகோலை ஆர்ட்டமெய்விட்ச் அவனுடன் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. எனினும், எலினா அவனை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். அவனுக்குப் பிடித்த முறையில் அவள் அலங்காரம் செய்துகொண்டிருந்தாள். கொஞ்சம் ஜாடைமாடையாக எலினா, அவனை இன்னும் இருதினங்களில் காண்பதாகத் தெரிவித்தாள். தவிரவும் இந்தச் சந்தர்ப்பத்தில் குர்னடேவ்ஸ்கியும் வந்து சேர்ந்தான். இன்ஸரோவுக்கு மனதைப்போல் உடல் நிலையும் அன்று செவ்வையாக இல்லாததால், அதிக நேரம் அங்குத் தங்காமல் அவர்களிடம் விடைபெற்றுத் தன் வீடு சேர்ந்தான்.

வீடு சேர்ந்த பிறகு, அவன் உடல்நிலை மிகவும் துரிதத்தில் மாறலாயிற்று. எந்த வேலையும் கவனிக்க முடியாமல், உடல்வலி எடுத்துப் பிறகு வளர்ந்து, சுரமாகி விட்டது. சுரவேகமும் உக்கிரமான முறையில் தாக்கி அவனைப் படுத்த படுக்கையாக்கிவிட்டது. இரவெல்லாம் தூக்கமே யில்லை. தலைவலி, நரம்புத் துடிப்பு, தாங்கமுடியாத சுர வேகம் எல்லாம் தாக்கி, அவனை இருந்தாற்போலிருந்து நீண்டகால வியாதியால் அடிபட்டவனைப் போல் வீழ்த்தி விட்டது. எவ்வளவோ முயற்சித்துங்கூட அவனால் சமா ளித்துக் கொள்ள முடியவில்லை. ஏதோ பயங்கர நிகழ்ச்சி கள் நடக்கப்போவது போன்ற அலாதி உணர்ச்சியும் நினை வும் அவனை மூர்ச்சை அடையச் செய்தன. "அவன் எதி ரில் எலினு ஓடிவருகிறாள். வக்கீல் யுக்தி சொல்லித் தரு கிறார். எங்குப் பார்த்தாலும் ஒரே அமர்க்களம்."—

இத்தனையும் அவனுடைய கனவு நிகழ்ச்சிகள்தான். இதிலிருந்து தப்ப, இந்தக் கஷ்டத்தைச் சமாளிக்க அவ னால் முடியவில்லை. இரவு முழுதும் அவன் இந்த அவஸ் தையிலிருந்தான். மறுநாள் காலையிலும் எழுந்திருக்க முடி யாமல் மூர்ச்சையடைந்தவன் போலப் படுக்கையில் சோர்ந்து கிடந்தான்.

மறுநாள் பொழுது விடிந்து சற்றுநேரமிருக்கும், பெர்ஸனேவ் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு படித் துக் கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாக வீட்டுக் குடையவனுடைய வேலைக்காரன், அவசர அவசரமாக அங்கு வந்து சேர்ந்தான். பெர்ஸனேவ் வந்தவனை யாரென்று தெரிந்து கொண்டான். அவன்தான் இன்ஸரோவ் இருக் கும் வீட்டின் சொந்தக்காரன். இன்ஸரோவ் பேச்சுமூச் சில்லாமல் நோய் வாய்ப்பட்டுக் கிடக்கிறான் என்று அவன் அறிவித்ததும், பெர்ஸனேவ் வியப்படைந்து, அவனுடன் சென்றான். அங்கு இன்ஸரோவ் கிடந்த கிடைக்கையைப் பார்த்தவுடன், மிகுந்த கவலையடைந்து, டாக்டர் ஒருவரை வரவழைத்தான். டாக்டர் பரிசோதனை செய்து, குடல்

வீக்கமும், மூளைக் கொதிப்பும் ஏற்பட்டிருக்கிறது. வியாதி யஸ்தன் 'வலிமையே' இதற்குப் பகையாயிருக்கிறது. என்று கூறி, உதவியாளர் ஒருவருடன் சிகிச்சை செய்ய ஆரம்பித்தார்.

நெடுநேரம் கழித்து இன்ஸரோவ் கண்ணை விழித்துப் பெர்ஸனேவைப் பார்த்தான். 'எனக்கு வியாதிதானுக்கும்' என்று ஒரே வார்த்தைமட்டும் கூறிவிட்டு, மீண்டும் அலுத்துக் கிடந்தான். பெர்ஸனேவ் அவனைவிட்டு எங்கும் போக வில்லை. அந்த நோயாளியுடன் அவன் தனித்திருந்தபோது எத்தனை விதமான நினைவுகள் தோன்றினவோ? "அவன் எந்தப் பெண்ணைக் காதலித்தானே, அந்தப் பெண்ணால் இதயபூர்வமாகக் காதலிக்கப் பெற்றவன், இன்று நோயாய்க் கிடக்கிறான். நானே அவனுக்குத் துணையாக இருக்கி றேன். என்ன ஆச்சரியம்! என்னுடைய காதல் நிறை வேறவில்லை. ஆனாலும் இவர்களுடைய காதல் வளர்வ தற்கு நான்தான் காரணகர்த்தா. விதி அதன் போக்கில் வெகு விசித்திரமாகத்தான் வேலை செய்கிறது!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

பிறகு கொஞ்சநேரம் வெளியே சென்று உலாவிவிட்டு வந்தான். அப்பொழுதும் இன்ஸரோவ் தெளிவடைய வில்லை. ஒரு புத்தகத்தை எடுத்துப் படிக்கலானான். ஆனால் படிப்பில் எப்படிக் கவனம் ஓடும்? திடீரென வெளிக் கதவு திறக்கப்பட்டதும், திடுக்கிட்டெழுந்தான். ஓசைப் படாமல் எலினு உள்ளே வந்தாள். பெர்ஸனேவுக்கு அவ ளுடைய திடீர் வரவு மிகுந்த வியப்பூட்டியது. என்றாலும், மௌனமாக அவளை உற்றுப் பார்த்தான். அவளோ இன்ஸரோவ் அருகில் அவசரமாக ஓடினாள். அவன்மீது பாய்ந்து அணைந்து கொள்ள அவள் பதறினாள். பெர்ஸ னேவ் தடுத்துப் "பேசாமலிரு! இதனால் அவன் உயிருக் குங்கூட ஆபத்து வந்தாலும் வரலாம்," என்று நிதான மாகக் கூறினான்.

"என்ன? அவர் உயிருக்கும் ஆபத்தா?"

"எலினு, ஏன் இப்படிக் கேட்கிருய்? அவனுக்குத் தற்பொழுது உடல்நிலை மிகவும் மோசந்தான். என்ருலும், எப்படியாவது காப்பாற்றிவிட முடியும் என்று எனக்கு நம்பிக்கை உண்டு."

"அவர் இறந்தால் நானும் இறக்கவேண்டியதுதான்." இந்தச் சமயத்தில் இன்ஸரோவ் படுக்கையில் புரண்டு படுத்தான். அவள் இதைக் கண்டதும் தன் சட்டையைக் கழட்டிவிட்டு, அங்கேயே தங்கியிருக்கப் போவதாகப் பெர்ஸனேவிடம் சொன்ஞள். ஆனல் பெர்ஸனேவ் அவள் அதிகநேரம் தங்கியிருக்கக் கூடாதென்றும், அவளை வீட்டில் தேடுவார்கள் என்றும் கூறிப் புறப்படச் சொன்னுன்.

"இல்லை, அவரை நான் இந்த நிலையில் விட்டுவிட்டுப் பிரியமுடியாது."

"எலினு, நான் இருக்கிறேன் அவனுக்குத் துணையாக. என்னை நீ நம்பலாம். நான் அவனைக் காப்பாற்ற முடியும். நீ இங்கு இருப்பதால் பயன் ஒன்றும் இல்லை," என்று பெர்ஸனேவ் கூறியதும், மேலும் மறுக்கமுடியாமல் "நீங்கள் அடிக்கடி அவர் தேக நிலைமையை எனக்கு அறிவிக்க வேண்டும்" என்று கூறிவிட்டு, அவ்விடமிருந்து அகன்ருள்.

அவள் சென்றதும், சட்டென்று தூக்கத்திலிருந்து விழித்தவன் போல் இன்ஸரோவ் விழித்து, கண்களை மலர மலர விழித்து "யாரது?" என்று கேட்டான்.

"யாருமில்லை, இன்ஸரோவ், நான்தான்!" என்ருன் பெர்ஸனேவ்.

"அவள் எங்கே?"

"அவள் யார்? அவள் என்ருல்"—

"அவள்தான்!" என்று கூறிவிட்டுத் திரும்பவும் உறக்கத்திலாழ்ந்தான். இதே ரீதியில் எட்டு நாட்கள் இன்ஸரோவ் உயிருக்கு மன்ருடிஞன்.

# பதினாறாவது அத்தியாயம்

ஏற்கனவே வாக்குறுதியளித்தபடி அடிக்கடி எலினாவிடம் நேரிலோ, அல்லது கடிதம் மூலமோ இன்ஸரோவின் நிலைமையைப் பெர்ஸனேவ் அவ்வப்போது அறிவித்துக் கொண்டிருந்தான். அந்த எட்டு நாட்களும் எலினாவுக்குச் சித்திரவதை உண்டுபண்ணிய காலமாக இருந்தது என்றால், அதில் தவறில்லை. அன்ன ஆகாரத்தில் கூட அவள் கவனம் செலுத்தவில்லை. படிப்பில், ஆடை அலங்காரத்தில்கூட அவள் மனம் செல்லவில்லை. பிறருடன் அவள் சகஜமாகப் பேசுவதுமில்லை.

அன்னாவாஸிலிவ்னாவுக்கும் மற்றவர்களுக்கும் எலினாவின் இந்த மாறுதல் எதனால் என்று தெரியவேயில்லை. நிகோலை ஆர்டமெய்விட்சுக்குப் பெர்ஸனேவ் அடிக்கடி எலினாவிடம் வந்து போவதுகூட வெறுப்பளித்தது.

அத்துன்பகரமான எட்டு நாட்களும் கழிந்துவிட்டன. ஒன்பதாம் நாளன்று, இன்ஸரோவ் ஒருவாறாக வியாதி நீங்கப் பெற்றவனாகி விட்டான். பெர்ஸனேவ் அன்றைய தினமே எலினாவிடம் வந்து, இன்ஸரோவ் தெளிவடைந்து விட்டதாகவும், இன்னும் ஒரு வாரத்தில் சரியான நிலைக்கு அவன் வந்து விடுவானென்றும் தெரிவித்து விட்டான். அவளுக்கோ இந்தச் செய்தி அளவற்ற ஆனந்தத்தையும் நிம்மதியையும் கொடுத்தது என்பதில் சந்தேகமில்லை. ஆண்ட்ரே பெட்ரோவிட்ச்சின் உதவியையும் பெருந்தன்மையான போக்கையும் தனக்குள்ளேயே பாராட்டிக் கொண்டாள். அன்றுதான் அவள் கவலை நீங்கி நிம்மதியாகத் தூங்கினாள்.

பின்னும் சில தினங்கள் கழிந்தன. இன்ஸரோவ் கொஞ்சம் கொஞ்சமாகத் தேறிவந்தான். எலினா, அவனைப் பார்க்கவேண்டும் என்று துடித்தாள். பெர்ஸனேவ் அவ்வளவு அவசரப் படவேண்டாமென்று அவளுக்குப் புத்திமதி சொல்லியுங்கூட, அவள் கேட்கவில்லை. தவிரவும் எது

எப்படியானாலும் மறுதினம் இன்ஸரோவைத்தான் போய்ப் பார்ப்பது நிச்சயமென்றும், அங்கு யாரும் வரக்கூடாது என்றும் சொல்லிவிட்டாள். வேறு வழியின்றி பெர்ஸ னேவ் ஒப்புக் கொண்டு தன் வீடு திரும்பிவிட்டான். அன் றைத் தபாலிலேயே அவள் இன்ஸரோவுக்குத் தான் மறு தினம் வருவதாயும் வேறு எவரையும் அனுமதிக்க வேண்டாமென்று தானே சொல்லியிருப்பதாயும் கடிதம் எழுதிவிட்டாள்.

என்றாலும், பெர்ஸனேவ் தனது நண்பனுக்காற்ற வேண்டிய கடமையில்,தான் தவறாமலிருந்ததுபற்றி மகிழ்ச் சியே யடைந்தான். என்ன இருந்தாலும் இன்ஸரோவ் அவருடைய உண்மை நண்பன். உத்தம நட்புக்கு அடை யாளம், ஆபத்தில் உதவுவதுதான். பெர்ஸனேவ் இந்த உண்மையை அறிந்தவனாதலால், நண்பனுடைய ஆபத்துக் காலத்தில் உதவுவது கடமை என்று நினைத்தான்.

கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி மறுநாள் எலினா இன்ஸரோவ் வீட்டுக்குச் சென்றாள். அவளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் இன்ஸரோவ். அதற்கு முன் வீட்டுக்காரியின் உதவியுடன் அறையை ஓரளவு சுத் தம் செய்து வைத்திருந்தான். அவள் வருவாள்—இன் னும் சற்றுநேரத்தில் வந்து விடுவாள். என்று நினைத்து நினைத்து அவன் ஆசைக் கனவுகள் கண்டு கொண்டிருந் தான். அவளும் வந்து சேர்ந்தாள். வந்தவள் அவனை நெருங்கி அணைத்துக் கொண்டு இன்பக் கண்ணீர் விடுத் தாள். அவனுக்கோ பேசுவதற்குக் கூட—வாவென்றழைப் பதற்குக்கூட இயலாது, இன்பத்தால் தத்தளித்தான். பிறகு அவள் “ உங்கள் உடல் இவ்வளவு மெலிந்துவிட் டதே ” என்று அழாக்குறையாய்க் கேட்டாள். அவனும் அதே கேள்வியை அவளிடம் திரும்பிக் கேட்டான். அவ ளுடைய உடம்பும் இளைத்துத்தான் இருந்தது. அப்புறம் பெர்ஸனேவைப்பற்றி அவள் பெருமையாகக் கூறிக்கொண் டாள். “ ஒரு சகோதரன் கூட இப்படி எனக்கு உதவி

யிருக்க முடியாது. என்னைக் காப்பாற்றுவது ஒன்றே—வியாதியிலிருந்து என்னை விடுவிப்பது ஒன்றே, அவனுடைய நோக்கமாயிருந்தது. அன்னம், ஆகாரம், தூக்கம் எதையும் பாராட்டாமல் பொறுமையுடன் இருந்து, எனக்காக அவன் செய்த சேவையை நான் என்றென்றும் போற்றக் கடமைப்பட்டுள்ளேன்." என்று அவன் சொன்னதை, அவள் மனப் பூர்வமாக ஒப்புக் கொண்டாள். "அன்பா, அவரும் ஒரு காலத்தில் என்னைக் காதலித்தார். ஆனால் இன்று எங்களிடையே சகோதர வாஞ்சைதான் நிலைத்து இருக்கிறது. அவர் உங்களை மட்டுமல்ல. உங்களைக் காப்பாற்றுவதன் மூலம் என் உயிரையும் காத்தார். உங்களைக் காப்பாற்ற முடியும் என்று உறுதி கூறி, எனக்கு ஆறுதலளித்தார். அன்று முதன்முதலாக நீங்கள் என்னைக் காதலிப்பதாகத் தெரிவித்தது அவர்தான். அதே மாதிரி என் காதல் நிறைவேறியதற்கு உதவியவரும் அவர் தான் !"

"எலீஞ, என்ன ஆச்சரியம் ! நண்பனுக்காகத் தன் காதலையும் தியாகம் செய்த அவ்வுத்தமனுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்."

"உண்மை. நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று அவருக்குத் தெரிந்தவுடன், தன் உணர்ச்சியைக் கட்டுப் படுத்திக் கொண்டு, நமது காதலை வளர்த்த பெருமையாளர் அவர்." என்று அவளும் பெர்ஸனைவைப் பாராட்டினாள். சிறிதுநேரம் அவர்கள் இன்பப் பிணைப்பிலேயே மெய்மறந்திருந்தார்கள். பிறகு இன்ஸெனோல் சட்டென்று நிமிர்ந்து, "எலீஞ, நான் உன்னை மனப்பூர்வமாகக் காதலிப்பது உனக்குத் தெரியும். நீ என்னுடையவள். உனக்காக நான் எதையும் தியாகம் செய்யக் கடமைப்பட்டவன். எலீஞ, நீ இப்பொழுது வந்திருப்பதால் நான் அடைந்துள்ள பரவசம்—ஆனந்தப் பூரிப்புத் தாங்க முடியவில்லை. என்னுடைய பலஹீனமான உடல் நிலையில் இவைகளைச் சமாளிக்கக்கூட முடியவில்லை. தயவு செய்து நீ இப்பொ

மூது வீடு செல், உடல்நிலை தெளிந்ததும் நாம் மற்றவை களைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம்." என்று கூறியபடி அவளை அணைத்துக் கொண்டு முத்தங்களைச் சொரிந்தான்.

## பதினேழாவது அத்தியாயம்

நிகோலை ஆர்ட்டமெய்விட்சும் ஷூபினும் ஹாலில் இருந்தனர். ஷூபின் சிகரெட் குடித்துக் கொண்டு ஏதோ யோசித்துக் கொண்டிருந்தான். நிகோலை, கவலை தேங்கிய முகத்துடன் அங்குமிங்கும் உலாவினன். ஷூபின் சிக ரெட் சாம்பலை உதிர்த்துக் கொண்டே "நீங்கள் இப்படி யும் அப்படியும் நடந்துவிட்டால் போதுமா? விஷயத் தைத்தான் வாய்விட்டுச் சொல்லுங்களேன்." என்று கேட்டான்.

"உனக்கு எப்போதும் கேலிதான். ஆனல் எனக் கென்னமோ 'அவளை' விட்டுப் பிரிந்திருப்பது பிடிக்கவே யில்லை. அவள் அங்கு 'ரேவலில்,' இன்னும்தான் என்ன செய்கிருள்? ஷூபின், அவளைப் போன்ற ஒரு பெண் மணியை நான் கண்டதேயில்லை. எப்பேர்ப்பட்டவள் தெரியுமா? ஒரு கடிதங்கூட எழுதாமல் அங்கேயே தங்கி யிருக்கிருள்."

"அதற்கென்ன, வந்தவுடன் நாலு அறை வைத்தால் எல்லாம் சரிப்பட்டுவிடும்!"

"நல்ல யோசனை ஷூபின், ரொம்பவும் நல்லது. உன் போன்ற ஆர்டிஸ்டுகளுக்கு இதைத் தவிர வேறு என்ன தெரியும்? இங்கிதம் தெரியாதவர்கள் நீங்கள்!"

"ஆமாம். குர்னடோவ்ஸ்கியைப் போன்ற விதரணைக் காரனயிருக்க வேண்டும். சீட்டாட்டத்தில் உங்களை தோற்கடித்துவிட்டாராமே அவர்."

"ஆமாம் ஷூபின், அந்த மனிதனின் திறமையை இந்த வீட்டில் யாரும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்

லேயே, எலினுவுக்கு இவனைப்போல் ஒரு கணவன் கிடைப்பதே அபூர்வம் என்று ஏன் தெரியவில்லை? இப்பொழுதெல்லாம் அவள் சமூகமாகக் கூட இருப்பதில்லை. தனியாக எங்கெல்லாமோ போகிறுள். முந்தா நாள் அவள் எங்கேயோ போய்விட்டாள். கட்டுப்பாடு, அடக்கம் எதுவும் இல்லை. இந்தக் காலத்தின் கோலம். அப்பா கேவலம்! நான் எதற்காக இவ்வளவு தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும் ''—

'' உங்கள் சாமர்த்தியம் யாருக்கு வரும்?''

'' விளையாடாதே ஷூபின். யாருக்குமே, அன்னுவாஸிலிவ்னுவுக்குக்கூட என்மீது அவ்வளவாக நல்ல அபிப்பிராயம் ''—

இந்தப் பேச்சை முடிப்பதற்குள் ஷூபின் இடைமறுத்து, '' நீங்கள் ஒன்று செய்யுங்கள். இன்னும் இரு தினங்களில் அன்னுவாஸிலிவ்னுவின் பிறந்த தினம் வருகிறது. அவளுக்கு, அன்று நல்ல பரிசு ஒன்று நீங்களே தாருங்கள். அப்புறம் பாருங்களேன்! உங்களிடம் அவளுக்குண்டாகும் நம்பிக்கையை. ''

'' ஆமாம் நல்ல சமயத்தில் நினைவு மூட்டினுய். ' அவளுக்காக வாங்கிய ஆடைப் பெட்டியொன்று இருக்கிறது. அதைத் தந்து விடுகிறேன் இவளுக்கு. '' என்று தாராளமாக ஒப்புக் கொண்டான் நிகோலை ஆர்டமெய்விட்ச்.

சற்றுநேரம் வேறு விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்து விட்டு, ஷூபின் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுன். நிகோலை ஆர்டமெய்விட்ச், அன்னுவாஸிலிவ்னுவுக்குக் கொடுக்கப் போகும் பரிசை (வெள்ளிப் பேழையை) எடுத்து வைத்துக் கொண்டு, அதன் அழகைத் தனக்குத் தானே வர்ணித்துக் கொண்டிருந்தார்.

இச்சமயத்தில், அவருடைய வேலைக்காரன் ஒருவன் பின்னுல் வந்து நின்றுன். அவனைக் கண்டதும் விஷயம் என்னவென்று நிகோலை விசாரித்தான்.

"எஜமானே, நான் தங்களிடம் சிறு வயது முதல் வேலை பார்ப்பவன். ஆகவே, உண்மையை மறைக்க மாட்டேன். எனக்குத் தங்கள் பெண் எலினு போகுமிடம் தெரியும்!" என்றதும், நிகோலே துள்ளியெழுந்து கோபத்துடன் "அவளைப்பற்றி அவதூறாகப் பேசாதே. அவளைப் பற்றி உனக்கென்ன தெரியும்?"

"கோபிக்க வேண்டாம், எஜமானே, மூன்று நாளைக்கு முன் அவளை ஒரு வீட்டில்—பொவார்ஸ்கி அருகில் ஒரு மூலை வீட்டில் பார்த்தேன்."

"என்ன? எலினுவையா? அங்கேயா? பொய் சொல்லாதே."

"நிச்சயமாகத்தான் எஜமான். இதில் எதற்காகப் பொய் பேசவேண்டும்?"

"ஜாக்கிரதை! இதுபற்றி எங்கும் யாரிடமும் எதுவும் பேசக்கூடாது நீ. தெரியுமா?"

"தெரியும் எஜமான்," என்று பணிவாகக் கூறிவிட்டு அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான்.

நிகோலே ஆர்டெயெவிட்ச் மனம் அதிதீவிரமாக வேலை செய்தது. உடலும் உள்ளமும் பதறியது. ஆத்திரத்தாலும் உணர்ச்சி வேகத்தாலும் என்ன செய்வது என்று கூடத் தெரியாமல் திணறினன். "இவ்வளவுக்கு வந்துவிட்டதா? இவன் சொன்னது உண்மையாயிருக்குமா? உண்மையாகவே இருந்தால் ஐயோ! அப்புறம் என்ன செய்வது? அங்கே யார் இருக்கிறார்கள்? இவள் எதற்கு அங்கே போகவேண்டும்? சரி. நானே போய் உண்மையைக் கட்டாயம் அறிந்து கொள்ளத்தான் வேண்டும்," என்று கூறிக் கொண்டே அந்த வெள்ளிப் பேழையை அவசரம் அவசரமாகப் பெட்டிக்குள் வைத்துவிட்டு, அன்னவாசிலியெவ்னவைப் பார்க்கச் சென்றார். அவளோ படுக்கையில் கிடந்தாள் உடல்நிலை சரியில்லாமல். இந்த

நிலை அவருக்குப் பார்க்க சகிக்கவில்லை. என்றாலும், அவருடைய மனக் கவலையில் நிதரிசன நிலைமையைப் பற்றிக் கவலைப்படவில்லை.—

## பதினெட்டாவது அத்தியாயம்

காலவேகத்தில் நாட்டின் நிலைமை அதிதுரிதமாக மாறியது. துருக்கி ரஷ்யாவின்மீது போர் தொடுத்தது. அந்த சமயத்தில் உடனே வரும்படி இன்ஸரோவுக்குப் பல்கேரியாவிலிருந்து அழைப்பின்மேல் அழைப்பாக வந்தன. அவனுடைய உடல் நிலைமை இன்னும் சீராகவில்லை. இருமல், ஜுரம், பலஹீனம் இருக்கத்தான் செய்தது. என்றாலும், அவன் புறப்பட வேண்டுமென்று தீர்மானித்தான். எலினாவும் அவனைத் தொடர்வதென்று தீர்மானித்து விட்டாள்.

இந்தச் சமயத்தில் ஒருநாள் எலினாவுக்குப் பெற்றோரிடமிருந்து அழைப்பு வந்தது. அவளும் தாயின் அறைக்குச் சென்றாள். அங்கே அன்னா வாஸிலிவ்னா அழுது கொண்டிருந்தாள். நிகோலே ஆர்ட்டமெய்விட்ச்சோ ஆத்திரத்துடன் இருந்தார். எலினாவுக்கு இந்த நிலைமையில் தகப்பனார் சொன்னதாவது "எலினா, உன்னுடைய சமீபகால நடவடிக்கைகள் எங்களுக்குப் பிடிக்கவில்லை. பெற்றோர்களுடைய விருப்பத்துக்கு விரோதமாகப் பெண்கள் நடப்பதென்பது நியாயமல்ல. நேர்மையல்ல. சீலத்துடன் வாழ்ந்து, நல்ல சிறப்பான முறையில் காலம் கழிக்கும் நமக்கு, இதெல்லாம் சரியானதல்ல."

"அப்பா நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்."

"அப்படியானால் உனக்கு அங்கு என்ன வேலை?"

"நான் எதையும் மறைக்கப் போவதில்லை. அங்கு நான் போவது உண்மைதான். என் கணவனைப் பார்ப்பதற்காக நான் போகிறேன்."

"என்ன, உன் கணவனையா?" என்று இருவரும் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"ஆமாம் அப்பா, நான் டிமித்ரி நிக்கானரோவிட்ச் இன்ஸரோவைக் காந்தர்வ மணம் செய்து கொண்டிருக்கிறேன்" என்றாள். இதைக் கேட்டதும் நிகோலைக்கு ஆத்திரம் தாங்கவில்லை.

"விட்டேறு பார் அவனை! அவனைச் சிறைக்கு அனுப்புகிறேன். எங்கள் சம்மதம் இல்லாமல் நீ இப்படிச் செய்யலாமா? நமக்கு அவமானம் இல்லையா இது?" என்று உறுமினார்.

"அப்பா, அதைப்பற்றி நீங்கள் கவலைப் படவேண்டாம். நாங்கள் பல்கேரியாவுக்கே போய் விடுகிறோம்."

நிகோலைக்கு ஆத்திரம் தாங்கவில்லை. அவளை அடிக்க முன்வந்த சமயத்தில், ஷுபின் வந்து சேர்ந்தான்.

"உங்களை அகஸ்டினு கிரிஸ்டியானேவ்னு பார்க்க வந்திருக்கிறாள்." என்று சொல்லி நிகோலையை அழைத்துப் போய்விட்டான்.

அவன் சென்றவுடன், எலினு தன் அன்னையின் காலடியில் விழுந்து கால்களைக் கட்டிக் கொண்டாள்.

உவார் ஜவானேவிட்ச், அச்சமயம் தன் படுக்கையில் கிடந்து புரண்டு கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் மதுபான வகையறாக்கள் வைக்கப்பட்டிருந்தன. அங்கு அவனுக்குத் துணையாக ஷுபினும் வந்து சேர்ந்தான். இருவரும் எலினுவின் விசித்திரமான போக்கைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள்.

ஷுபின் சொன்னதாவது, "எலினு தன் தீர்மானத்தை மாற்றப் போவதில்லை. எந்த இடையூறுகளையும் அவள் சட்டை செய்யப் போவதில்லை. நிகோலை அர்ட்டெமெய்விட்ச் எச்சரிக்கைகளை அவள் லட்சியம் செய்யமாட்

டாள். நம்மை எல்லாம் கூட அவள் பிரிந்து போகத் தீர்மானித்து விட்டாள். தன் காதலனுடன் போவதென்று அவள் தீர்மானித்து விட்டாள் என்று கூறினன். உவார் ஐவனேவிட்ச் "அப்படியா, நடக்கட்டுமே" என்று ஒரே வார்த்தையாகக் கூறிவிட்டுக் கிண்ணத்திலிருந்த பானத்தைக் குடித்துத் தீர்த்து விட்டான். ஷூபின் "யௌவன காலமே விசித்திரமான அமைப்புள்ளது. எத்தனையோ ஆசைகள், பிரச்சினைகள் எல்லாம் இந்தக் காலத்தில் தான் உண்டாகின்றன. வாழ்வு, தாழ்வு, வெற்றி, தோல்வி, காதல், தேசம், சுதந்தரம் இன்னும் எத்தனையோ பிரச்சினைகள்.

"ஆமாம்! ஆமாம்!! என்று கூறிவிட்டு, மற்றும் ஓர் கிண்ணம் குடித்தான் உவார் ஐவனேவிட்ச்!"

"நினைத்தபடி எதுதான் நடக்கிறது? இன்ஸரோவ் நம்மைவிடப் பாக்கியவான். எலிஞவின் காதலைப் பெற்றான். எங்களுக்கு அந்தப் பாக்கியமில்லை. என்னைத்தான் எடுத்துக் கொள்ளலாமே, நான் என்ன திறமையற்றவனா, அல்லது அதிர்ஷ்டஹீனனா? என்னமோ யார் கண்டது? இதே ஷூபின் எதிர்காலத்தில் பிரமாதமான மனிதனாகவும் ஆகலாம். அதிசயமில்லை. அதெல்லாம் காலம் செய்யும் வேலை. இன்ஸரோவ் எந்த ரகத்தில் மற்றவர்களைவிட உயர்ந்தவனென்றெண்ணி அவள் பொறுக்கியெடுத்தாளோ? யார் கண்டது உண்மையை?" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே ஷூபின் கூறியதும், உவார் ஐவனேவிட்ச் "சரி. எனக்குத் தூக்கம் வருகிறது. என்று கூறிவிட்டுத் தூங்கலானன். ஷூபின் மேற்கொண்டு எதுவும் பேசாது தன் அறைக்குப் போய்ச் சேர்ந்தான்.

## பத்தொன்பதாவது அத்தியாயம்

அன்னவாஸிலிவ்ன எலிஞவின் இரகசிய மணத்தைப்பற்றிக் கேட்டதிலிருந்து படுத்த படுக்கையானள். தன் மகள் எவ்வளவு சமாதானம் கூறினலும் அவளுக்கு

ஏக்கம் தீரவில்லை. "நான் அவரைக் காதலித்தேன், மணந்து கொண்டேன். அப்பாவுக்குப் பிடிக்கவில்லையென்றால், அதற்கு நான் என்னம்மா செய்யமுடியும்? நான் அவரோடு போய் விடுகிறேன், என்று எலினு சொல்வாள். அவள் தாய் இதைக் கேட்டவுடன்," ஐயோ உன் கதி இப்படியா போகவேண்டும்? அந்தக் காட்டுப் பிராந்தியத்தில் உன்னல் எப்படி வாழமுடியும்?" என்று ஏக்கத்துடன் கேட்டாள்.

"இல்லை அம்மா, அங்கும் பல நகரங்கள் உண்டு. சுகமாகவும் வாழவும் முடியும். கணவருடன் இருப்பது தானே அம்மா! என்போன்றவருக்குச் சுகத்தைத் தரும்?

"அப்படியானல் நீ சீக்கிரமாகப் புறப்பட வேண்டுமென்பது உறுதிதானு?"

"ஆமாம் அம்மா, ஆனல் அப்பா சட்டத்தின் மூலம் எங்களைப் பிரித்து விடுவதாகப் பயமுறுத்துகிருரே அம்மா?"

"முடியாது. மாட்டார்! அவர் அப்படிச் செய்ய மாட்டார். எனக்கும் இந்தக் கல்யாணம் பிடிக்கத்தான் இல்லை. அதற்காக என் பெண்ணின் வாழ்வைக் கெடுக்க நான் அனுமதிக்க முடியாது!" என்று ஆத்திரத்துடன் அன்னுவாஸிலிவ்னு கூறினுள்.

எலினுவுக்குத் துக்க நிலையிலும் இந்த ஆறுதல் துளி சந்தோஷத்தை யுண்டாக்கிற்று. இதே நிலைமையில் சில தினங்கள் சென்றன.

பிறகு ஒருநாள் அன்னுவாஸிலிவ்னு எப்படியோ கொஞ்சம் தைரியமடைந்து, தன் புருஷனுடன் தனியாயிருந்தபோது இந்த விஷயத்தைக் கிளப்பினுள். நிகோலை ஆர்ட்டமெய்விட்ச், கட்டாயம் அவர்களைப் பிரித்துவிட்டால்தான் குலமானம் போகாமல் இருக்குமென்று பிடிவாதமாகக் கூறினர். அவளோ, தன் பெண்ணின் வாழ்வின்பத்தைக் கெடுப்பது தகாது என்று வாதாடினுள்.

நீண்டநேரம் அவர்களிடையே விவாதம் நடந்தது. கடைசியில் அன்னுவாஸிலிவ்னுதான் ஜெயித்தாள்.

தன் மகளை அழைத்துக் கண்ணீர் சொரிந்தபடி அவளை அணைத்துக் கொண்டு, "எல்லாம் தீர்ந்துவிட்டது! உன் தகப்பனுரும் உங்கள் விஷயத்தில் தலையிடுவதில்லை என்று சொல்லிவிட்டார்." என்று கூறியதும், எலினு சந்தோஷம் தாங்க முடியாமல், "அப்படியானுல் இன்ஸரோவை இங்கு வந்து உனக்கு வந்தனமளிக்க அனுமதிக்க முடியுமா?" என்று கேட்டாள். ஆனுல் அன்னுவாஸிலிவ்னு அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை.

அன்றியும் நிகோலை ஆர்ட்டமெய்விட்ச் அன்னுவாஸிலிவ்னுவின் வேண்டுகோளை இலேசில் ஒப்புக் கொண்டுவிடவில்லை. அவன் ஒப்புக் கொள்வதற்காக அவள் எதையும் செய்யத் தயாராயிருந்தாள். தன் மகளின் எதிர்கால வாழ்வு சீர்கெட்டுப் போகாமலிருப்பது ஒன்றையே அவள் கருதினுள். நிகோலை ஆர்ட்டமெய்விட்சின் கடன்களை அடைக்க அவள் இசைந்தாள். அவன் செலவுக்குத் தேவையான அளவு பணம் கொடுக்கவும் ஒப்புக் கொண்டாள். இதன் மூலம் அவனுடைய தவறுன காரியங்களுக்குக்கூட அவள் உதவவேண்டி வந்தது.

நவம்பர் மாதம் முடிந்துவிட்டது. அவர்கள் புறப்பட வேண்டிய நாளும் நெருங்கியது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ? அவ்வளவு சீக்கிரம் மாஸ்கோவை விட்டுப் புறப்பட இன்ஸரோவ் ஆசை கொண்டான். புறப்பாட்டுக்குக் குறிப்பிட்ட நாள் நெருங்க நெருங்க, இன்ஸரோவின் துடிதுடிப்பும் ஆவேசமும் அதிகரித்தது. எலினு, தாயின் அனுமதி பெற்று அவனைத் தன் வீட்டுக்கு இரகசியமாக அழைத்து வந்தாள். அன்னுவாஸிலிவ்னு, அவனிடம் தனியாக இரண்டொரு வார்த்தைகள் பேசினுள். அவன் வியாதியில் அடிபட்டு மிகவும் பலஹீனமாயிருந்தது கண்டு அவள் மிகவும் வருந்தினுள்.

ஆண்டவன்தான் உங்களைக் காப்பாற்ற வேண்டும். இன்ஸரோவ் என் மகளை நீ சீராக வைத்துக் கொள்ள வேண்டும். நான் இருக்கும்வரை வறுமையால் நீங்கள் வாடக்கூடாது. என்று அழுதபடியே கூறிவிட்டு, அவர்களிருவரையும் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

ஊர்விட்டுப் புறப்பட நிச்சயித்த அந்த நாளும் வந்தது. அன்றைய தினம் பன்னிரண்டு மணிக்கு புறப்பட வேண்டியது என்று நிச்சயிக்கப்பட்டது. எலினு பெற்றோரிடம் விடை பெற்றுக்கொண்டு இன்ஸரோவ் வீட்டிற்கு வருவதென்றும், அங்கிருந்து இருவருமாகக் கிளம்புவதென்றும், இருவருமாக நிர்ணயித்துக் கொண்டனர்.

பெர்ஸனேவ் தன் நண்பன் மனைவியுடன் புறப்படுவதைக்காண அவசரம் அவசரமாக வந்து சேர்ந்தான். அதே சமயத்தில் ஷூபினும் எலினுவுடன் வந்து சேர்ந்தான். ஏற்கெனவே பெட்டி படுக்கைகளைத் தயாராய் எடுத்து வைத்திருந்தான் இன்ஸரோவ்.

பெர்ஸனேவுக்கு, இத்தம்பதிகள் தங்கள் வந்தனத்தையும், அன்பையும் முறைப்படி செலுத்தத் தவறவில்லை. ஷூபின் நேரமாக ஆகப் பிரிவினைக் கஷ்டம் அதிகரிக்குமென்று நினைத்தவனுய், 'நாமெல்லோரும் மீண்டும் கடைசி முறையாக ஒன்று சேர்ந்திருக்கிறோம். நடந்தது எப்படியானுலும், எதிர்காலம் செம்மையாகவும், சிறப்பாகவும் இருக்க வேண்டுமென்பதே நமது ஆசை.' மேற்கொண்டு பேசமுடியாமல் அவன் நாத்தழுதழுத்தது.

பெட்டியும் படுக்கையும் வண்டியிலெடுத்து வைக்கப்பட்டது.

'சரி, ரஷ்ய முறைப்படி நாம் சற்று உட்கார்ந்து விட்டுப் புறப்படுவோம்!' என்று இன்ஸரோவ் கூறியதும், எல்லோரும் நிசப்தமாக ஆசனங்களில் உட்கார்ந்து கொண்டனர். சற்று நேரத்துக்குப் பிறகு எல்லோரிடமும் இன்ஸரோவ் விடைபெற்றுக் கொண்டான். அந்த அறைக்குக்

கூட 'போய் வருகிறேன்!' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் மனைவி எலினுவுடன்.

எலினு வண்டியிலேறி உட்கார்ந்தாள். அவர்கள் புறப்படுவதை உள்ளத்துக்குள்ளே குமுறும் துக்கத்துடன் பெர்ஸனேவ், ஷூபின், வீட்டின் சொந்தக்காரர் யாவரும் பார்த்துக்கொண்டே மௌனமாயிருந்தனர்.

திடீரென்று நிகோலே ஆர்ட்டமெய்விட்ச் வந்து சேர்ந்தார். வண்டியிலிருந்து இறங்கி ஓடிவந்த அவர், தன் மகளிடம் நெருங்கி 'நல்லவேளை. சமயத்தில் வந்துவிட்டேன். இதோ எங்களுடைய கடைசி அன்பு காணிக்கை! என்று கூறிக்கொண்டே ஒரு சிறு விக்கிரகத்துடன் கூடிய சங்கிலியை அவள் கழுத்தில் அணிவித்தார். அவள் அன்பும் சோகமும் கலந்த மகிழ்ச்சியுடன் அவர் கைகளை மாறி மாறி முத்தமிட்டாள். அதற்குள் அவருடைய வண்டிக்காரன் மூன்று கிண்ணங்களில் சாராயத்தை ஊற்றிக் கொண்டுவந்தான். நிகோலே ஆர்ட்டமெய்விட்சின் கண்கள் நீரைக் கக்கின. 'நாம் குடிக்கலாம். உங்கள் பிரயாணம் நலம் பெறட்டும்.' என்று தாங்க முடியாத துக்கத்துடன் கூறிவிட்டுத் தன் கையில் ஒரு கிண்ணத்தை வைத்துக் கொண்டு, அவர்கள் இருவர்களிடமும் மற்ற இரு கிண்ணங்களையும் கொடுத்தார். மூவரும் பானம் அருந்தினர். வண்டி புறப்பட்டது. 'போனதும் கடிதம் போடுங்கள்! என்று அழுதுகொண்டே இரைந்து கூறினர் நிகோலே ஆர்ட்டமெய்விட்ச். எலினு தலையை நீட்டிப் போய் வருகிறேன் அப்பா, ஆண்ட்ரே பெட்ரோவிட்ச், பேவல் யாக்லோவிட்ச், எல்லோருக்கும் வந்தனம்! போய் வருகிறோம். ரஷ்யாவே, உனக்கும் வணக்கம்!' என்று கூறினாள்.

வண்டிக்காரன் குதிரைகளை விரட்டியவுடன் அவைகள் வேகமாக ஓட ஆரம்பித்தன. வண்டி கண்ணுக்கு மறையும்வரை அங்கிருந்த அனைவரும் துக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

## இருபதாவது அத்தியாயம்

காலம் அதன் போக்கில் தடங்கலின்றி ஓடிக்கொண்டிருந்தது. ஏப்ரல் மாதத்தில் ஒருநாள் வெனிஸ் நகருக்கு அருகாமையிலில் உள்ள நதியில் ஒரு படகு மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்தப் படகில் எலினுவும் இன்ஸரோவும் அமர்ந்து உல்லாசமாகப் பிரயாணம்செய்து கொண்டிருக்கின்றனர்.

எலினு, முன்னைவிட அதிகமாக மாறிவிடவில்லை. முன் போலவேதான் இருந்தாள். என்றாலும், அவள் முகம் கொஞ்சம் மாறுதல் அடைந்திருந்தது. உருவமும் கொஞ்சம் கவர்ச்சியான முறையில் மாறியிருந்தது. தெளிவும் நிம்மதியுங் கொண்ட உள்ளம் படைத்திருக்கிருள் என்பதை, அவள் புறத்தோற்றமே காட்டிற்று. ஆனல் இன்ஸரோவ் இன்னும் பலஹீனமாய்த்தான் இருந்தான். அவன் உடல்நிலை சீர்பெறவில்லை. அடிக்கடி இருமினுன். உள்ளமும் உடலைப்போல் வாடிவிட்டது போலும். முகத் தோற்றமும் நொந்து வருவதைக் காட்டிற்று. கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குமேல் அவன் உடல்நிலை கெட்டதால் வியன்னுவிலேயே தங்கவேண்டி வந்தது. மார்ச்சு மாதத்தில்தான் அவன் வெனிஸ் வர முடிந்தது. அங்கிருந்து ஸெர்வியாவுக்கு ஸாரா வழியாய்ப் போய், பிறகு பல்கேரியாவை அடையலாம் என்று அவன் திட்டமிட்டிருந்தான். மற்றப் பாதைகள் யுத்தத்தினுல் போக்குவரத்துத் தடைப்பட்டுக் கிடந்தன. தவிரவும் அப்பொழுது யுத்தம் மும்முரமான ரீதியில் இருந்தது.

'டான்யூப்' சம்பந்தமான விவகாரத்தால் யுத்தம் வலுவடைந்தது. இங்கிலாந்தும் பிரான்சும் ரஷ்யாவின் மீது போர் தொடுத்தன. ஸ்லாவனிக் நாடுகள் யாவும் ஒன்றுகூடித் தயாராய்க் கொண்டிருந்தன. இந்த நிலையில் அவர்கள் பல்கேரியாவை எளிதில் அடைவது கூடுமா?

படகு கரை சேர்ந்ததும் இருவரும் கடற்கரையோரமாக நடந்து சென்றூர்கள். எலீனு கடல் அலையைப் பார்த்த

படி "இந்தக் காட்சி எனக்குப் பயங்கரமாயிருக்கிறது. தவிரவும் குளிர் வேறு உங்களுக்கு உபத்திரவமாயில்லையா?" என்று கேட்டாள். அவன் சோகம் கலந்த புன்னகையுடன் குளிரா...குளிருக்குப் பயந்தால் சரிப்படுமா? எலினு, அதோ பார்! என் நாட்டுக்கு அருகாமையில் நாம் வந்துவிட்டோம். இப்பொழுதும் நம்மீது வீசும் காற்று அங்கிருந்துதான் வருகிறது. இந்தக் காற்று வாங்குவது இன்பமாய்த் தானிருக்கிறது என்று அழுத்தமாகக் கூறினுன்.

"இந்தக் காற்றில் நீங்கள் எதிர்பார்க்கும் கப்பல் வர முடியுமல்லவா?"

"வரலாம். ரெண்டிட்ஸ் ஒரு வாரத்தில் வருவதாக உறுதியளித்தான்." என்று கூறிக் கொண்டிருந்தபோது, ஒரு ஆஸ்திரிய சீமான் குதிரை சவாரி செய்து கொண்டு அங்கே வந்தான். நல்லவேளையாக இவர்கள் கொஞ்சம் ஒதுங்கிக் கொண்டதால், அவன் இவர்களைத் தாக்காமல் போய்ச் சேர்ந்தான். இன்ஸரோவுக்கு ஆத்திரமும் வெறுப்பும் உண்டாயிற்று. என்ருலும், எலினு மெதுவாக அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டாள். இன்று நாம் தியேட்டருக்குப் போவோம். இன்ருவது அரசியல், தேசம் எல்லாவற்றையும் மறந்து நிம்மதியாக இருக்கலாமோ," என்றதும், அவன் ஒரு மாதிரியாகச் சிரித்துவிட்டு ஒப்புக் கொண்டு புறப்பட்டான். வேனிஸ் நகரத்தின் வனப்பும் பெருமையும் எல்லையற்றது. அது பழகினவர்களுக்குத்தான் தெரியும். ஆனல் அவர்கள் வந்தது முதல் இந்த நகரத்தைச் சுற்றிப் பார்க்க முடியவில்லை. அவர்கள் படகில் திரும்பவும் சென்றபோது, எலினு சுற்றியுள்ள காட்சிகளைக் கண்டு ஆனந்திப்பதில் குறைவைக்கவில்லை. பிறகு பகல் பூராவும் நகரைச் சுற்றினுர்கள். மாலையில் தியேட்டருக்குச் சென்ருர்கள்.

தியேட்டரில் நடந்த நாடகத்தைப் பார்த்துவிட்டு, அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பினுர்கள்.

திரும்பிய பிறகு எலினாவுக்குத் தன் தாயின் வீட்டின் நினைவு உண்டாகி நெடுநேரம் வருந்தினாள். தன் கணவனுடைய உடல் நலம் பெறவேண்டும் என்று கடவுளைப் பிரார்த்தித்தாள். நீண்ட நேரத்திற்குப் பிறகு அவளுக்கு உறக்கம் வந்தது. அவள் மனத்திலே நொடிக்கொரு தரம் கிளர்ந்தெழுந்த சிந்தனைகளே அவளுடைய உறக்கத்துக்கு விரோதமா யிருந்தன !

எலினாவும் இன்ஸரோவும் வீடு திரும்பிய சில நாழிகைக்குப் பின், ஒரு வாலிபன் வந்தான். இவர்களுக்கு அவன் ஒரு வேளை வேவுகாரனாயிருப்பானோவென்றுகூடச் சந்தேகம் உண்டாயிற்று. தனக்கு இன்ஸரோவை ரொம்ப நாளைக்கு முன்னமேயே தெரியுமென்று அறிமுகப்படுத்திக் கொண்டான். பிறகு யுத்தத்தைப் பற்றியும், தேசிய நிலைமையைப் பற்றியும் வெகு விரிவாக வாயளப்பு அளந்தான். இன்ஸரோவுக்கு அவனுடைய அளப்பு வெறுப்பாக இருந்தது. அவன் போன பிறகு இன்ஸரோவ், இதுமாதிரி வாய்ப் பேச்சு வீரர்களுக்குத்தான் இப்போது பஞ்சமில்லையே ! அது கிடக்கட்டும். ரெண்டிட்ச் வந்தால் என்னை எழுப்பு என்று சொல்லிவிட்டுப் படுத்துக் கொண்டான். டாக்டரிடம் போய் உடம்பைக் கவனிக்கலாம் என்று எலினா சொன்னதற்கு அவன் ஒப்புக் கொள்ளவில்லை. எலினாவும் சற்று நேரத்திற்கெல்லாம் உறக்கத்திலாழ்ந்தாள்.

தூங்கும்பொழுது விபரீதமான கனவு ஒன்று கண்டாள் எலினா. “ சாரிட்ஸனோ ஏரியில் ஒரு படகு. அந்தப் படகில் அவள். அவளைச் சுற்றி அன்னியர் சிலர். யாரும் படகைச் செலுத்தவில்லை. ஆனால் படகுதானாகவே போய்க் கொண்டிருக்கிறது. ஏரியின் கரைகள் சடக்கென்று மறைந்தன. கரையற்ற கடலாக மாறிவிட்டது. பேரலையின் ஊடே படகு நகர்ந்தது. அத்தனை பேர்களும் கதறினார்கள். அவர்களிடையே அவள் தகப்பனாரும் இருப்பதைக் கண்டாள். மீண்டும் பேரலையின் ஆரவார எழுச்சி. ஓரே

பனிக்கட்டி மயம். இப்பொழுது அவள் படகிலில்லை. ஒரு வண்டியில் போய்க் கொண்டிருக்கிறாள். அவள் பக்கத்தில் ஒருத்தி இருக்கிறாள். அவள்தான் ' காட்யா ' செத்தவள் எப்படிப் பிழைத்து வந்தாள் என்று எலிஞ ஆச்சரியத்துடன் அவளைப் பார்க்கிறாள்.

நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம், என்று எலிஞ கேட்கிறாள். காட்யா பதில் சொல்லவில்லை. அதோ —அதோ அந்த இடத்தில்தான் இன்ஸரோவை அடைத்து வைத்திருக்கிறார்கள். அவரை நான் விடுவித்தாக வேண்டும் என்று எலிஞ கத்துகிறாள். வண்டி திடீரென்று விழுந்து விடுகிறது. காட்யா இடி இடியென்று சிரிக்கிறாள். எலிஞ! எலிஞ !! என்று தொலைவிலிருந்து கூப்பாடு கேட்கிறது.

' எலிஞ, நான் சாகிறேன் ! என்று கூக்குரல். அலறிப் புடைத்துக் கொண்டு அவள் எழுந்து, அவனை அணைத்துக் கொண்டாள். ஆனல் அதற்குள் எல்லாம் முடிந்து விட்டது ! ' போய் வருகிறேன் ' என் அன்பே, என் தேசமே நான் போய்வருகிறேன் ' என்று கூறிக்கொண்டே இன்ஸரோவ் சோபாவின்மீது மல்லாந்து விழுந்து விட்டான். கனவின் பலன், உண்மையில் நிகழ்ந்துவிட்டது.

' உதவி !' என்று அலறிக்கொண்டே வெளியே ஓடி வந்தாள். அதே சமயம் ஒரு மனிதன் கம்பீரமான உருவமும் நடையுங் கொண்டவனய் வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும், அவள் "நீங்கள் தானே ரெண்டிட்ச். ஐயோ ...திடீரென்று அவர் மல்லாந்து விழுந்துவிட்டார். சற்று நேரத்துக்குமுன் கூட என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். " என்று பதட்டத்துடன் எலிஞ சொன்னதும், அவன் வேகமாகச் சென்று ஒரு டாக்டரை அழைத்து வந்தான். டாக்டர் வந்து பரீக்ஷை செய்துவிட்டு, அவன் இறந்துவிட்டான் என்று அறிவித்துப் போய்விட்டார். இதைக் கேட்டவுடன் மேலே எதுவும் பேசாமல் அவள் அப்படியே ஓய்ந்துபோய், சிலைபோல் உட்கார்ந்துவிட்டாள்.

அந்த இரவு பூராவும் அவள் அப்படியே இருந்தாள். மறுநாள் பொழுது விடிந்த பிறகும், அந்த இடத்தை

விட்டு நகராது கிடந்தாள். எதிரே கொஞ்ச தூரத்தி லிருந்த ஜன்னல் அருகில் ரெண்டிட்ச் நின்று கொண்டிருந் தான். பக்கத்தறையில் இன்ஸரோவின் உடல் கிடத்தப் பட்டிருந்தது. அன்னுவாஸிலிவ்னுவிடமிருந்து அவ ளுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. இன்ஸரோவுக்கும் நிகோலே ஆர்ட்டமெய்விட்ச்சிடமிருந்து கடிதம் வந்திருந் தது. ஒரு மாதம் வந்து தங்கிப் போகும்படி இரு கடிதங் களும் அவர்களை வேண்டின!

ரெண்டிட்ஸ் இன்ஸரோவைப் போலவே நாட்டுக் குழைப்பவன். ஆக்கிரமிப்பாளர்களான துருக்கியர்களை யும் ஆஸ்திரியர்களையும் வெறுப்பவன். இன்ஸரோவின் அந்தரங்க நண்பன். முதலில் எலினுதான் பேசினுள். 'நீங் கள் வெனிஸில் எவ்வளவு காலம் தங்கப் போகிறீர்கள்!' என்று கேட்டாள். அவள் குரல் கம்மியிருந்தது. அவளு டைய களையிழந்த முகம்போல, அந்தக் குரலிலும் உயி ரில்லை. ஆனுல் கொஞ்சம் தைரியமிருந்தது.

"ஒரே நாள் தான். பிறகு ஸாராவுக்குப் போகிறேன். என்னுடைய நாட்டாருக்கு நான் இந்தத் துக்கச் செய்தி யைத் தெரிவிக்கவேண்டும். அவர்கள் அவன் வரவை ஆர் வத்துடன் எதிர்பார்த்துக்கொண் டிருப்பார்கள். இன்ஸ ரோவைத்தான் அவர்கள் ஆதாரமாக நம்பியிருந்தார்கள். இப்பொழுது நாட்டுக்கு வழிகாட்டி நடத்த எவருமில்லை.

"அவரைத்தான் ஆதாரமாக நம்பியிருந்தார்கள்!' என்று அவள் திருப்பித் தனக்குத்தானே சொல்லிக்கொண் டாள். ரெண்டிட்ஸ் அவள் தானே பேசிக் கொள்வதைப் பார்த்து, மெதுவாக நீங்கள் அவரை எப்பொழுது புதைப் பீர்கள்?

"நாளைக்கு, என்று அவளும் நிதானமாகவே சொன் னுள்."

"நாளைக்கானுல் நானும் இருக்கிறேன். அவ்ளை ஸ்லா வனிக் பூமியில் புதைப்பதுதான் எனக்கு உசிதமாகத்

தோன்றுகிறது. அவர் ஆத்மா அப்படிச் செய்தால்தான் சாந்தியடையும் என்றான் பெண்டிட்ஸ்."

"அப்படியானால் அவர் உடலுடன் என்னையும் அங்கு கொண்டுபோய்ச் சேர்க்க உங்களால் முடியுமா?"

"முடியும். ஆனால் ரொம்பவும் சிரமம். அதிகாரிகளுடன் விவகாரம் செய்தாக வேண்டும். தவிரவும் உங்களை நான் எப்படித் திரும்பிக் கொண்டு வருவது?"

"திரும்பி என்னைக் கொண்டுவர நீங்கள் சிரமப்பட வேண்டாம். நான் அதை எப்படியாவது சமாளித்துக் கொள்ளுகிறேன்." என்று அவள் கூறியதும், அவன் இரண்டு மணி நேரத்தில் திரும்பி வருவதாகக் கூறிவிட்டு வெளியே போனான்.

அவன் போனதும் எலினு தனிமையில் துக்கத்தை அனுபவித்தாள். எதிரே கிடத்தப்பட்டிருக்கும் பிணத்தையும், கடவுள் தனக்கு ஏற்படுத்தியிருக்கும் கஷ்டத்தையும் நினைத்துப் பார்த்து மனம் குமுறினாள். கடவுளை அவள் முன்போல் பிரார்த்திக்கவில்லையானாலும், அவரை நம்பிய தனக்கு நேர்ந்த துக்கத்துக்காக அவரைத் திட்டவும் இல்லை.

குறிப்பிட்ட நேரத்தில் பெண்டிட்ஸ் வந்து சேர்ந்தான். இன்னும் இரண்டொருவர் உதவியுடன் அவன் அவளையும் இன்ஸரோவ் உடலையும் கப்பலுக்குக் கொண்டு போனான். அந்த இரவில் இரகசியமாகக் கப்பல் புறப்பட்டு விட்டது. மிகுந்த வருத்தத்தினிடையே புயலையும் சுழலையும் சமாளித்துக் கொண்டு கப்பல் போகவேண்டியிருந்தது. கப்பல் கரைபோய்ச் சேருமென்று கூட அநேகருக்குச் சந்தேகம் உண்டாய்விட்டது.

எலினு, வியன்னவிலிருந்து போய் மூன்று வாரங்களுக்குப் பிறகு, அவளுடைய பெற்றோர்களுக்கு அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதற்குப் பதில் எலினு ஒரு கடிதம் எழுதினாள். அதில், "என் அன்பார்ந்த

பெற்றோர்களான, உங்களுக்கு என் கடைசி வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இனி என்னை நீங்கள் காண முடியாது. நேற்றுத்தான் என் கணவர் காலமானார். அவருடைய உடலுடன் இன்று நான் ஸாராவுக்குப் போகிறேன். அவர் நாட்டில்தான் அவரைப் புதைக்கப் போகிறேன். அந்த நாடுதான் இனி எனது நாடு. அங்கே மக்கள் சுதந்தர வாழ்வை, சுகவாழ்வை வேண்டிப் புரட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். பெரிய யுத்தமும் வரப் போகிறது. நான் அங்குள்ள பெண்கள் சிகிச்சைப் படையில் சேர்ந்து நாட்டுப் பணியாற்றத் தீர்மானித்திருக்கிறேன். அவர் இறந்தாலும் அவர் லட்சியம் இருக்கிறது. நான் அதற்காக உழைக்கவேண்டும். விதி என்னிடமிருந்து அவரைப் பிரித்துவிட்டது. எனக்கு இனி சுகம் என்பது இல்லை. அப்படி இன்பம் என்று ஒன்று இருந்தாலும் நான் அதைச் சாவில்தான் அடையமுடியும். ஆகவே, என் கடைசி வந்தனத்தை ஏற்று மன்னித்தருளக் கோருகிறேன். எல்லோருக்கும் என் அன்பு,” இப்படிக்கு,

‘ எலினு ’

என்று விவரமாகக் கடிதம் எழுதியிருந்தாள்.

* * *

காலவேகத்தின் கணக்கில் ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன. என்றாலும், எலினுவைப் பற்றி எந்த விவரமும் தெரியவில்லை. அவளுடைய தகப்பனாரான நிகோலை ஆர்ட்டமெய்விட்ச், யுத்தம் நின்றதும் எங்கெங்கேயோ சென்று தன் மகளைத் தேடினார். எவ்வளவு தேடினாலும் சென்றவள் திரும்புவதேது ? அவர் முயற்சி தோல்வியடைந்தது.

இன்னும் அன்னுவாஸிலிவ்னு உயிருடன்தான் இருக்கிறாள். மகளைப் பிரிந்த துக்கமே அவளுக்குச் சித்திரவதை தரும் வியாதியாகிவிட்டது. நிகோலை ஆர்ட்டமெய்விட்ச் கிழவராகி விட்டார், தலை நரைத்துவிட்டது. அகஸ்டினு கிறிஸ்டியனுவையும் விட்டுத் தொலைத்துவிட்டு, எப்

பொழுதும் யாரையாவது திட்டுவது என்று தீர்மானித்த வர்போல் நடந்துகொண்டார். குர்னடோவ்ஸ்கி, ஸோயாவை மணந்துகொண்டு குஷியாகத்தான் இல்லறம் நடத்துகிறுர்!

பெர்ஸனேவ் ஹெய்டல்பர்க்கில் இருக்கிறுன். சர்க்கார் செலவில் மேல்படிப்புக்காக அயல்நாடுகளுக்கு எல்லாம் அனுப்பப்பட்டான். பின்பு, அவன் ஒரு சிறந்த பேராசிரியராகி விட்டான் இப்போது, பெர்லின், பாரிஸ் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று தன் ஆராய்ச்சிகளை அவன் செய்து வந்தான். அவனுடைய ஆராய்ச்சிகளுக்கு மக்களிடையே நல்ல மதிப்பு. ஷுபின் ரோம் நகருக்குச் சென்று, அங்கு தன் தொழிலை செவ்வையாகச் செய்து பேரெடுத்தான். சர்வ தேசங்களிலும் அவர் சிறந்த சிற்பிகளில் ஒருவன் என்று பெயர் எடுத்துள்ளான். ஒரு காலத்தில் அவன் உவார் ஐவனேவிட்சுடன் என்ன பேசிக்கொண்டிருந்தானே, அது ஓரளவு செயல் முறையில் நிகழ்ந்துவிட்டதல்லவா? ஆனல் உவார் ஐவனேவிட்ச் தன்னுடைய மேலான பழக்க வழக்கங்களான மதுபானம், விசித்திர நடைநொடி பாவனைகள் எதையும் விடாமல் 'அன்று இருந்த மேனிக்கு அழிவில்லாமலிருந்தான் அந்த அப் பாவி மனிதன்!' ஷுபின் அடிக்கடி உவார் ஐவனேவிட்சுக்குக் கடிதம் எழுதாமலிருப்பதில்லை. சமீபத்தில் அவன் எழுதிய கடிதம் ஒன்றில், "எலின கலியாண விஷயம் அறிவிக்கப்பட்டபோது, நான் உன்னிடம்" "நம்மிடையே (உண்மையான) மனிதர்கள் இருப்பார்களா? என்று கேட்டது நினைவிருக்கலாம்." நீயும் "இருக்கலாம் என்று பதில் அளித்தாய். ஆனல் இன்று மறுபடியும் அதே கேள்வியைக் கேட்கிறேன், பதில் சொல் பார்க்கலாம்" என்று எழுதியிருந்தான். உவார் ஐவனேவிட்ச் பதில் அளிப்பதற்குமாருகக் கைகளைச் சட்டைப் பைகளில் சொருகியபடி எங்கோ தொலைவில் பார்வையைச் செலுத்தி மௌனம் சாதித்தான். அதைத் தவிர, அவனல் வேறு என்ன பதில் சொல்ல முடியும்?